Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான
உதிரிப் பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலர்: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஆடு வைகாசி மீ 14 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 21 (27-05-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 56

### யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கனேடியத் தூதுவர் கரோலின் மக்கஸ்கி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு நேற்று விஜயம் செய்தார்.

தம் செயலாளர் திரு. ரெம்பின் சகிதம் யாழ். நகர் வந்துள்ள கனேடியத் தூதுவர் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்திய சாலைக்கு விஜயம் செய்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

வடமாகாண புற்றுநோய் நிவாரண சங்கத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பளை புற்று நோயாளர் விடுதி, வைத்திய சாலை ஆகிய இடங்களுக்கும் கனேடியத் தூதுவர் சென்றார்.

நேற்று முன் தினம் ஊர்காவற்துறைக்கும் அவர் விஜயம் செய்தார். [இ-3]

### பல்கலைக்கழக வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று மூன்றுவது நாளாக தமது வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்

நேற்றும் பல்கலைக்கழகத்தின் அனைத்து அலுவல்களும் ஸ்தம்பித்தன' (இ-10)

# தமிழர்களின் தனித்துவம் பேணப்பட வேண்டும்

## மக்கள் அபிலாஷைகளை அடைய வழி செய்யும் தீர்வு அவசியம்

### கனேடியத் தூதுவர் கரோலின் பேட்டி

யாழ்ப்பாணம், மே 27

**தமிழ் மக்களின் இன, கலாசார தனித்துவம் பேணப்படவேண்டும். அவர்களின் அமைதிக்கான தேடுதலில் கனேடியர்களாகிய நாம் அவர்களுடன் ஒன்றுக நிற்கிறேம்.**

**உங்கள் பிரச்சினைக்கான தீர்வின் பெரும்பகுதி மக்களிடமிருந்தே வரவேண்டும்.**

ஐக்கியப்பட்ட இலங்கையில், சகல தரப்பு மக்களும் தமது மொழி, கலாசார அபிலாஷைகளை எய்த வழி செய்யும் தீர்வு ஏற்படவேண்டும் என்பதே கனேடியர்களாகிய எமது அவாவாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த இலங்கைக்கான கனேடியத் தூதுவர் கரோலின் எம். மக்கஸ்கி சஞ்சீவிக்கு அளித்த சிறப்புப் பேட்டியின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்களைச் சந்திக்கவும், அவர்களுடன் உரையாடவும், வடக்கின் நிலைமையை நேரில் பார்த்தறியவுமே, ஒரு தூதுவர் என்ற முறையில் தாம் இந்த விஜயத்தை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களுக்கும் தாம் மேற்கொண்ட பயணங்கள் இங்கு உள்ள நிலைமையைப் புரிந்து கொள்ள தமக்குப் பெரிதும் துணை புரிந்ததாக அவர் மேலும் சொன்னார்.

இலங்கை, கனடாவின் இரண்டு விஷயங்களைக் கவனத்தில் எடுக்கலாம். கனடா இரண்டு ஆரம்பக்காலக் கலாச்சாரங்களை, (ஆங்கிலம்-பிரேஞ்சு) உடையதோர் நாடு. அது ஒரு 'இரண்டு மொழி' நாடு. கனடாவில் எவரும் இந்த இரண்டு மொழிகளில் ஒன்றைப் பேசவோ, எழு

(6ஆம் பக்கம் பார்க்க)

### சம்பள உயர்வு அறிவிப்பு

பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் (கல்வித்துறை சாராத) ஊழியர்களுக்கு குறிப்பிடத்தக்க சம்பள உயர்வை வழங்கப் பல்கலைக்கழக மானியக் குழு இணங்கியுள்ளது.

நேற்றுப் பிற்பகலில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் சொன்னார்.

சராசரி 450 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும் ஆகக் குறைந்த தரமான 14 ஆவது தரத்தில் உள்ள ஊழியர் ஒருவர் இப்போது 2135 ரூபா மாதாந்தச் சம்பளம் பெறுவார்.

ஜூலை மாதம் தொடக்கம் புதிய சம்பளம் வழங்கப்படும் என்றும் இவ்வருடம் ஜனவரி முதல் அமுலுக்கு வரும் என்றும் மானியக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

### எழுத்துச் சீர்திருத்தம் : இலங்கையிலும் அமுலாக்க அறிஞர் குழுவினர் சிபார்சு!

கொழும்பு, மே 27

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை இலங்கை அரசும் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அறிஞர்கள் - கல்விமான்கள் குழு சிபார்சு செய்துள்ளது.

இக்குழுவின் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி வளர்ச்சித் துணை அமைச்சர் திரு. பி. தேவராஜ் தலைமையில் நடந்தது.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தமிழ்க் கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், தகவல் தொடர்புச் சாதனங்களில் பணியாற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் உட்பட சுமார் 30 பேர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் அரசாங்கங்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மேற்கு ஜேர்மன் செல்ல முயன்ற 5 யாழ். தமிழர் தடுத்து வைப்பு

### சப்பாத்துக்குள் டாலர் நோட்டுகள்

கொழும்பு, மே 27

மேற்கு ஜேர்மனி செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 5 தமிழர்கள் சுங்கத் திணைக்கள் அதிகாரிகளால் கடந்த வியாழக்கிழமை தடுத்துவைக்கப்பட்டனர்.

அணிந்திருந்த சப்பாத்துக்களுக்குள் 3 ஆயிரத்து 750 அமெரிக்க டாலர் பணத்தை ஒளித்துவைத்துக் கடத்த முயன்றபோதே இவர்கள் தடுத்துவைக்கப்பட்டனர் என்று கொழும்புச் செய்தி தெரிவிக்கிறது.

இந்த 5 தமிழரில் 3 ஆண்கள், 2 பெண்கள் ஆவர்.

ஒவ்வொருவரும் தாங்கள் அணிந்திருந்த சப்பாத்துக்குள் 750 அமெரிக்க டாலர் நோட்டுக்களை ஒளித்து வைத்திருந்தனராம்.

அவர்களிடம் 5 ஜேர்மன்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி 3 வாரங்களில் அறிவிப்பு வரும்

### புலிகளுடன் 2ஆம் கட்டப் பேச்சுக்கு ஏற்பாடு

கொழும்பு, மே 27

வடக்கு-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி இன்னும் மூன்று வாரங்களில் ஜனாதிபதி பிரேமதாஸ அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார்.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள்-இலங்கை அரசுப் பேச்சுக்கள் பற்றியும் அவர் தகவல் தெரிவித்தார்.

பேச்சில் விடுதலைப் புலிகளே வடக்கு-கிழக்கு நிலைமை பற்றி விளக்கினர். அரசின் சார்பில் பதில்கள் எதுவும் அளிக்கப்படவில்லையா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சொன்னதாவது:

வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து அவர்கள் விளக்குகின்றனர். அவர்கள் கூறுவதை செவிமடுக்க வேண்டியது எமது கடமை. எவ்வளவு காலம் விளக்குகின்றனரோ அதுவரை நாம் கேட்போம்.

பேச்சு நடத்த வந்தவர்களை இத்துடன் போதும்; போங்கள் என்று சொல்ல முடியுமா?

முதற் கட்டப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு இவ்வாரம் விடுதலைப் புலிகள் குழு தமது தலைவருடன் கலந்தாலோசனை நடத்த குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல உள்ளனர்.

#### 2ஆம் கட்டப் பேச்சுக்கு ஏற்பாடு

விரைவில் அடுத்த கட்டப் பேச்சு நடைபெறும். அதற்கான நிகழ்ச்சி நிரல் தயாராகி உள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களைப் பொறுத்தே சர்வகட்சி மாநாடு நடப்பது நிச்சயிக்கப்படும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவதற்குச் சில முக்கிய விஷயங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

அவற்றை அடுத்த வாரம் வெளியிடவுள்ளோம் —

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

## ரயில், பஸ் சேவைகள் இன்றுமுதல் வழமை போல்

### வவுனியா நேற்றும் ஸ்தம்பிதம்

வவுனியா, மே 27

இன்று சனிக்கிழமை தொடக்கம் யாழ் -கொழும்பு, கொழும்பு - யாழ் தனியார் பஸ் சேவைகளும் ரயில் சேவைகளும் வழமைபோல் இடம்பெற அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக வவுனியா ஈ. என். டி. எல். எவ். அறிவித்துள்ளது.

நண்பகல் 12 மணி வரை மூடப்பட்டு வந்த நகரக் கடைகளும் முழுநாளும் திறக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

பொதுமக்களின் தேவைகளை முன்னிட்டு, நகைகளை மீளளிக்கும் பணிகள் மற்றும் ஸ்தம்பிதமடைந்திருந்த நடவடிக்கைகளை திங்கள்முதல் தளர்த்தியுள்ளதாக இயக்கத்தின் பிரமுகரும் முல்லைத்தீவு மாகாணசபை உறுப்பினருமான திரு. ஜே. எவ். எக்ஸ்' ஜெயசீலன் தெரிவித்தார்.

இதன் படி திங்கட்கிழமை 29 ஆம் திகதி தொடக்கம் சகல அரச அலுவலகங்கள் வங்கிகள் என்பன செயற்படும் என எதிர்பார்க்கப்படு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ரயில் இன்று வரும்

கொழும்பு, மே 27

கொழும்பு - கோட்டைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான யாழ் தேவி ரயில் சேவை இன்று இடம்பெறும் என்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன,

இன்று காலை 5.45 க்கு கோட்டையில் இருந்து புறப்படும் யாழ்தேவி ரயில் பிற்பகல் 2.45 க்கு யாழ்ப்பாணம் வந்தடையும்.

நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் இந்த ரயில் இரவு 9-45 க்கு கோட்டையைச் சென்றடையும். ]அ-எ]

## இலங்கை - இந்திய அரசுகள் இணைந்து செயற்படுவதை தடுப்பது ஒப்பந்தத்துக்கு முரணாகும்

### பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

கொழும்பு, மே 27

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைவரின் பாதுகாப்புக்கும் இந்திய அரசும் இலங்கை அரசும் இணைந்து செயற்படும். இது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் இரண்டாம் ஷரத்து 16 இ பிரிவில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஷரத்தை நடைமுறைப் படுத்துவதற்கு போடப்படும் தடைகள் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை தெட்டத்தெளிவாக மீறும் செயலாகும்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தைப் பயன்படுத்துவது இந்திய-

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட நிர்வாகத்துக்கு பொறுப்பாக அரசியல் இணைப்பாளர்

### முருகநேசன் நியமிக்கப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளராக மாகாண சபை உறுப்பினரான திரு. ஏ. முருகநேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தின் சட்டம், ஒழுங்கு சிவில் நிர்வாகத்துக்கு இவர் முழுப்பொறுப்பாக இருப்பார்.

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் நேற்றுயாழ். அஷோக் ஹோட்டலில் நடத்திய மாநாடு ஒன்றில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் யாழ். அரசாங்க அதிபரும் மற்றும் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்கள், கூட்டுத் தாபனங்களின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நேற்றைய மாநாட்டில் பல்வேறு விடயங்கள் ஆலோசிக்கப்பட்டன.

யாழ். செயலகத்தை வாரம் 5 நாள் இயங்க வைப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

மாவட்ட அரசியல் இணைப்பாளர் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 8 மாவட்டங்களிலும் மாவட்ட அரசியல் இணைப்பாளர்களை நியமிக்கும் திட்டம் குறித்து முதலமைச்சர் சமீபத்தில் மாகாண சபைக் கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

முதலமைச்சரின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழேயே இது அமுல் செய்யப்

(6-ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டர்படை அணிவகுப்பு

யாழ்ப்பாணம், மே 27

குடி மக்கள் தொண்டர் படையின் பயிற்சி முடிந்து வெளியேறும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வார்.

குடி மக்கள் தொண்டர் படையின் கொமாண்டர் திரு. ஈ. ஆனந்தராஜாவும் வைபவத்தில் கலந்துகொள்வார்.

### 14 கறுப்பருக்கு மரண தண்டனை

கேப்டவுன், மே 26

வெள்ளையரல்லாத பொலீஸ்காரர் ஒருவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வெள்ளையரல்லாத 14 பேருக்கு நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1985 நவம்பரில் நடந்த இனக் கலவரத்தின்போது இக்கொலை இடம்பெற்றது. இது சம்பந்தமாக 25 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதில் 13 ஆண்களுக்கும் 1 பெண்ணுக்கும் மரண தண்டனை கேப்டவுன் நீதிமன்றத்தினுல் விதிக்கப்பட்டது.

எஞ்சிய 11 பேருக்கு அடுத்த வாரம் தண்டனை வழங்கப்படும். (இ-எ)

### யாழ் நகரைப் பார்வையிட்ட பின்

## அமெரிக்க உதவிக் குழு நேற்று மன்னருக்குவிஜயம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ் நகருக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க உதவிக் குழு அதிகாரிகள் நேற்று மன்னருக்கும் விஜயம் செய்தனர்.

யாழ் நகருக்கு வியாழக்கிழமை காலை விஜயம் செய்த அமெரிக்க உதவிக்குழு அதிகாரிகளான திரு. எஸ். ஹனி, திரு. சீ. ஹனி ஆகியோர் யாழ் மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் சென்று ஐ.நா, அகதிகள் ஸ்தானிகராலயத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

ஊர்காவற்றுறை உட்பட பல இடங்களுக்கும் இக் குழுவினர் சென்று பார்வையிட்ட பின் நேற்றுக் காலை மன்னருக்குச் சென்றனர். (இ-3)

### சுபநேரம்

27 — 05 — 1989
வைகாசி — 14
சனிக்கிழமை

சுபநேரம்:
02. 52 முதல் 04. 22 வரை
ராகுகாலம்:
08.52 முதல் 10.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### கோர்பச்சேவ் தெரிவு

மாஸ்கோ, மே 26

சோவியத் யூனியனின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக 56 வயதான திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்,

2,250 உறுப்பினர்கள் கொண்ட. புதிய சோவியத் நாடாளுமன்றத்தில் திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஷாஓஸியாங் வீட்டுக் காவலில்

பீகிங், மே 26

சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் ஷாஓஸியாங் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்று பீகிங் செய்தி நேற்றுத் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

மிகவும் நல்லநிலையில் உள்ள M B. 5. மோட்டார் சைக்கிள் சுறுப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. நாதன் No 16/3 ஈச்சமோட்டை விதானையார் வீதி, யாழ்ப்பாணம். (586)

ஒரு நல்ல தனி இன அல்சேசன் (Alsatian) 2½ மாத பெண் நாய்க்குட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 435/15 (பழைய இல. 179/2) கோவில் வீதி நல்லூர், (திருநெல்வேலி சிவன் வீதிச் சந்திக்கு அருகாமையில்) (11074)

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைச்கு உண்டு. Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [571]

இரண்டு மாதம் நிறைந்த பூச்சி அகற்றப்பட்ட வெள்ளை பொமனேறியன் ஆண்/பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 12, சுச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (579)

### காணி விற்பனைக்கு

உரும்பராய் வடக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலுக்குப் பின்னல் 250 யார் தூரத்தில் கிணற்றுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு 48, ஸ்ரீ வெங்கடேசன் வீதி (பெருமாள் கோவில் தெற்கு) யாழ்ப்பாணம். (580)

### FOR SALE

National T. V. 20'' Colour Sony - 20 60 N.E.C. 17'' B/W J.V.C. Deck HR 3330 Tecknick Box. S.T L Video Club No 3, Model Market, Thirunelvely. (582)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, சுறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

தாய இன Golden Comet பேட்டுக்குஞ்சு, Christhombu, புறயிலர் குஞ்சுகள் 28-05-89 இல் விநியோகிக்கப்படும். தடுப்பூசிஏற்றப்பட்ட Golden Comet. பேட்டுக்குஞ்சுகளைப் பதிவு செய்து இரண்டுகிழமைகளில் விநியோகிப்போம். கால்நடைவளர்ப்போர்சங்கம் சுன்னாகம் கிளை (பயிர்செய்கை உத்தியோகத்தர் அலுவலகம்) K.K.S. வீதி, சுன்னாகம். (11043)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். பிறவுண் சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb புரொயிலர் குஞ்சுகள் 30 05. 89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல 9, சுந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [570]

### NEW CITY TRADERS

Daytron T. V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas cooker, Hotplate, Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் றெக்கோடர்: ஒடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [சி/2505]

### தேவை

வெயிட்டர் வேலைக்கு நன்கு அனுபவம் வாய்ந்தவரும் குசினிவேலையில் அனுபவமிக்கவரும் தேவை. தொடர்பு றிக்கோ ஹோட்டல் 37° ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [584]

### மணமகன் தேவை

யாழ். சைவ வேளாள குல 31 வயது உடைய வெளிநாட்டு வங்கியில் பணிபுரியும் செவ்வாய்க்குற்றமற்ற பெண்ணுக்கு வங்கி- அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அல்லது வெளிநாட்டில் நிரந்தர வேலை உடைய மணமகன் தேவை. தொடர்பு: ஐ நடராசா, 90/2, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். [567]

### மணப்பெண்கள் தேவை

ஜேர்மனியில் ஸ்கொலர்சிப் மெடிசின் செய்யப்போகும் 27 வயது இந்து வேளாள மணமகனுக்கும், 27 வயது C.T.B. சாரதிக்கும், 30வயது அரசாங்க சேவையருக்கும், 37 வயது கோவியரின வங்கியாளருக்கும், 27 வயது Technical மணமகனுக்கும், தேவை. மங்கள ஏஜன்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (11071)

### ஆசிரியை தேவை

சுன்னாகத்தில் உள்ள கல்வி நிலையம் ஒன்றிற்கு 8 ஆம் வகுப்பு வரை ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய பெண் ஆசிரியை தேவை. கல்வித் தகைமை அவசியமென்று இல்லை. முன் அனுபவம் முக்கியம். சகல விபரங்களுடனும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். S. Sabanayagam, 164 StaTionRoad, Chunnakam. (583)

### பெண் நெசவாளர் தேவை

மின் தறி நெசவாலைக்கு அனுபவமிக்க பெண் நெசவாளர், வாப்பர் உடன் தேவை. நேரில் வரவும்: ஸ்ரீ ராஜ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ், வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி. (வட்டு இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்) (581)

### சமையற்காரர் தேவை

பலாலி ரோட்டில் திறக்கப் படவிருக்கும் தேனீர்க் கடைக்கு இடியப்பம், தோசை, ரொட்டி வேலை தெரிந்த சமையற்காரர்களும் 15 வயதிற் குட்பட்ட வெயிற்றர்களும் தேவை கீழ்க்காணும் விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும், எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறிப்பிடவும். விளம்பர இல. 64, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [11035]

### உங்கள் தேவைக்கு

காணி, வீடு, கடை விற்பதற்கு வாங்குவதற்கு வீடு கடை வாடகைக்கு கொடுப்பதற்கு வாங்குவதற்கு தொடர்பு கொள்ளவும். S. குபேரன் No-469 நாவலர் ரோட், ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (11058)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: கனகசபை தர்மகுலசிங்கம், 'கணேஸ் வாசா'' வாரிவளவு, காரைநகர் C/o, சித்திதங்கமாளிகை, 213C கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம் [257]

### தபால் மூலம் கல்வி

தபால்மூலம் ஆங்கிலம் பேச வாசிக்க எழுத அல்லது முழு இலக்கணத்துடன் பயில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சுய விலாசம் எழுதி முத்திரை ஒட்டிய நீளத் தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும். இம்பீரியல் இன்ஸ்ரிரியூட், 25, மாட்டின் லேன், யாழ்ப்பாணம். (559)

### பாலர் கல்வி பயிற்சி வகுப்புகள்

பாலர் ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி வகுப்பு பாலர் கல்விக் கழகத்தால் ஞாயிறு தோறும் இலவசமாக நடைபெறுகிறது. விரும்புவோர் நேரில் வரவும் ஞானக் குழந்தை இல்லம் 49/5 யாழ் ரோட், யாழ்ப்பாணம். (11036)


# வீடியோ படங்கள் இறக்குமதியை கட்டுப்படுத்தச் சட்டம் வருகிறது

கொழும்பு, மே 27

வீடியோப் படங்களின் இறக்குமதி, அவற்றைத் திரையிடுதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த சட்டம்ஒன்றை அரசு கொண்டுவர உள்ளது.

இத்தகவலை தகவல்துறை துணை அமைச்சர் திரு. ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்தார்.

வீடியோ படங்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப் படும்.

தணிக்கை சபையின் அனுமதி இன்றி விடியோப் படங்களை எவரும் காட்டமுடியாது.

இது தொடர்பாக விரைவில் சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும்

வீடியோ விற்பனை நிலையங்களில் தணிக்கை சபையால் அங்கீகரிக்கப்பட்ட படங்களையே விற்பனை செய்ய முடியும்.

இவ்விதிகளை மீறுவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க புதிய சட்டம் இடமளிக்கும் என்று துணை அமைச்சர் திரு ரணசிங்கா தெரிவித்தார். [ஓ-எ]

## உதவி ஆசிரியரின் சிரமங்களை அதிபர்கள் உணர வேண்டும்

### முன்னாள் கொத்தணி அதிபர் உரை

பண்டத்தரிப்பு, மே 27

''பாடசாலைகளும் சமுதாயமும் மேன்மை அடைய அதிபர்கள் உதவி ஆசிரியர்களின் சிரமங்களையும் உணர்வுகளையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.''

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், வட்டுக்கோட்டை கொத்தணி முன்னாள் அதிபருமான திரு. என். வேலுப்பிள்ளை தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அசிரிய நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. சு. நாகராசா பாராட்டுரை வழங்குகையில், ஒய்வு பெற்றுச் செல்லும் அதிபரின் வெற்றியின் இரகசியம் அவருடைய புரிந்துணர்வு ஆகும்.

ஆசிரியர் மாணவர்களின் மனநிலை அறிந்து அவர்களுடையவல்லமைகளை வளர்த்து அவர்களைச் சமுதாயத்துக்கு பயன்படச் செய்வதையே தமது குறிக்கோளாகக் கொண்டு அவர் செயற்பட்டார் என்று கூறினர், (க-120)

## கொத்தணி அமைப்பு மூலம் கல்வியில் பாரிய மாற்றம்

### நெடுந்திவுக் கொத்தணி அதிபர் கூறுகின்றார்

நெடுந்தீவு, மே 27

'பல பாடசாலைகளைக் கொண்ட கொத்தணி அமைச்சின்மூலம் கல்வி முறையில் பாரிய மாற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனுல் பாடசாலைகளின் வளர்ச்சி குறித்த பலரின் சிந்தனைகள் ஒருங்கிணைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது'

நெடுந்திவு கொத்தணிப் பாடசாலை விளையாட்டுப் போட்டிநிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கொத்தணி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினர்.

போட்டிகளில் கலந்து கொண்ட உடற்பயிற்சி அதிகாரி திரு. எஸ். அருணகிரிராஜா, நெடுந்திவு மாணவர்கள் தேசிய மட்டத்திலான போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெறுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். புலேந்திரன் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி. கே. புலேந்திரன் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

திரு. வி. சுப்பிரமணியம் நன்றி கூறினர்.

சிவப்பு இல்லம் முதலாம் இடத்தையும் பச்சை இல்லம் இரண்டாம் இடத்தையும் மஞ்சள் இல்லம் மூன்றும்இடத்தையும் பெற்றன. (க-111)

## தொண்டமனாறில் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 27

தொண்டமனாறு மலியத்தனையில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற இராணுவ சுற்றிவளைப்பின் போது இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அம்பலவாணர் உதயகுமார் (19 வயது) செல்வநாயகம் பாலேந்திரா (19 வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த இளைஞர்களைக் கைது செய்த இராணுவத்தினர் அண்மையில் உள்ள ஒரு வீட்டினுள் புகுந்து அவ்வீட்டின் மேல்புற சீலிங் பலகைகளைச் சேதப்படுத்திச் சென்றுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் வல்வை பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ச - 160)

## சாரதிகள் நியமனத்தை நிறுத்த சுகாதார அமைச்சு உத்தரவு

வவுனியா, மே 27

வவுனியா சுகாதாரத் திணைக்களத்திற்குத் தேவையான சாரதிகளை நியமனம் செய்வதை இடைநிறுத்திவைக்குமாறு சுகாதார அமைச்சு இங்குள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் சாரதிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது தெரிந்ததே.

வவுனியா சுகாதாரப்பகுதிக்கு 5 சாரதிகளும், முல்லைத்திவுக்கு இருவரும், மன்னருக்கு ஒருவருமாக எட்டுச் சாரதிகளைத் தகுதி அடிப்படையில் தெரிவு செய்வதற்காகவே நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

இந்த நேர்முகப் பரீட்சைகளில் 400க்கும் மேற்பட்டவர்கள் தோற்றினர். தகுதி அடிப்படையிலான திறமை மிக்கவர்களும், இ. போ. ச. பகுதியில் பணி புரிபவர்களும் கூட இதில் கலந்துகொண்டனர்.

கடுமையான போட்டி நிலவியதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் அமைச்சின் தடையுத்தரவையடுத்து சாரதிகளைத் தெரிவுசெய்யும் பணிகள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன. (இ-164)

# அரசின் இலவச மதிய போசனம் மாணவர் கல்விக்கு உதவுகின்றது

### வவுனியா பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

வவுனியா, மே, 27

''மாணவர்கள் சாப்பிடாமல் வகுப்புகளுக்கு வருவதால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. பாடசாலை மாணவர்களின் வரவை அதிகரித்து அவர்கள் உரிய முறையில் கற்பதற்கான நிலையை உருவாக்குவதே இலவச மதிய உணவுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்''

வவுனியா மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்னராஜா, வவுனியா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அதிபர்களின் கூட்டத்தில் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் ',பாடவிதான அமுலாக்கலுக்கான ஒழுங்குகளைச் செய்து ஆசிரியர்களை தமது கடமைகளை ஒழுங்காகச் செய்வதை உத்தரவாதம் செய்து கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது அதிபர்களின் கடமையாகும்'' என்றார்.

கூட்டத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். அருளானந்தம், கல்வித் திணைக்களத்தின் கணக்காளர் மற்றும் கொத்தணி அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள். (க-164)


அளவெட்டி

இறைகுமாரன் நினைவு மலர்

27. 05. 82இல் இறந்த அளவெட்டி இறைகுமாரனைப் பற்றிய இரங்கலுரைகள் சிறு புத்தகமாக வெளிவந்திருக்கின்றன. தேவையானோர் சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். [11057]


## மெய்வல்லுநர் போட்டி

வட்டுக்கோட்டை, மே 27

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டைக் கொத்தணி நிர்வாக அதிபரும் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதிபருமான திரு. எஸ். டாஸ் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை கலந்துகொண்டார்.

மங்கள விளக்கை இளைப்பாறிய அதிபர் திரு. இ துரைச்சாமியும் கொடியேற்ற நிகழ்ச்சியை பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளரும் இளைப்பாறிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளருமான திரு. அ. அரியரத்தினமும் நடத்தினார்கள்.

கொத்தணி அதிபர் திரு. எஸ். டாஸ் பரிசில்களை வழங்கினர். செயலாளர் ஆசிரியர் திரு. எஸ். மகேந்திரன் நன்றி கூறினர். [க]


தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி.

## முக்கிய அறிவித்தல்

### வாக்காளர் இடாப்பு முடிவுறச் செய்தல்

எமது சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான வாக்காளர் இடாப்பு 1989 ஆனி மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுறச் செய்யப்படுகின்றது. எனவே இதுவரை அங்கத்தவராகச் சேராதவர்கள் உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரத்தைப் பூரணப்படுத்திப் பங்குப் பணம் ரூபா ஒன்று (1/-) செலுத்தி அங்கத்தவராகச் சேருமாறு அறியத் தருகின்றேன். உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரத்தைத் தங்கள் கிளைகளில் பெற்றுக்கொள்ளவும். மேலும் விபரங்கள் தேவைப்படின் தங்கள் கிளைகளின் கிளை முகாமையாளர்களுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளவும். 30.06.1989 வரை பங்குப் பணம் ஏற்றுக் கொள்ளப்படும். 30.06.1989 ஆம் திகதியுடன் முடிவடையும் வாக்காளர் இடாப்பைக் கொண்டே கிளைக் குழுத் தேர்தல் நடாத்தப்படும்.

சு. சு. கதிர்காமநாதன்,
செயலாளர்.

தென்மராட்சி மேற்கு ப நோ. கூ. சங்கம்,
கைதடி.
25. 05. 1989. (C/2642)

வெளிவந்து விட்டது!

க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வெளியீடு

''வர்த்தகமும் நிதியும்''
(நடைமுறைவிடயங்கள்)

திருத்திய மூன்றும் பதிப்பு விலை ரூபா 40/-

தொகுப்பு:
தே: ஜெயராமன் B. Com (Hons) M.B.A.
(வர்த்தக முகாமைத்துவதுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

கிடைக்குமிடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஸ்ரீலங்கா புத்தகசாலை.

வெளியீடு:-
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/ 2643)

## ஜோசப் மோட்டார் வேக்ஸ்

யமஹா ஏஜன்சி 94, பிரதான வீதி.

பருத்தித்துறையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் அல்வாய் மேற்கு சக்கோட்டையில் எமது இல்லத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம். சிறந்த முறையில் அவுட்போட் இயந்திரங்கள் திருத்துதல் கிறுங் பிட்டிங் செய்தல் மற்றும் யமஹா உதிரிப் பாகங்கள் விற்பனை சகலவிதமான கடைச்சல்வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

ஜோசப் மோட்டார் வேக்ஸ்
அல்வாய் மேற்கு,
சக்கோட்டை.
(சி/2634)


## 5 ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு:
1946 - 8 - 22

உதிர்வு:
1984 - 5 - 27

### கந்தப்பு ஸ்ரீபன் தேவராஜா

எங்களது இதய தெய்வத்தை இழந்து ஆறுத் துயரடையும்

மனைவி: செல்வராணி தேவராஜா.
மக்கள்: தேவசிலன், ஜெயசிலன்.

''ஜெயமகால்''
இல 7, கற்குழி ஒழுங்கை,
சாவகச்சேரி,
[255]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# Jaffna English Academy

## (A LUX IN TENEBRIS)

The Secret of our Success is our Strength, because it mixes our quality and our experience of 2½ decades.

### ● ESOL
(N C E) (English for Speakers of Other Languages)

London Examinations held at JAFFNA ENGLISH ACADEMY
The Local Examination Centre for Pitmans - London Assessment of Answerscripts and award of Certificates from Pitmans - London.

★ Reading - Writing - Listening - Grammar etc.
★ Graded Objectives to proficiency.
★ Worldwide recognition.
★ The content has been carefully chosen not to penalise Candidates who have never visited the U. K.

WEEK - END BATCH — 11.30 a.m to 1.00 p m
COMMENCEMENT — 28 - 05 - 89
WEEK - DAY BATCH — Mondays & Wednesdays 8.30 to 10.30 a.m
COMMENCEMENT — 29 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 350/- only

### ● TOEFL
(Teaching Of English As A Foreign Language)

Toefl is an entry requirement for most foreign Universities/Colleges. Equip yourself with a good score. Unlimited hours of listening provided. Over 50 listening Comprehension exercises provided. Many past papers will be meticulously done.

WEEK - END BATCH — 8.00 to 10.00 a.m
COMMENCEMENT — 28 - 05 - 89
WEEK - DAY BATCH — Tuesdays & Fridays 2.00 to 4.00 p.m
COMMENCEMENT — 30 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE; Rs. 350/- only

### ● SPOKEN ENGLISH (for Adults)

Ideal for those who wish to acquire greater proficiency in English as a necessary everyday Language.

WEEK - END BATCH — 10.00 to 11.30 a m
COMMENCEMENT — 28 - 05 - 89
WEEK - DAY BATCH — Tuesdays & Thursdays 8.30 to 10.00 a.m
COMMENCEMENT — 30 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 150/- only

### ● G. C. E. (Advanced Level) ENGLISH 1990 AUGUST EXAMINATION

Week - end Classes: 3.00 to 5.00 p.m.
Fees: Rs 50/- per month.

**Lectures: Kandiah Navarendran**

### ● SPOKEN ENGLISH (Higher-above 14 years)

Tuesdays & Fridays 4.00 to 5.00 p.m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only.

### ● SPOKEN ENGLISH (Middle-between 9 and 14 years)

Mondays & Wednesdays 4.00 to 5.00 p.m.
DURATION: 3 Months COURSE FEE: Rs. 125/- Only

### ● ELOCUTION (Stages 1 & 2)

Thursdays 3.30 to 4 30 p.m. } DURATION: 3 Months
Sundays 10.30 to 11.30 a.m. } COURSE FEE: Rs 125/- Only

### ● ELOCUTION (Stages 3 & 4)

Thursdays 4.30 to 5.30 p.m. } DURATION: 3 Months
Saturdays 10.30 to 11.30 a.m. } COURSE FEE: Rs. 125/- Only

### ● G. C. E. (O/L) ENGLISH LANGUAGE - 1989

Mondays & Wednesday 5.00 to 6.30 p.m.
FEES: Rs 35/- per month

### ● CLASS WORK

Years 8 & 9 — Saturdays & Sundays 9.00 to 10.00 a.m
FEES: Rs. 30/- per month
Years 6 & 7 — Saturdays & Sundays 8.00 to 9.00 a.m.
FEES: Rs. 25/- per month.

**Lectures: Mrs E. R. Mather**

**9, RAKKA LANE, CHUNDIKULI, JAFFNA.**

[C-2602]


# பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வீடு

## செஞ்சிலுவைச் சங்கம் உதவி

யாழ்ப்பாணம், மே 27

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கந்தளாய்ப் பகுதியில் வீடுகளை இழந்தவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மேலும் ஐம்பது வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

கந்தளாய் குளம் உடைக்கப்பட்ட பொழுது தமிழ்ப் பகுதியில் இருந்து அனைத்து வீடுகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன என்பது தெரிந்ததே.

தற்பொழுது அந்தப் பகுதிகற்கள் நிறைந்து காணப்படுவதால் வேறுவசதியான இடங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை இந்து இளைஞர் பேரவையின் ஆதரவுடன் செஞ்சிலுவைச்சங்கம் மேலும் ஐம்பது வீடுகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே பலருக்குவீடுகள் கட்டி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## அந்தோனியார் உற்சவம்

காங்கேசன்துறை மே 27

பிரசித்தி வாய்ந்த ஊறணி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஜூன் 3 ஆம் திகதிமுதல் 13 ஆம் திகதிவரை இடம்பெறும்.

3 ஆம் திகதி கொடியேற்றத்தை அடுத்து 9 நாள் நவ நாள் உற்சவமும், 12ஆம் திகதி திருச்சொரூப பவனியும் சற்பிரசாத வழிபாடும் 13 ஆம் திகதி திருநாள் திருப்பலிப் பூசை சுரூப ஆசீர்வாதம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (இ - 68)

## சென். ஜேம்ஸில் மதிய உணவு

குருநகர், மே 27

குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம், மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றில் மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டம் 23 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். சர்வோதய பிரதிநிதிகள் திரு. கே. நடராசா திரு. இ. சிவயோகன். குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க தலைவர் திரு. பி. செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர் திரு. எஸ். தவரெட்ணம் வித்தியாலய அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் ஆகியோர் மாணவர்களுக்கு மதிய உணவாக கௌபி, வாழைப்பழம் என்பவற்றை வழங்கினர். [இ-51]

## பல்கலைக்கழக வேலை நிறுத்தம்: ஈழ தொழிற்சங்க சம்மேளனம் ஆதரவு தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம், மே 27

யாழ் பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஈழத்தொழிற் சங்க சம்மேளனம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக ஏற்பட்டுள்ள பணவீக்கத்தினல் பொருள்களின் விலைகள் வானளாவ உயர்ந்துள்ளதால் வாழ்க்கையில் மிகவும் பாரிய பொருளாதார நெருக்கடியை உழைக்கும் மக்கள் எதிர் நோக்கவேண்டியுள்ளது.

இந்நிலைக்கு இன்றைய ஐக்கியதேசியக்கட்சி அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் தாம் சார்ந்த முதலாளித்துவத்துக்கு ஆதரவான பிற்போக்கு அரசியல் நடவடிக்கைகளுமே காரணமாகும்.

இதனல் தான் நாட்டின்பல்வேறு பகுதிகளிலும் தொழிலாளிவிவசாயிகளின்போராட்டங்கள் தலைதூக்குவதை நிதர்சனமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த வகையில் தென்பகுதியில் அண்மையில் நடைபெற்ற இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.

வாழ்க்கைச்செலவு உயர்வுக்கேற்ப, சம்பள உயர்வு வழங்காமல் தொழிலாள வர்க்கத்தினரைப் பட்டினி போடுவதாலும், அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுப்பதாலும் அரசுக்கெதிரான போராட்டம் தொழிலாளி வர்க்கத்தினரின் சகல பிரிவினர் மத்தியிலும் மேலும் மேலும் வலுவடைந்து வருகின்றது.

இந்தவகையில்தான் இன்று முதலாளித்துவ சக்திகள் தாம் சார்ந்துள்ள வர்க்க நலன்களைப்பேணிப் பாதுகாக்கவும், ஏகாதிபத்திய எஜமானர்களின் அபிலாசைகளை நிறைவேற்றவும் தம்மத்தியிலுள்ள கசப்புணர்வுகளை மறந்து ஐக்கியப்படும் இச்சந்தர்ப்பத்தில் இலங்கைப் பல்கலைக் கழகங்களின் ஊழியர்களின் சம்மேளனம் சம்பள உயர்வு கேட்டு தேசிய ரீதியாக நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் யாழ் பல்கலைக்கழக ஊழியர்களும் இணைந்து போராடுவது ஒரு நல்ல அறிகுறி ஆகும்.

யாழ் பல்கலைக்கழக ஊழியர்கள் குறிப்பாக தொழில்நுட்பவியலாளர்கள். லிகிதர்கள், வேலையாளர்கள் இணைந்து நடத்தும் போராட்டத்தை ஈழம் தொழிற்சங்க சம்மேளனத்தின்கீழ் அணிதிரண்டுள்ள சங்கங்களும், தொழிலாளர்களும் முழுமையாக ஆதரிப்பதுடன், அவர்களின் போராட்டத்திற்கு பக்கபலமாக இருப்போம் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

கடந்த காலங்களில் இனரீதியாக தொழிலாளி வர்க்கத்தைக் கூறுபோட்டு, தொழிலாளி வர்க்கத்தைப் பலவீனப்படுத்தி முதலாளித்துவத்தின் நலன்களைப் பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சி அரசு எடுத்து வந்த நடவடிக்கைகளுக்கு இப்போராட்டம் நல்ல பதிலடியாக அமைந்துள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் தொழிலாளி வர்க்கம் வடபகுதியில் மேற்கொள்ளும் வேலைநிறுத்தம் என்பதால் இதனை சகல மக்கள் பிரிவினரும், ஜனநாயக முற்போக்கு சக்திகளும் ஆதரிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


## முதலாவது

## ★ பிறந்ததின வாழ்த்து ★

(27-05-89)



### செல்வன் ஷாம் டிலக்ஷன்

யாழ்ப்பாணம் 122, பிரதான வீதியைச் சேர்ந்த ருெபேட் புளோறன்ஸ் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஷாம் டிலக்ஷன் இன்று தனது முதலாவது பிறந்ததினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, ஜான்சி அக்கா, வென்சியாஅக்கா, ஷாலினி அக்கா, தொட்டப்பா, தொட்டம்மா, ஐயா, அம்மம்மா, மாமாமார். அன்றி, பெரியம்மா குடும்பத்தினர் அப்பம்மா, பெரியப்பாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்ருர், உறவினர், யாபேரும் இறை இயேசுவின் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்ருர்கள்.

(664)



### யாழ். கனகரத்தினம் ம. மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

**காலம்:** 11- 6- 89 ஞாயிறு காலை 9. 00 மணி
**இடம்:-** கல்லூரி மண்டபம்.
**தலைவர்:-** கலாநிதி சு. மோகனதாஸ்.

சகல அங்கத்தவர்களையும் தவருது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்ருேம்.

**குறிப்பு:**
சாதாரண அங்கத்தவர்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

— வி. எஸ். கனகரத்தினம்
செயலாளர்

[675]



## பிரயாண ஒழுங்குகள்
### உடனடி வேலைவாய்ப்புகள்

**★ குவைத்**

| | |
|---|---|
| றைவேர்ஸ் H. V. | 75 K.D. |
| வீட்டு றைவேர்ஸ் | 60 K.D. |
| சுப்பர்வைசர்ஸ் | 75 K.D. |
| அலுமினிய தொழிற்சாலை லேபரர்ஸ் | 70 K.D. |

**★ சவூதி அரேபியா**

| | |
|---|---|
| றைவேர்ஸ் | 650 S.R. |
| லேபரர்ஸ் (கிளீனிங்) | 450 S.R. (அல்ராஜ்) |
| காப்பென்ரேர்ஸ் | 650 S.R. |
| மேசன்ஸ் | 700 S.R |
| இலக்ரிசன்ஸ் | 800 S.R. |
| வெல்டேர்ஸ் | 700 S.R. |

முற்பணம் அறவிடப்பட மாட்டாது.

தொடர்பு:-

**நியூயோர் ரவல்ஸ்**
K. K. S. வீதி,
பல்லாகம்.

[சி-2637]



புரொய்லர்.
கோழி இறைச்சி



விநியோகஸ்தர்:
**மெடிக்கல் ஹோல்**
224 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDON EXAMS
(Nov/Dec. 89)

**WEEKEND CLASSES**

**C. I. M. A. Stages I & II**

**A. A. T. Prelim & Inter**

Commencing 10th June 89

✶ கொழும்பில் 15 வருடகாலமாகப் புகழ்பெற்று, தொடர்ந்து யாழ் நகரில் 6 வருடங்களாக சேவை நோக்குடன், பல சாதனைகளைப் புரிந்து வரும் விரிவுரையாளர் குழு:

திருவாளர்கள்:

✶ V. கருணாநிதி ✶ S. P. சிவஞானம் ✶ S. சிவபாலன்
✶ பிலிப் ✶ சிறிநந்தகுமார்.

● To sit your Exams. With absolute confidence Enrol with

**RAPID RESULTS INSTITUTE**

212, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

[11034]


## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி





ஐ நாகநாதன் (இந்திரன்)
அன்னையவள் மடியில்: 22-02 1968

அ. பிறேமகுலசிங்கம் (பிறை)
அன்னையவள் மடியில்: 08-02-1966

ஆண்டவன் அடியில்: 27-05-1987

திதி: 03-06-1989

ஆண்டவன் அடிசேர்ந்த அன்பான மைந்தர்களே!
மாண்டவுங்கள் நாளை எண்ணி ஈராண்டு கழிந்ததையோ!
எப்போதும் இதயத்தில் அழியாது உங்கள் நினைவுத் துயர்!
இவர்களை நினைவு கூரும்,

கெருடாவில் — வ. ஐயாத்துரை குடும்பம்
கொம்மந்தறை — சு. அழகையா குடும்பம்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(679)

## ஐந்தாம் ஆண்டு ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அ
ம
ர
ர்
க
ள்



சந்தப்பு ஸ்ரீபன்
தேவராசா
(தேவ)
மலர்வு: 1946 - 08 - 22 உதிர்வு: 1984 - 05 - 27

கந்தப்பு ஸ்ரீபன்
ஞானராசா
(ஞானி)
மலர்வு: 1955 - 08 - 09 உதிர்வு: 1982 - 05 - 29

ஆண்டுகள் பல சென்றாலும் என் நெஞ்சினின்றும் நீங்காத இடம் பெற்ற என் அன்புச்செல்வங்களே! என் இரு கண்களின் ஒளி இழந்தது போல் தவிக்கின்றேன். என்றாலும் நீங்களிருவரும் ஆண்டவன் மடியில் வீற்றிருக்கும் நிலையை அகக் கண்ணால் கண்டு ஆறுதலடைகின்றேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**- உங்கள் அம்மா**

மருதன்கேணி,
தாளையடி.

(634)

## யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
முறைசாராக் கல்விப் பிரிவு

### ஆரம்ப விழா 1989.

காலம்: 1989-05-28 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணி

பிரதம விருந்தினர்: செல்வி திலகவதி பெரியதம்பி
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்: திரு. எஸ். சுப்பிரமணியம்
(கல்வி அதிகாரி, தொழில் நுட்பப் பிரிவு.)

நடைபெறும் கற்கை நெறிகள்:

உடை தயாரித்தல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து (தமிழ் - ஆங்கிலம்), மோட்டார் பொறியியல், ஹோட்டல் முகாமைத்துவம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. இராமலிங்கம்
அதிபர்.

யா/கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம்.

(11060)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 - 12 - 1931

மறைவு: 27 - 05 - 1987

**வைத்திலிங்கம் செட்டியார்**
**முத்துக்காயாரோகணம் செட்டியார்**
(பஞ்சு)
(யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தர்மகர்த்தா)

எங்கள் இதயக் கோயில் தெய்வமாகிய தாங்கள் எங்களை ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டீர்கள். எங்கள் அன்புத் தெய்வத்திற்கு எங்கள் கண்ணீர்முத்துக்களை காணிக்கை ஆக்கி அஞ்சலி செலுத்தும்

அன்பு மனைவி திருமதி மு. சக்குபாய்,
அன்புப்புதல்வர்கள் மு. சுந்தரமூர்த்தி, மு. சாயிசங்கர்.

சிவன்கோயில், K. K. S. வீதி.
யாழ்ப்பாணம்.

[11070]

## கண்ணீர் அஞ்சலி



**கனகரட்ணம் ஸ்ரீகாந்தன்**

தாயின் மடியில்: 26-01-1968

ஆண்டவன் அடியில்: 22-05-1989

உனது பயணம் நீண்டது
உனது கனவுகள் தெரிந்தவை
உனது கொள்கைகள் நிலைக்க வேண்டும்
அந்த நாள் உன் ஆத்மா சாந்தி அடையும்.

குடும்பத்தினர்,
மந்துவில் மக்கள்,
நண்பர்கள்.

கற்குழி,
[illegible]

(681)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி மங்கையற்கரசி கனகரத்தினம்
(விஞ்ஞான ஆசிரியை)

இழப்பு: 27-05-1984

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டி நிற்கின்றேன். சாந்தி அடைவீர்களாக.

அன்பின் கணவர்.

A-2/F-4, புளுமெண்டல்
தொடர்மாடி,
கொழும்பு-13.

(667)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03-04-1930

மறைவு: 27-05-1987

திதி: 03-06-1989

**திரு. அருளம்பலம் முத்துராஜா**
(உப தபாலதிபர், தொண்டைமனாறு)

ஆண்டு இரண்டானாலும் உங்கள் திருவுருவம் எங்கள் நெஞ்சை விட்டகலாது என்றென்றும் எம் மனதில் நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் மறைவால் விக்கும்
மனைவியும், பிள்ளைகளும்.

கெருடாவில்,
தொண்டைமனாறு.

(680)

## ஆறும் மாத நினைவஞ்சலி



**திரு. சின்னத்துரை குணரத்தினம்**
(குணம்)
(பிரபல வர்த்தகர், வாகனமுகவர், கிருஷ்ணா- மரஅரிவு ஆலை உரிமையாளர், அரசாங்க ஒப்பந்தகாரர்)

மலர்வு: 27- 01- 1956

உதிர்வு: 01- 12- 1988

திதி: 27- 05- 1989

ஓங்குயர் குலத்தில் உதித்த நற்சீல!
உழைப்பால் உயர்ந்த உத்தமச் செல்வ!
உற்றார்க்குதவிடும் உயர் குணக்குன்றே!
தன்னை உயர்த்திய தகைமைசால் குணத்தோய்!
ஊர் மக்கட்கெல்லாம் உதவிசெய் பண்பினோய்!
குடும்ப விளக்காய்க் குலவியே ஒளி செய்!
குணமெனும் நாமக் குணக் குன்றேனே!
ஏழைகட்குதவிடும் இன்னருட் குணத்தினோய்!
ஆலயத் திருப்பணிக்கரும் பொருள் உதவினோய்!
சின்னத்துரையின் சீரிய புதல்வ!
குணரத்தினமே எமைப் பிரிந்திட்டு
மூவிருதாகியும் வேகுதே நெஞ்சம்
உந்தனை நினைந்து உருகுதே உள்ளம்!
என்றினி உந்தன் இன்முகங் காண்போம்?

இங்ஙனம்

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

'விஷ்ணு மகால்'
வண்ணாங்கேணி,
பளை.

(சி/2640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம சேவையாளர் பிரிவுகள்

காங்கேசன்துறை மே 27

வலி வடக்கில் கிராமசேவையாளர் பிரிவுகள் மீளாய்வு செய்யப்பட்டு அவற்றின் எண்ணிக்கை 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

வலிவடக்கில் ஏற்கனவே 24 கிராம சேவையாளர் பிரிவுகள் இயங்கி வந்தன. தற்போது கிராம சேவையாளர் பிரிவுகள் பொதுஜன சேவாசங்கங்களினதும் பொது மக்களினதும் ஆலோசனைகள் அபிப்பிராயங்களைப் பெற்று மீளாய்வு செய்யப்பட்டன.

இதற்கமைய 24 ஆகஇருந்த கிராம சேவையாளர் பிரிவுகள் 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

(இ-68)


## பிறந்த நாள் வாழ்த்து

★ செல்வன் சி. அலன் ★

பரந்தன் பாம்புக்கமத்தைச் சேர்ந்த மா. சிதம்பரநாதன் பரமராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அலன் இன்று 27 - 5 - 89 இல் தனது ஐந்தாவது பிறந்த நாளை தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரைஅன்புஅப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியமாமா, அத்தை, மச்சாள்(ஜேர்மனி), ஆசைடடா, ஆசைமம்மி, தங்கைமார், தம்பி, சின்னடடா, சின்னமம்மி, அக்கா (சுவீஸ்லாந்து], றஞ்சன்மாமா (இத்தாலி), விஜியன் மாமா (சுவீஸ்லாந்து), சத்திமாமா (சுவீஸ்லாந்து), பாப்பா அன்ரா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பா, சித்தி, தம்பி மற்றும் நண்பர்கள், உற்றார், உறவினர்கள் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(11033)



## இரண்டாவது
## பிறந்தநாள் வாழ்த்து



★ செல்வி சிந்துகா ★
சிவசுப்பிரமணியம்

கனடாவில் வசிக்கும் சிவசுப்பிரமணியம் ரமணிமாலா தம்பதிகளின் செல்வப்புதல்வி சிந்துகா இன்று 27-05-89 இல் தனது இரண்டாவது பிறந்த தினத்தை கனடாவில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை கனடாவிலிருக்கும் அப்பா, அம்மா, மாமாமார், சித்திமார், கொக்குவில் மேற்கைச்சேர்ந்த அம்மம்மா, சித்திமார், கவிமாமி, சண்டிலிப்பாய் அப்பம்மா, மாமிமார், சித்தப்பா, உற்றார், உறவினர், நண்பர்கள் வேம்படி முருகன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

[689]


கடவுளைத் தேடி:

# மேலே மட்டும் நோக்காது கீழேயும் இறங்கிப் பாருங்கள்

### மண்டல முழுக்கு நிறைவு நாள் விழாவில் உரை

யாழ்ப்பாணம், மே 27

''கடவுள் எங்கு இருக்கிறார் எனத் தேடி மேலே மேலே பார்க்கிறோம். மேலே மட்டும் நோக்காது கீழேயும் சற்று இறங்கிப் பாருங்கள். இந்த மனோ நிலையை நாம் வளர்த்துக் கொண்டால் எம் அகங்காரம் குறையும். கீழே உள்ள உயிர்கள் மீது எமது அன்பு கருணை வளரும். எமது சமூகமே தெய்வம் என்ற நிலை ஏற்படும்''

யாழ் இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள சிவஞானவைரவரின் மண்டலமுழுக்கு நிறைவு நாள் விழாவில் உரையாற்றும் போது கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு இந்துசாதனப் பத்திரிகையின் பத்திராதிபரும் சைவப் பெரியாருமான திரு. நம சிவப்பிரகாசம் தலைமைவகித்தார்.

குடமுழுக்கு விழாவை முன்னிட்டு திரு. கை. க. விசாகரத்தினத்தினால் வெளியிட்ட மலரை கொக்குவில் இந்துக் கல்லூரி உப அதிபர் திரு, இ. மகேந்திரன் வெளியிட்டு உரையாற்றினார்.

சிறப்புரை வழங்கிய திரு. ஜெயராஜ் தமது உரையில் மேலும் கூறியதாவது: எம்மவரில் பலர் தாமும் ஒரு நல்ல கருமத்தை செய்யமாட்டார்கள் அப்படி நல்ல கருமத்தை செய்பவரையும் செய்யவிட மாட்டார்கள். இவர்களை வென்றெடுப்பது ஒரு சாதனை என்றே கூறவேண்டும்,

யாழ் இந்துக்கல்லூரி சைவ மக்களின் உயர் பீடம் இதன் பெறுமதியை நாம் வளர்க்க வேண்டும் நாம் எவ்வளவு சிரத்தையுடன் நகைகளையும் சாணிகளையும் தலைமுறை தலைமுறையாகப் பேணிக் காத்து வருகிறோமோ அதே போன்று யாழ் இந்துவின் பாரம்பரியம் காக்கப்படவேண்டும். திருமுறைகளை நாம் திரும்பத்திரும்ப ஓதி இளைஞர்களின் மனதில் அதைப் படிய வைக்க வேண்டும்.

இறைவனை நாம் மறக்காமல் இருப்பது ஒரு பெருமை நாம் வெளியே இறை நாமத்தை உச்சரிக்கிறோமே தவிர எமது உள்ளத்தின் உள்ளே அவனை உறையவைப்பதில்லை.

சைவத்தில் ஆண்டவனுக்கு உருவம் கிடையாது. நாம் எமது வழிபாட்டுக்காக இறைவனுக்கு வடிவம் கொடுத்துள்ளோம். கோயில்களுக்குச் சென்று இறைவனை வணங்குகிறோம் அது போதாது இதன்பின் உலகெங்கும் அவனைக்காண முயல வேண்டும்.

எமது சமூகமே தெய்வம் என்ற நிலையை நாம் பெற வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சைவப்பெரியார் திரு. நம. சிவப்பிரகாசம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

இறைவன் எங்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஜொலித்துக்கொண்டே இருக்கிறான்; நாம் ஒருவரை ஒருவர் கை கூப்பி வணங்கும்பொழுது இறைவனையே வணங்குகின்றோம். இதனாலேயே எமது உள்ளம் அவ்வேளைகளில் நிறைவு பெறுகின்றது.

யாழ் இந்துக்கல்லூரியில் படித்தவர்களும்படிப்பித்தவர்களும் இந்து பண்பாட்டை வளர்த்தவர்கள் அவர்கள் சைவத்துக்கும் சைவ நெறிகளுக்கும் அடிபணிந்தவர்கள் இதனால்தான் கல்விக்குரிய கலைவாணி இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறாள் கல்வித் துறையில் முன்னணி வகிக்கும் இக் கல்லூரி இங்கு ஒரு வளாகம் அமைக்கப்படும் பட்சத்தில் ஒரு வளாகமாக அமைவதற்கு சகல தகுதிகளையும் உடையதாய் விளங்குகின்றது. இவைகள் எல்லாவற்றுக்கும் மகுடமாய் ஒரு காவல் தெய்வம் இக்கல்லூரியைக் காத்து வருவது கடவுள் கடாட்சமாகும்,

இப்படி அவர் கூறினார்.

யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் திரு, சு:டிவகலாலா நன்றியுரை கூறினார்.

ஞான வைரவர் கோயில் திருப்பணிநிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டு இழுக்கப்பட்டது 11584 இலக்கத்தைக் கொண்டசீட்டு முதலாம்பரிசையும், 88594 இலக்கத்தைக் கொண்ட சீட்டு இரண்டாம் பரிசையும் 07635 இலக்கத்தைக்கொண்ட சீட்டு மூன்றும் பரிசையும் பெற்றன.

(இ-ச)

## ஆசிரியர் சகாயநிதி சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 27

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் 55ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் முன்னை நாள் அதிபர் திரு. சி. எஸ் சுப்பிரமணியம் ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் ஆகியோர் இச்சங்கத்துக்கு ஆற்றிய பணிகளுக்காகக் கௌரவிக்கப்படுவார்கள். (ச)

## பொது அறிவுப் போட்டி இல. 25

பரிசு பெற்றவர் விபரம்:

**முதலாவது பரிசு:**
பே ஸ்ரீ துவாரகா பாலகிருஷ்ண
33, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**இரண்டாவது பரிசு:**
செ, சந்திரகுமார்
'மலரகம்', டச் வீதி,
சித்தன்கேணி.

**மூன்றுவது பரிசு:**
செல்வி சிவகருணா குலவீரசிங்கம்
மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

## யாழ். பஸ்ஸில் கொள்ளையிட்டவர் அ'புர பொலீஸாரால் கைது!

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக அனுராதபுரம் பொலீஸார் குசலா பஸநாயக்கா என்ற நபரைக் கைது செய்தனர்.

புலன் விசாரணையைத் தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் பெருமளவு பொலீஸாரால் மீட்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த வியாழன் இடம் பெற்றது, (ஒ-எ)

வடக்கு, கிழக்கு மாகாண

## உதவி அரசாங்க அதிபர்கள் பதில் பதிவாளர்களாவர்

கொழும்பு, மே 27

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்கள் வருகிற ஜூன் முதலாம் திகதி தொடக்கம் பதில் மாவட்ட பதிவாளர்களாக நியமிக்கப்படவிருக்கின்றனர்.

இவர்கள் இப்பதவிகளைத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு வகிப்பர் என்று பதிவாளர் நாயகம் திரு. எஸ். வீரசிங்க அறிவித்திருக்கிறார்.

திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு மட்டுமே இந்த நியமனம் வழங்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்தகால வன்செயல்களின்போது இறந்தவர்களின் இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதில் உள்ள தாமதங்களையும் சிரமங்களையும் தவிர்க்கும்பொருட்டே இந்த விசேட நியமனங்கள் செய்யப்படுகின்றன. (ஒ-எ)

## பாடசாலைக் கொத்தணி அமைப்பு ஒரு குடும்ப ரீதியான அமைப்பு

### பிரதிக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

அச்சுவேலி,மே 27

''பாடசாலைக் கொத்தணி அமைப்பு ஒருகுடும்பரீதியான அமைப்பு. அதன்மூலம்பாடசாலைகளிடையே நிலவும் வேறுபாடுகளும் குழு உணர்வுகளும் நீக்கப்பட வேண்டும்; ஒன்றுபட்ட செயற்பாட்டுத் திறன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.''

யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி மேற்கண்டவாறு கூறினார்.

புத்தூர் கொத்தணிப் பாட[illegible] நர் போட்டியில் பிரதம அதி[illegible] போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொத்தணி அதிபர் திரு. எஸ். கணேசலிங்கம் போட்டிகளுக்குத் தலைமை வகித்தார்.

யாழ். கல்வித் திணைக்களக் கணக்காளர் திரு. ஆர். சுகுணேந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வழங்கினார்.

கொத்தணி சபைச் செயலாளர் திரு. கே. முத்துக்குமாரசுவாமி நன்றியுரை வழங்கினார். (க-11)

## பொன்னாடை போர்த்தினர்

முரசுமோட்டை ஸ்ரீ சுப்பிரமணியர் தேவஸ்தான வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கந்தபுராண தொடர் விரிவுரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ சிவ. வை நித்தியானந்த சர்மாவுக்கு ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி பொற்கிழியும் வழங்கினார்கள்.


## PARTNER

"A well established freight forwarding and clearing Company in Colombo needs a partner, who can invest two lakhs"

No: 530,
C/o Uthayan,
Jaffna.

(685)



## வெற்றுச்சாக்குக் கேள்விப்பத்திரம்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப.நோ.கூ. சங்கத்தால் 2812 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் பெறவிரும்புவோர் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 15/-ம், மீளளிக்கப்படக்கூடிய பணமாக ரூபா 250/-ம் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காண்பித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் பெறவேண்டிய கடைசித்திகதி 31/05/89. கேள்விப்பத்திரங்கள் யாவும் பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி' எனக் குறிப்பிட்டு 02/06/89ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப.நோ. கூ. சங்கம்.
பண்டத்தரிப்பு.

(சி/2641)



★ மணமகளுக்கான அலங்காரங்களுக்கு

## "THE MAGIC TOUCH"

இந்து, கிறிஸ்தவ மணமகளுக்கான அலங்காரம், சடைநாகம், தலைச்சோடினை, திருமண பிறந்தநாள் கேக் வகைகள், சிற்றுண்டி வகைகள் என்பன சிறப்பாகச் செய்து தரப்படும்.

★ தலைச்சோடினை மலர்ச்செண்டு (Veil) என்பன வாடகைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்:

மங்கா சோமசேகரன்
"THE MAGIC TOUCH"
மல்லாகம் சந்தி,
மல்லாகம். [678]



## பிரயாண ஒழுங்குகள்

சவுதி அரேபியா குவைத்
மே. ஜெர்மனி பிரான்ஸ்

சவுதி அரேபியாவுக்கு உடனடி பிரயாணம் செய்ய எம்மிடம் வெற்றிடங்கள் உண்டு. விரும்புவோர் கடவுச்சீட்டு (Passport) 6 படங்களுடனும் நேரில் வரவும்.

★ விமான நிலைய சுத்திகரிப்பாளர்
★ வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்
★ தொழிலாளர்
★ விவசாயத் தொழிலாளர்
★ Plumber, Carpenter, Mason
★ விவசாயத் தொழிலாளர்கள்: [25 வயதுக்கு மேல்]

(Open Visa) 7 நாட்களில் பிரயாணம்

★ சுத்திகரிப்பாளர் : [23 வயதுக்கு மேல்]

சம்பளம் 560 றியால்

இலவச இருப்பிட, உணவு வசதிகள்.

மேற்கு ஜெர்மனி : உடனடியாகப் பிரயாணம்.
தாய், பிள்ளைகள் உட்பட 16 வயது மாணவர்கள்.

● முக்கிய குறிப்பு:- என்னிடம் கடவுச்சீட்டு தந்த கீழ்க்குறிப்பிட்டவர்களுக்கு குவைத் நாட்டிற்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வதற்குப் பிரயாண ஒழுங்குகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. பின்வருவோர் உடன் என்னைச் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பிரயாணம் 07 - 06 - 1989

1. த. கிருபாகரன் — யாழ்ப்பாணம்
2. அல்வின் அருளானந்தம் — உடுவில்
3. க. இந்திரன் — பண்டத்தரிப்பு
4. க. தங்கவேல் — பண்டத்தரிப்பு
5. பொ. அன்பழகன் — சாவகச்சேரி

V. N. சிவஞானம்
448, இராமலிங்கம் றேட்,
நல்லூர், யாழ்ப்பாணம்,

(11065)



★ கம்பியூட்டர் கல்வி ★

★ COMPUTER PROGRAMMING IN d BASE IV
(LATEST VERSION)

பயிற்சிக் காலம்: 2 மாதம்
ஆரம்பம்: 4 - 6 - 89 [சனி, ஞாயிறு வகுப்புகள்]

★ Lotus 1-2-3 ★ Word Processing

பயிற்சிக் காலம்: 1 1/2 மாதம்
ஆரம்பம்: 6 - 6 - 89 [செவ்வாய், வியாழன்]

சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-மாத்திரம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சிமுடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 03 - 06 - 1989




UNIKCO
COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

(சி/2621)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நூல் நிலையம்"
"ஒரு நூல் நிலையம் திறக்கப்படும்போது பல சிறைக்கதவுகள் மூடப்படுகின்றன"
25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி
"சிவானந்தத் தேன்"
என்ற அறிவு நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

27 - 05 - 1989 சனிக்கிழமை

வியாபாரிகளுக்கு விசேட பரிசு!
மில்க்வைற் தயாரிப்புக்களில் நீலசோப் 72, 36 கட்டிகள், பெரிய பார்சோப், சிறிய பார்சோப் 12 கட்டிகள், துண்டு சோப் 50 கட்டிகள் சுற்றி வரும் பெரிய ரப்பர் தாள்களைச் சேகரித்துக் கொடுத்து மிகச்சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

# உதவி அற்ற விதவைகளுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டம்

## பிரிட்டிஷ் குழந்தைகள் பாதுகாப்பு நிதிய உதவியுடன்

யாழ்ப்பாணம், மே 27

கணவன்மாரை இழந்து நிர்க்கதி நிலையில் வாழும் தமிழ்ப் பெண்களுக்கு உதவும் வகையில் சுயவேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம்.

பிரிட்டிஷ் குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் நிவாரண இணைப்பு அதிகாரி திரு. டேவிட் வாக்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் செயற்பாடுகளை பார்வையிடுவதற்காக வந்திருந்த சமயம் உதயனுக்கு இத்தகவலை அவர் தெரிவித்தார்.

இந்த அமைப்பின் நிவாரண இணைப்பு அதிகாரி திரு. டேவிட் வாக்கர், சுகாதார இணைப்பு அதிகாரி செல்வி வி. மரியன் பேர்ச், துணைப் பணிப்பாளர் திரு டேவிட் சியறர் ஆகியோர் நேற்று முன்தினம் யாழ் நகருக்கு வந்து செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்.

இக் குழுவில் வந்த நிவாரண இணைப்பு அதிகாரி திரு. டேவிட் வாக்கர் மேலும் உதயனுக்குத் தெரிவித்ததாவது.

நிர்க்கதியான பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்க நாம் திட்டம் வகுத்துள்ளோம்.

கோழி வளர்ப்புப் போன்ற சிறுதொழில்களை ஆரம்பிக்க உதவவிருக்கிறோம்.

இன்று யாழ் மாவட்டத்தில் மருத்துவத் தாதிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. எம் அமைப்பு மூலம் மருத்துவத் தாதிகளை உருவாக்க பயிற்சி அளிக்க இருக்கிறோம்.

எமது நிறுவனம் குழந்தைகள், தாய்மார் நலனுக்காக்க பல திட்டங்களைத் திட்டி, நடைமுறைப்படுத்த இருக்கிறது.

யாழ் - வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்கள் வழங்க இருக்கிறோம். மற்றும் கிராமிய மட்டத்திலும் வைத்தியசாலைகளுக்கு உதவுவோம் - இப்படி அவர் கூறினார். (இ-3)

# ஆரம்பக்கல்வி உதவி ஆசிரியர்: சான்றிதழுடன் வரப்பணிப்பு

யாழ்ப்பாணம், மே 27

ஆரம்பக் கல்வி உதவி ஆசிரியர்களாக ஆறு பேர் நியமனம் பெறவிருக்கிறார்கள்.

கீழ் கண்ட ஆறு பேரையும் திங்கட்கிழமை சான்றிதழ்களுடன் வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி ஐ. சீதாதேவி (அல்லாரை தெற்கு), திரு. என். கிருபானந்தசிவம் (நயினாதீவு), செல்வி ரீ. புனிதா (அரியாலை), திரு. கே. அரசேஸ்வரன் [நல்லூர் வடக்கு], செல்வி மோ. அஞ்செலா [கரம்பன்]. [இ-3]

## பன்மொழிப் புலவர் அப்பாத்துரை காலமானர்

மூதறிஞரான பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை நேற்று முன்தினம் காலை சென்னையில் காலமானர்.

அவருக்கு வயது 82.

ஆங்கில-தமிழ் அகராதியை முதன் முதலாகத் தயாரித்தவர் இவர்.

இவரது ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## ஐவர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 27

கடந்த வியாழன் கட்டு காஸ்கோட்டைப் பொலீஸ் பகுதியில் கலகதெர என்ற இடத்தில் இனந்தெரியாத நபர்கள் ஐந்து பேரைச் சுட்டுக் கொன்றனர்.

இறந்தவர்கள் ஐவரும் சிங்களவர்கள். நால்வர் கலகதெரை வாசிகள் ஒருவர் கட்டு காஸ்தோட்டை வாசி. (இ-எ)

## யாழ் மாவட்டத்தில்

# வருட இறுதிக்குள் 1500 வீடுகள்

## ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் கட்டிக் கொடுக்கும்

யாழ்ப்பாணம், மே 27

யாழ் மாவட்டததில் இவ்வருட இறுதிக்குள் 1500 வீடுகளை ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் கட்ட இருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து திரும்பியவர்களுக்கே இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட இருக்கின்றன.

15,000 ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்களை மேற்படி அமைப்பு வழங்கும்.

கட்டம் கட்டமாக உதவிகள் வழங்கப்படும்.

உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் தற்சமயம் 650 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வீடமைப்பு அதிகார சபையினர் மேற்படி வீடமைப்புக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளையும், மேற்பார்வையையும் செய்து வருகின்றனர்.

இவ்வருட இறுதிக்குள் 1500 வீடுகளையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (இ-3)

## கோவில் வீதியில் கொள்ளை

யாழ்ப்பாணம், மே 27

நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஒரு கடை முதலாளியின் வீட்டில் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டது.

வியாழக்கிழமை இரவு நடந்த இக் கொள்ளைச் சம்பவம்பற்றி கூறப்படுவதாவது;-

கோவில் வீதியைச் சேர்ந்த இராமநாதன் என்னும் கடை முதலாளியின் வீட்டில் இரவு 8 30 மணி அளவில் நுழைந்த ஆயுதம் ஏந்திய இனந்தெரியாத ஆறு பேர் கொண்ட கோஷ்டி அங்கிருந்து 10800 ரூபா பணத்தையும், 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழர்களின் தனித்துவம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவோ பயன்படுத்தலாம்.

கனேடிய அரசியல் அமைப்பின்படி கூட்டாட்சி மாகாண அமைப்புமுறை நிலவுகின்றது.

இங்கே மத்திக்கும் மாகாணத்துக்கும் இடையில் அதிகாரம் தாராளமாகப் பங்கிடு செய்யப்படுகிறது.

### கனடாவுக்கு வீசா

கனடாவுக்குச் சென்று குடியேற இலங்கையர்களுக்கு வீசா வழங்குவது பற்றி வினவியபோது கனேடியத் தூதுவர் விவரமான பதிலளித்தார். அவர் அது குறித்துத் தெரிவித்ததாவது:-

"குடியேற்ற வாசிகளின் நாடு" என்று அழைக்கப்படும் ஒரு நாடு கனடா. கனேடியர்களுக்கு இயற்கையாகவே குடியேற்ற மக்களிலும் அகதிகளிலும் அனுதாபம் உண்டு. கனடாவின் குடியேற்றக் கொள்கை தாராளமானதும் நடுநிலையானதும் ஆகும்.

ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் குடியேற்ற வாசிகள் உலகின் பல பாகங்களில் இருந்தும் கனடாவுக்கு வந்து குடியேறுகின்றார்கள்.

தமது சொந்த நாட்டுக்குச் சென்று வாழ முடியாதவர்களைத் தான் அகதிகள் என்று கனடியச் சட்டம் கருதுகின்றது. இதனைத் தவருகப் புரிந்துகொண்டு பலர் அகதிகள் என்ற பேரில் கனடாவுக்குள் சென்றுவிட, தகாத முறைகளைக் கையாண்டு முயற்சிக்கின்றனர்.

உண்மையான அகதிகளுக்கு உதவும் அதே வேளையில், கனடா ஏனையவர்களைப் பொறுத்தவரை கண்டிப்பாக நடந்துகொள்கின்றது.

கனடாவில் அகதிகளாகச் சென்று குடியேறும் விஷயத்தை கனடா அகதிகள்சபைதான் விசாரித்துத்தீர்மானிக்க வேண்டும் — என்றார்.

இலங்கைக்கான கனடாவின் உதவி பற்றி கரோலின் மக்கஸ்கி புள்ளிவிவரங்களுடன் எடுத்துக் கூறினர். (அ-க-3)

## இலங்கை - இந்திய - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று ரெலோ பொதுச் செயலாளர் திரு. செல்வம் விடுத்த அறிக்கை சரியானதல்ல என்றும் அமைச்சு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறைக்கு இலங்கை இராணுவத்தை அனுப்பும் இலங்கை அரசின் முயற்சியை எதிர்ப்போம் என்று திரு. செல்வம் அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாக நேற்றைய "ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டது. (இ-எ)

## மேற்கு ஜெர்மன் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஸா ஸ்டிக்கர்களும் இருந்தனவாம் விஸா ஸ்டிக்கர்கள் வைத்திருந்ததற்கான காரணங்களை அவர்கள் தெரிவிக்கவில்லை;

தாங்கள் ஒவ்வொருவரும் ஏஜண்டுக்கு ஒரு லட்சம்ரூபா கொடுத்தே மேற்கு ஜேர்மன் பயணத்துக்கு ஏற்பாடு செய்ததாகவும் இவர்கள் சுங்க அதிகாரிகளிடம் தெரிவித்தனர். [இ-எ]

## யாழ் மாவட்ட - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

ஏற்கனவே மட்டக்களப்பு அரசியல்இணைப்பாளராக திரு செ. கணேசமூர்த்தியும் வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளராக திரு. ப. பராபரநாதனும்நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கோர்பச்சேவ் - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோர்பச்சேவுக்கு 2,123 வாக்குகள் கிடைத்தன.

87 பேர் எதிர்த்து வாக்களித்தனர், 11 பேர் வாக்களிக்கவில்லை.

வாக்களிப்பு இரகசியமாக நடந்தது. (இ-எ)

## ரயில், பஸ் சேவைகள்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கின்றது:

கடத்தப்பட்ட மாகாண சபைஉறுப்பினர் திரு. சிவபலாராஜா மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கையிலேயே ஸ்தம்பித நடவடிக்கைகள் தளர்த்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையில் ஈ. என். டி. எல் எவ். கடந்த சில தினங்களாக தமது நடவடிக்கைகள் காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு மனம் வருந்துவதாகவும் இந்த நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு நல்கிய அரச ஊழியர்கள் போக்குவரத்து துறையினர் வர்த்தகர்கள் அனைவருக்கும் நன்றிதெரிவித்துள்ளது.

### பாடசாலைகள்

இதனிடையில், வவுனியா ஐக்கிய மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் எதிர்வரும் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை வரை வவுனியா பாடசாலைகளின் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் தொடரும் என்றும்-

எனினும் ஜி. சி. ஈ. (சா/த) சங்கீதம், நடன பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை திட்டமிட்டபடி திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் வவுனியா மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் என்பவற்றில் நடைபெறுவது தடுக்கப்படமாட்டாது என அறிவித்துள்ளது.

### நேற்றும் ஸ்தம்பிதம்

இதேவேளை மாகாண சபை உறுப்பினர் கடத்தலின் எதிரொலியாக நாலாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமையும் வவுனியாவில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து அலுவல்களும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

அலுவலகங்கள் இயங்கவில்லை. பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. ரயில் சேவை அனுராதபுரம் வரையுமே நடைபெற்றது. பஸ் பயணிகள் வவுனியாவில் இறங்கி வேறு பஸ் வண்டிகளில் மாறிச்சென்றனர். (அ-164)

## எழுத்து---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை பூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த நிலையில் இலங்கை போன்ற சின்னஞ்சிறிய நாடு ஒதுங்கி இருக்க முடியாது — என்று மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தமிழின் வரிவடிவம் பழைய முறையில் இருந்து மாற்றப்படக்கூடாது என்று பேராசிரியர் ஒருவர் மட்டுமே வாதிட்டார்.

எனினும் தமிழ் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்வது என்று அறிஞர் குழு முடிவு செய்துள்ளது. (அ-எ)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம்

விசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| 27-5-89 | சனி | — கொடியேற்றம் (நண்பகல் 12 மணி) |
| 28-5-89 | ஞாயிறு | — கைலாசவாகனம் |
| 01-6-89 | வியாழன் | — திருமஞ்சம் |
| 04-6 89 | ஞாயிறு | — சப்பறம் |
| 05-6-89 | திங்கள் | — தேர் |
| 06-6-89 | செவ்வாய் | — தீர்த்தம் |
| 07-6-89 | புதன் | — பூங்காவனம் |

அடியார்கள்

(11063)

# மரண அறிவித்தல்கள்

## திரு. கந்தையா இரத்தினசபாபதி

(ஓய்வு பெற்ற தலைமை அலுவலர்)
Waldeman Group, Uda – Pussallawe

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. கந்தையா இரத்தினசபாபதி காலமானர்: அவரின் ஈமச்சடங்குகள் 28-5-1989 ஞாயிறு காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகி தகனக்கிரியை கணக்கமரத்தடி கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி நவநீதம்

(11077)

## திரு. சின்னத்தம்பி முருகையா

காங்கேசன்துறை பிரபல வர்த்தகரும், சமயத் தொண்டரும், சமூகசேவகருமான திரு. சி. முருகையா அவர்கள் செவ்வாய்க்கிழமை இரவு அகாலமரணமடைந்துவிட்டார்.

யாத்திரைச் செல்லப்பிள்ளையார்வீதியிலமைந்துஇருக்கும் அவரது வீட்டிலிருந்து 24-5-1989 புதன்கிழமையன்று அவரது பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு மாவிட்டபுரம் மயானத்தில் தகனக்கிரியைகள் செய்யப்பட்டன. உற்றார், உறவினர், நண்பர்களுக்கு உடன் அறியத்தராமைக்கு வருந்துகிறேன்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றுமறியேன் பராபரமே"

தகவல்:
திருமதி முருகையா இராசமணி

(6061)

# மரண அறிவித்தல்கள்

## திரு. சதாசிவம் தெய்வேந்திரம்

முன்னை நாள் சுங்க அதிகாரியும், பிரதம உதவி அறவிடும் உத்தியோகத்தருமான (Former Sub Collector and Chief Assistant Charges Officer, Customs) திரு. சதாசிவம் தெய்வேந்திரம் காலமானர்.

இவர் உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி சதாசிவம் தம்பதிகளின் மகனும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், அகிலன் (நோர்வே), ராகுலன் (நோர்வே), ஆதித்தன் (இந்தியா), பார்த்தீபன் (நோர்வே), நிரஞ்ஜினி (புனித லோறன்ஸ் பெண்கள் பாடசாலை) ஆகியோரின் தந்தையும், லங்காதேவியின் சகோதரரும், காலஞ்சென்ற சிவநாயகம், காலஞ்சென்ற இராசரத்தினம், காலஞ்சென்ற தனேஸ்வரி, காலஞ்சென்ற மாசிலாமணி, சர்வேஸ்வரி, சி. வாமதேவன் (இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), கமலாதேவி, இராஜேஸ்வரி, சி. ஆர். வேலாயுதபிள்ளை (உதவிப் பணிப்பாளர், சிறுகைத்தொழிற் பகுதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு 28 ஆம் திகதி நாளை காலை 7-30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: ரி. ஆதித்தன்

160/2, டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை.

## திரு. வேலுப்பிள்ளை கதிரவேலு

இளைப்பாறிய எட்டியாந்தோட்டை P. W. D. ஓவசியர் வேலுப்பிள்ளை கதிரவேலு சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் நேசமணியின் அன்புக் கணவரும், பத்மகாந்தன் (பெருந் தெருத் திணைக்களம் R.M.C. நெல்லியடி), K. P. ஆனந்தன் (யாழ். மாநகர சபை, அங்கீகாரம் பெற்ற பட வரைஞரும், கட்டட ஒப்பந்தகாரரும்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரஞ்சோதி, தயாளகௌரி (யாழ். இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு மாமனும், சுதர்சன், சுகந்தன், செந்தூரன், ஆதவன், சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 27-05-1989 12-00 மணியளவில் சன்னதி றோட், பத்தமேனியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
அச்சுவேலி. [690] K. P. ஆனந்தன்

## திரு. வேலுப்பிள்ளை நடராஜா

மூளாயை பிறப்பிடமாகக் கொண்டவரும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான வேலுப்பிள்ளை நடராஜா என்பவர் 24-05-89 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலம்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், வடிவாம்பிகை, சத்தியபாமா, ஜெயக்குமார் (Bharain) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதன், விஜியரட்ணம், ஆனந்தி ஆகியோரின் அன்பு மாமனும், இராசையா, கனகம்மா, முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசையாவின் அன்பு மைத்துனரும், பிறேமாவதி, கலாவதி, கிரிதரன், உதயா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-05-89 அன்று மாலை செம்பாட்டு மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"தங்கவில்லா"
இல: 47, கி. வி. திட்டம்,
திருநெல்வேலி. (11076)

## முத்தையா ஓங்காரசோதி

மாதகல் மேற்கைச் சேர்ந்த முத்தையா-ஓங்காரசோதி அவர்கள் (ஆசிரியர் யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) 25-05-89 அன்று காலமானர். இவர் காலஞ்சென்ற முத்தையா யோகாம்பிகை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வயித்திலிங்கம், தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் தவலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி சுகந்தி தணிகைக்குமார் (மலேசியா), துஷ்யந்தி, வாசுகி, நளாயினி, சிவயோகினி, தயாளினி பராங்கதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாக்கியாம்பிகை குலசேகரன் (மலேசியா) அவர்களின் அன்புச் சகோதரனும், இராசரத்தினம் (ஜேர்மன்), இராசகுமார் (இந்தியா), கதிரமலைராசா, காலஞ்சென்ற குலசேகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-05-89 இன்று நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி.

மாதகல் மேற்கு (695)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3 இல் உள்ள அச்சகத்தில் 27 - 05 - 1989 அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
O/L 89
ஆங்கிலம்
திரு. தேவராஜா
சமூகக்கல்வி
திரு. வேலாயுதபிள்ளை
வர்த்தகமும் கணக்கியலும்
திரு. மகேஸ்

சஞ்சீவி
சஞ்சிகை
27 - 05 - 1989 சனிக்கிழமை

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
O/L 89
கணிதம்
திரு. இரா. அருட்செல்வம்
விஞ்ஞானம்
திரு. முருகதாஸ்
தமிழ்
திரு. பொன்னுச்சாமி
ஆண்டு 6, 7, 8, 9, 10 வகுப்புகளும் நடைபெறுகின்றன.

## கருத்துக் கலசம்

மயூரா

### கற்பகக் காலம் காண்போம்!

பனம் பழத்திலிருந்து குளிர்பானம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று மேற்கு ஜேர்மன் உதவியுடன் வடமராட்சியில் நிறுவப்படும்.

போத்தலில் அடைத்த பனங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

பனை அபிவிருத்தியில் நாட்டம் உள்ளவர்களுக்கும், தமிழ்ப் பகுதியின் பொருளாதார விருத்தியில் விருப்பம் உள்ளவர்களுக்கும் வெல்லம்போல இனிக்கக்கூடிய செய்திகள் இவை.

பனையில் பொதிந்திருக்கும் பொருளாதார மேம்பாட்டுச் சாத்தியங்கள் (Potentials) மெது மெதுவாக நடைமுறைக்கு வருவது நல்ல சகுனம் என்றே சொல்லவேண்டும். மகிழ்ச்சி தருவதும் ஆகும்.

தமிழ்ப்பகுதிகளில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பனைவளத்துக்குப் பிரதான இடம் உண்டு. பனையின் பல்வகைப் பயன்பாடுகளையும் தக்கபடி, உரியமுறையில், ஆராய்ந்து கண்டுபிடித்து உபயோகித்தால் குடாநாட்டின் பொருளாதாரம் உயர இடமுண்டு.

ஆரம்பத்தில் வளர்ந்து பயன்தர ஆண்டுகள் சில சென்றாலும், அதன் பின்னர் மிக நீண்ட காலத்துக்கு பல்வகைப் பயன்களைத் தரவல்லது. அதன் நுனி ஓலை தொடக்கம், அடிவேர் வரை பயனற்றது என்று கழித்துவிட எதுவுமில்லை. ஒவ்வொரு உறுப்பையும் ஏதோ ஒரு விதத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

புதிய விஞ்ஞான அறிவு கொண்டு ஆராய்ந்தால், ஒவ்வொரு அங்கத்தில் இருந்தும் பலவித பயன்பாடுகளைப் பெற்றுக் கொள்ள வழி பிறக்கும் என்பது திண்ணம். அதனால் தான் கேட்டது தரும் கற்பகம் என பெயரிட்டு கற்பகதரு என அழைக்கப்படுகிறது.

பனை வளம் காப்பது எமது பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்குச் சமனாகும். பனைகளைக் கண்டபடி தறிப்பதை மக்கள் தாமாகவே உணர்ந்து குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். வெட்டும் ஒவ்வொரு பனைக்கும் பதிலாகப் பத்துப் புதிய பனங்கன்றுகளை முளைத்திடச் செய்தல் தமது பொறுப்பாக, கடமையாகக் கருதி ஒவ்வெருவரும் செயற்படவேண்டும்.

புதிய புதிய வழிகள் மூலம் பனைச்செய்கை ஒரு பெருந்தோட்டப் பயிராகவும், கைத்தொழில் விளை விவசாயமாகவும் மாற்றப்பட வேண்டும். அப்போது பசளையும், தண்ணீரும் இட்டு வளர்க்கப்படும் தென்னை, வாழை மற்றும் ஏனைய பயிர்கள் போன்றே பனையும் கிராக்கி உள்ள தருவாக மாறும். அந்தக் கற்பக காலத்தை, கனக காலத்தை உருவாக்குவதும், விடுவதும் மக்கள் கையிலேயே உள்ளது. ★

# கடலில் இருந்து மின்சார உற்பத்தி திருகோணமலையில் சாத்தியமாகுமா?

கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாக மின்சக்தியின் பயன்பாடு உலக அளவில் முன்னைவிட இரட்டிப்பாகியிருக்கிறது.

மக்கள் பெருக்கத்தின் காரணமாகவும் தொழில் முன்னேற்றத்தின் காரணமாகவும் மின்சக்தியின் தேவை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

இயற்கை மூலமாக பெற்ரோலியம், எரிவாயுக்கள், நிலக்கரி முதலிய எரிபொருள்கள் முடிவில்லாமல் கிடைத்துக்கொண்டேயிருக்க வாய்ப்பில்லை.

தற்போது பூமியில் புதைந்திருக்கும் நிலக்கரிப் படிவுகள் எதிர்வரும் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

நீர் மின்சாரத்தின் உற்பத்திக்கும் ஓர் அளவுண்டு என்பதை நாம் நடைமுறையில் பார்க்கிறோம்.

எனவே செலவு குறைந்ததும் இடைவிடாது தொடர்ந்து மின்சக்தி தருவதுமான புதியதோர் ஆற்றல் உறைவிடம் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருக்கிறது.

### மாற்று வழி

அவ்வாறு அமைந்த புதியதொரு வழிமுறைதான் கடலிலிருந்து மின்சக்தி பெறுவது என்பதாகும்.

அலைவீச்சு, கடலில் அமையும் வெப்ப வேறுபாடுகள்.

ஆறுகள் கடலில் பாய்ந்து கலத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு உருவாகும் ஆற்றலை வசப்படுத்தி இதுவரை நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

அலைகள் எழும்பித்தாழ்ந்து பாயும் பாய்ச்சலைப் பயன்படுத்தி மின்முறைப் பொறியாளர்கள் டர்பைன்களைச் சுழலச் செய்து ஜெனரேட்டர் மூலம் மின்சாரத்தை உற்பத்திசெய்யும் நுட்பத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அலைகளில் இயங்கு ஆற்றலும் நிலை ஆற்றலும் அடங்கியிருக்கின்றன. அலை உயரும் போது நிலை ஆற்றலும் அலையெறிந்து பாயும்போது இயங்கு ஆற்றலும் கொண்டிருக்கின்றன.

அலையின் நிலை ஆற்றலில் இருந்து பெறப்படும் மின்சக்தி கடல் நடுவில் உள்ள ஆய்வுக்கூடங்களின் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கும்.

அமெரிக்காவின் மாசசுசெட்ஸ் கரையோரக் கடற்பகுதியில் இம்மாதிரியான ஆய்வு நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. இதிலுள்ள மின்சக்திக்கூடம் 15 வாட் மின்சக்தியை உற்பத்தி செய்கிறது.

### கடலுக்குள்

கடல் நீருக்குள் ஒரு குழாயை மூழ்கச் செய்திருக்கிறார்கள். அந்தக் குழாயில் வெவ்வேறு உயரங்களில் துளைகள் அமைந்திருக்கின்றன.

குழாயின் வழியே அலைகள் உயரே எழும்பித் துளைகளைக் கடந்து செல்லும்போது ஏற்படும் அழுத்த வேறுபாடுகளுக்கு ஏற்ப அழுத்தக் குழாய் ஒன்றின் பிஸ்டன் மின்சார ஜெனரேட்டரை இயங்கச் செய்கிறது.

ஜெனரேட்டரிலிருந்து வெளிப்படும் மின்சக்தியை மின்சார டிரான்சிஸ்டர் கருவிகள் மூலம் ஒருவழிப்படுத்தி வெளியேற்றிப் பயன்படுத்துகிறார்கள்.

15 வாட் மின்சக்தி மட்டுமே உற்பத்தி செய்யப் பயன்படும் இக்கருவிகளின் நிர்மாணச் செலவு சுமார் இரண்டாயிரம் டாலர்கள்.

இதைவிடச் செலவு குறைவானதும், செயலாற்றல் அதிகமானதுமான கடலலை மின் உற்பத்திச் சாதனங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான தொழில் நுட்ப ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

கடலில் ஒரு குறிப்பிட்ட இடத்தை எடுத்துக் கொண்டால், கடலின் மேல்மட்டத்தில் அதிகமாகவும் ஆழப் பகுதிகளில் குறைவாகவும் வெப்பநிலை அமைந்திருக்கிறது.

பொதுவாக 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை கடல் மேல் மட்டத்தில் இருக்கிறது.

ஆயிரம் மீட்டர் ஆழத்திற்குச் செல்லும்போது வெப்பநிலை 5 டிகிரிதான் இருக்கிறது.

இந்த வெப்பநிலை வேறுபாட்டைப் பயன்படுத்தி மின்சக்தி தயாரிக்கத் தற்போது வழி கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்த முறையினால் அளவில்லாத மின்சாரம் கிடைக்க முடியும். இரவு பகல் வேறுபாடில்லாமல் பருவ காலங்களை நம்பியிராமல் முடிவில்லாமல் மின்சக்தி பெற இந்த முறையினால் முடியும்.

### 1881 இல் வெளியான கருத்து

ஜாக்கஸ் டி ஆர்சன்வல் என்ற பிரான்ஸ் நாட்டு இயற்பியல் விஞ்ஞானி 1881 இல் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

கடலின் மேல்மட்டத்தில் வெப்ப நீரும், ஆழத்தில் குளிர் நீரும் ஆக இவற்றிடையே செயலாற்றும் ஒரு வெப்ப என்ஜினை அவர் உருவாக்கினார்.

1929 இல் ஜார்ஜ் களாடு என்பவர் முதன் முதலாகக் கடல் வெப்ப மின் உற்பத்தி ஜெனரேட்டரை வடிவமைத்து கடலில் அதை நிறுவினார்.

மேல்மட்டக் கடல் நீரையும் ஆழத்திலான நீரையும் குழாய்கள் மூலம் பம்ப் செய்து ஜெனரேட்டர் பகுதியில் பயன்படுத்தினார்.

குறைந்த அழுத்தத்தில் தண்ணீர் தாழ்ந்த வெப்பநிலையிலேயே கொதிக்கும் அல்லவா?

இந்த அறிவியல் கருத்தைச் சார்ந்து மேல்மட்ட வெப்ப நீரைக் குறைந்த அழுத்தச் சூழலில் அமையச் செய்வதனால் நீராவியாக மாற்றப்படுகிறது. அவ்வாறு வெளிப்படும் நீராவியைப் பயன்படுத்தி ஜெனரேட்டரின் டர்பைனைச் சுழற்றலாம்.

ஆழப் பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற தண்ணீரைக்கொண்டு நீராவியைக் குளிரச் செய்து குறைவான அழுத்தத்தை உருவாக்க முடியும்.

22 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட யூனிட் பொருளாதார அடிப்படையில் கட்டுபடியாகாதது என்று கணக்கிடப்பட்டது.

25 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை கடலின் மேல்மட்டத்திலும், 5 டிகிரி வெப்பநிலை ஆயிரம் மீற்றர் ஆழத்திலும் இருப்பதைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மின்சக்தியின் அளவு 93 அடி உயரத்திலிருந்து பாயும் அருவியிலிருந்து தயாரிக்கப்படும் மின்சக்தி அளவுக்குச் சமமானதாக இருக்குமென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இதுமாதிரியான மின் உற்பத்திக் கூடங்களைக் கடல் நெடுகிலும் நிறுவ முடியும்.

### ஆறும் கடலும் சேரும் கழிமுகம்

மற்றொரு முறையாலும் கடலிலிருந்து மின்சாரத்தைப் பெறமுடியும். ஆறும் கடலும் சேரும் கழிமுகத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுவதுதான் அந்தப் புதிய முறை.

கழிமுகப்பகுதியில் ஆற்றின் மென்னீர் கடலின் உப்புநீருடன் கலக்கும்போது பெருமளவிலான ஆற்றல் வெளிப்படுகிறது.

இந்த முறையில் உப்புநீர் மென்னீர் கலப்பதனால் ஏற்படும் விளைவுகளைக்கொண்டு மின்சாரம் உண்டாக்குவதற்கான சிறிய மின் உற்பத்திக் கலங்களை அமைத்துக்கொள்ளலாம்.

பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் சவ்வூடுகளால் அமைந்த தனித்தனி அறைகளில் உப்புநீரும் மென்னீரும் பாயச் செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது இந்தப்புதிய முறையின் அடிப்படையாகும்.

இதுவரையிலான சோதனைகளின்படி 3.1 வோல்ட் மின்சாரத்தை உற்பத்திசெய்யும் திறன்கொண்ட மின்கலங்கள் அமைக்கப்பட்டு வெற்றி கிடைத்திருக்கிறது.

பல ஆறுகளைப் பெற்றிருக்கும் நாடுகள் இந்த வழி முறையைப் பின்பற்றி அதிக மின்சக்திபெற முயலலாம்.

அதிக உப்புச்சத்தும், அதிக வெப்பநிலையும் கொண்ட கடல் நீருடன் பாய்ந்து கலக்கும் ஆறுகள் நம் நாட்டில் பல இருக்கின்றன. எனவே இந்தப் புதிய முறையும் நம் நாட்டிற்குப் பெரிதும் உகந்ததாக இருக்கும்.

### இலங்கையில்

திருகோணமலையில் துறைமுகத்திற்கு வெளியே பாதாள மலை என்று அழைக்கப்படும் இடம் ஒன்று உண்டு.

அதன் அருகில் கடல் அலைகள் எழும்பித் தாழ்ந்து பாயும் பயங்கரப் பாய்ச்சலைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு.

இலங்கையை பிரிட்டிஷார் ஆண்டு வந்த காலத்தில் திருகோணமலையில் பாதாளமலைக் கடல் பிரதேசத்தில் கடல் மின்சார உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கும் யோசனையைப் பிரிட்டிஷ் நிபுணர்கள் வெளியிட்டிருந்தனர்.

இதை விடக் கடல் நீருடன் பாய்ந்து கலக்கும் ஆற்றுக் கழிமுகமும் திருமலை மாவட்டத்தில் உள்ளது.

மகாவலி கங்கையின் ஒரு பிரிவு மூதூரில் கடலுடன் சேரும் கழிமுகம் உண்டு. அந்த ஆற்றலைப் பயன்படுத்தியும் மின்சார உற்பத்தி செய்யும் வாய்ப்பும் உண்டு.

ஆகவே கடலில் இருந்து மின்சார உற்பத்தி செய்ய இலங்கையில், திருகோணமலையில் இருப்பது போன்ற வாய்ப்பு வேறு பகுதிகளில் இல்லை என்றே கூறலாம். ★

# அன்டார்க்டிக்கா - தென் இந்தியத் தொடர்பு; பனிக்கண்ட ஆய்வில் புதிய தகவல்!

அன்டார்க்டிக்கா பனிக் கண்டத்தில் பல நாடுகள் ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றன.

இந்தியாவும் அந்நாடுகளில் ஒன்று.

ஏற்கனவே இந்திய விஞ்ஞானிகள் அன்டார்க்டிக்காவுக்கு ஏழு தடவைகள் பயணம்மேற்கொண்டு ஆராய்ச்சிகளை நடத்தினர்.

ஏழாவது பயணத்தின் போது 'தஷின்கங்கோத்ரி' என்ற ஆய்வு நிலையத்தை அன்டார்க்டிக்காவின் ஷிர்மேக்கர் (Shirmacher) பிரதேசத்தில் நிறுவி அதில் இருந்துகொண்டு ஆராய்ச்சிப் பணிகளை நடத்தினர்.

எட்டாவது ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் இந்திய விஞ்ஞானிகள் அன்டார்க்டிக்காவில் 'மைத்திரி' என்ற நிலையத்தை அமைத்துள்ளனர்.

அங்கிருந்துகொண்டு பனிக் கண்டத்தில் உள்ள பீற்றர்மான் (Petermann) ஹம்போல்ட் (Humpoldt) மலைப் பிரதேசங்களில் இந்திய விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியில் புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இரண்டு மலைப்பிரதேசங்களிலும் காணப்பட்ட, எரிமலை வெடித்ததினால் உருமாறியதாகக் கருதப்படுகின்ற கற்பாறைகள், படிவங்கள் ஆகியவற்றின் பகுதிகளை இந்திய விஞ்ஞானிகள் சேகரித்தனர்.

இவற்றை 'மைத்திரி' நிலையத்தில் ஆராய்ச்சிக்குட்படுத்தியபோது இந்திய விஞ்ஞானிகள் தென் இந்தியாவில் உள்ள பாறைக்கற்களும் அன்டார்க்டிக் கற்களும் ஒரே மாதிரியானதாக இருக்கக் கண்டனர்.

தென் இந்தியாவில் காணப்படுகின்ற உயர்தரமான கருங்கற்களை ஒத்ததாக பனிக் கண்டக்கற்கள் அமைந்து இருப்பது ஆய்வில் தெரிய வந்தது.

பென்குவின் பறவைகள் அன்டார்க்டிக்கா கண்டத்தில் தான் வாழ்ந்து வருகின்றன.

பீற்றர்மான் மலைப்பிரதேசத்தின் கருங்கற்கள் மைசூர்ப் பிரதேசத்தில் காணப்படும் கருங்கற்களை ஒத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

தேசிய புவி-பௌதிகவியல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளே இந்த ஆய்வை நடத்தினர்.

பனிக் கண்டத்தில் உள்ள க்ருபர் மலைப்பிரதேசத்தில் நடத்தப்பட்ட ஆய்வும் இது தொடர்பாக பல புதிய முடிவுகளை எடுக்க உதவும் என்று இவ்விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர். அன்டார்க்டிக்கா கண்டத்திற்கும் உலகின் ஏனைய கண்டங்களுக்கும் தொடர்பு உண்டு என்பதை நிரூபிக்கும் சான்றுகளை இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

### அன்டார்க்டிக்கா

உலகில் உள்ள கண்டங்களில் இது ஐந்தாவது பெரியதாகும்.




படமும் தகவலும்: இந்தியன் எக்ஸ்பிரஸ்.

6 ஆயிரத்து 500 அடி தடிப்பில் பனிக்கட்டிகளினால் இக்கண்டம் மூடப்பட்டுள்ளது.

இரண்டு உபகண்டங்களாக அன்டார்க்டிக்கா பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு அன்டார்க்டிக்கா பனிக்கட்டி மூடப்பட்ட பீடபூமியாகவும்மேற்கு அன்டார்க்டிக்கா பிரதேசம் மலைகள் நிறைந்த பனிப் பாறைகளினால் மூடப்பட்ட தீவுக்கூட்டங்களாகவும் உள்ளன.

இக்கண்டம் 55 லட்சம் சதுர மைல் (ஒரு கோடி 42 லட்சம் சதுர கிலோ மீற்றர்) விஸ்தீரணம் கொண்டது.

இக்கண்டத்தைச் சுற்றி இருக்கும் கடல் 'அன்டார்க்டிக்கா சமுத்திரம்' என்று அழைக்கப்படுகிறது.

அத்லாந்திக், பசுபிக் மற்றும் இந்து சமுத்திரங்களின் தெற்குப் பிராந்தியங்களே 'அன்டார்க்டிக்கா சமுத்திரமாக' அழைக்கப்படுகிறது.

உலகிலே உயர்ந்த கண்டமாக அன்டார்க்டிக்கா கணிக்கப்பட்டுள்ளது. கடல்மட்டத்தில் இருந்து 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் அடி உயரத்தில் இக்கண்டம் அமைந்துள்ளது.

இதனை மூடியுள்ள பனிப் படலம் 3 கோடி கன கிலோ மீற்றர் பனிக்கட்டியைக் கொண்டுள்ளது.

குளிரைத் தாங்கக்கூடிய செடிகளே அங்கு வளர்கின்றன. அன்டார்க்டிக்காவின் தென்பகுதியில் 45 வகையான பறவைகள் வாழ்கின்றன. ஆனால் பென்குவின் பறவைகள் உட்பட மூன்று பறவை இனங்கள் உலகில் அன்டார்க்டிக்காவில் மட்டுமே வாழ்கின்றன.

கனிப்பொருள்கள் ஏராளமாக இக்கண்டத்தில் உள்ளன. தங்கம், பித்தளை குரோமியம், ஈயம், யுரேனியம், இரும்பு ஆகியன இக்கண்டத்தில் உள்ளன. நிலக்கரிப் படிவங்களும் ட்ரான்ஸன்டார்க்டிக் மலைப்பிரதேசத்தில் உள்ளன.

இக்கண்டத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிகள் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும் என்று கூறும் உடன்படிக்கை ஒன்று 1 - 12 - 1959 இல் கைச்சாத்திடப்பட்டது. அதில் 12 நாடுகள் (ஆர்ஜன்டினா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரிட்டன், சிலி, பிரான்ஸ், ஜப்பான், நியூசிலாந்து; நோர்வே, தென் ஆபிரிக்கா, அமெரிக்கா, சோவியத்யூனியன்) கைச்சாத்திட்டன.

இந்த உடன்படிக்கையின் படி இக்கண்டத்தில் இராணுவத் தளங்களை அமைக்கமுடியாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலில் ஒருவகை!

நிங்கடை பேருக்குப் பின்னால் 'B.A.M.A.,' இப்படிப் பட்டங்களை வாலாக ஒட்டவைச்சுக் கொண்டு 'விலாசமாத்' திரியிற ஆக்களைக் கண்டா எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வருகுது...

சிவப்பிரகாசம் மாஸ்ரர்... M.A. படிச்சவராம்... என்னைப் பார்த்து ஒரு மாதிரிக் கேலியாகச் சிரிச்சு கொண்டு போருர்... எனக்கெண்டா அவரைப் பார்க்கத்தான் சிரிப்புச் சிரிப்பா அடக்க முடியாமல்... பாவமாயும் கிடக்கு...

'ராப் பகலா கடுதாசி மையைக்கரைச்சுக் குடிச்சு..., சோப்பை கோப்பையாத் தேத்தண்ணி விழுங்கி... வண்டில் வண்டிலாப் புத்தகஞ் சுமந்து முதுகெலும்பு வளைஞ்சு... சோதினைக்காலத்தில் -விடியப்புறம் பனியுக்கை எழும்பிப் போய்ப் பிள்ளையாருக்குத்தேங்காய் அடிச்சு... கஷ்டப்பட்டுப் பட்டம் வாங்கவேணுமே...

நான் அப்பிடியே... நானும்தான் பட்டங்கள் வாங்கியிருக்கிறேன்... கழுதை பொதி சுமக்கிற மாதிரி புத்தகம் சுமக்காமல்... வாங்குக்கு மேல ஏறி நிண்டு வாத்தியாரிட்டை வாங்கிக் கட்டாமல் ஒண்டே ரண்டே எத்தினை பட்டம் வாங்கியிருக்கின்...

அரேபியாக்காரன் மாதிரி தொளதொள வெண்டு கறுப்புக் கோட்டுப் போட்டு, குஞ்சம் கட்டின கோணங்கித் தொப்பி போட்டு, கோமாளி மாதிரி நிக்க வச்சு... தடிச்ச தாளில கறுப்பு மையால அச்சடிச்சுத் தந்தாத்தான் பட்டமே...?

என்ன ஒரு மாதிரிப் பாக்கிறியள்... நானும் பல பட்டங்கள் பெற்றவன் தான்... ஊரெல்லாம் சேர்ந்து எனக்கு பட்டம் தந்திருக்குது...

'அழுகுணி... அரைலூஸ்... கண்ணடி மன்னன்... கடைசியா... 'முத்தின விசர்' இதெல்லாம் என்ரை பட்டங்கள்தான்... . என்ன சிரிக்கிறியள்...? என்ரை பேருக்குப் பின்னால அ, அ. லூ., க. ம, மு. வி' எண்டு போட்டால் திக்காமல் விழுந்தே போகும்...?

ஊருக்குள்ள தடுக்கி விழுந்தால் ஆராவது ஒரு பட்டதாரிக்கு மேலதான் விழவேணும்... அவையை' யெல்லாம் பட்டஞ் சொல்லியே சனங்கள் கூப்பிடுது...?

'பாவங்கள்'...

ஆனா எனக்கு இந்தத் தலையெழுத்தெல்லாம் கிடையாது. ஊருக்குள்ள என்னோடை ஒருக்கா வாருங்கோ... என்னைப் பட்டப் பேரால தான் எல்லாரும் கூப்பிடுவினம்... என்ரை சொந்தப்பேரே எனக்கு மறந்து போச்சுதெண்டால் பாருங்கோவன்...

'எடே... அரைலூஸ்... இந்த விறகை ஒருக்காக் கொத்தி விடுறியே...'

'அழுகுணி... ஓடிப்போய் ஒரு கிலோ சீனி வாங்கி வாறியே...'

இப்பிடியெல்லாம் ஊர்ச்சனங்கள் என்னை அன்போடை பட்டஞ் சொல்லிக் கூப்பிடுவினம்... எனக்கும் அதில ஒரு குஷிதான்...

உதெல்லாம் சிவப்பிரகாசம் ஒாத்திக்கு விளங்குமே... கண்டறியாத சிரிப்புச் சிரிச்சுக் கொண்டு போருர்...

'ஆகிறதும் பெண்ணால - அழியிறதும் பெண்ணால' எண்டு சும்மாவே சொன்னவங்கள்... இத்தினை பட்டங்களும் எனக்குக் கிடைக்கிறதுக்கு ஆர் காரணமெண்டு நீங்கள் நினைக்கிறியள்? அவள் தான்...! என்ன திகைச்சுப் போய் நிக்கிறியள்?...

அந்தக் காலத்தில இருந்தே இவள் ராசாத்தியில எனக்கு ஒரு 'இது' வந்துட்டுது...... ஆளைப் பார்க்கவேணும் நீங்கள்... தக்காளிப்பழம் மாதிரி தளதளவெண்டு... சந்தனப் பொட்டு மாதிரி குளுகுளு வெண்டு... பார்த்தா பத்து நாளைக்குப் பசி - தாகம் எடுக்காது.

நான் மட்டும் என்ன குறைஞ்ச ஆளே...? வடிவான ஆம்பிளை தான்... கொஞ்சம் கரிநிறம்... முன்பல்லு ரண்டும் கொஞ்சம் மிதப்பு-நீட்டு, ஒரு கண்ணில செல்லவாக்கு... கொஞ்சம் விசுக்கி விசுக்கி நடப்பன்... இதுஒரு பெரிய குறையே...

நான் நடக்கயிக்கை சரியா 16 வயதினிலே கமலகாசன் மாதிரிக் கிடக்கெண்டு ஊரெல்லாம் ஒரே புழுகுதான் போங்கோ...

ஆ... கதையை எங்கை விட்டனான்...ஆ...ராசாத்தியில் எனக்கொரு 'இது' வந்திட்டுது..

எங்கட ஊர்க் கந்தசாமியார் கோயிலில ஒரு நாள் அவளை நான் கண்டிட்டு...மனசுக்குள்ள என்னமோ... நான் படபாடு உந்தச் சினிமாப் படங்களில் வாறவளவை மாதிரி...

பின்னிமுடிச்சு, பூவச்சு... பொட்டுவச்சு... கீழே சரிகை வச்ச முழுப்பாவாடையோடை இவள் நிக்க... மனம் விக்கிவிக்கி... ஐயோ இப்பவும் ரோமம் சிலிர்க்குது பாருங்கோ...



அவ்வளவு சனத்துக்குள்ளால அவள் என்னைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரிச்சாள்... நான் செத்தே போனன்...

கந்தசாமியார் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிருர். ஆடினு ஆடட்டுமன்... எனக்கென்ன? நானுந்தான் ஆடிப்போய் நிக்கிறன்...

என்னைப் பார்த்து அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிருள். பக்கத்தில நிண்ட பெண்ணுக்கும் (ஆள் பரவாயில்லை) என்னைக் காட்டிக் காட்டிச் சிரிக்கிருள்... எனக்கெண்டாச் சந்தோஷம் கிளம்பியிட்டுது...

கண்ணால ஒரு வெட்டு வெட்டி... (என்ன யோசிக்கிறியள்?) கண்ணடிச்சன் பாருங்கோ... அதுக்குப்பிறகு அவள் என்ரை பக்கமே திரும்பிப் பார்க்கயில்லை... வெக்கம் ஆருக்கும் உள்ளதுதானே?

'என்ரை ராசாத்திக்கு வெக்கம் வந்திட்டுதுபோல' நான் விடுவனே? என்ரை காதல் கண்ணடிப்பு தொடர... 'உவள் பார்த்தா என்ன பார்க்காட்டியென்ன?' என்ரை கடமையை நான் செய்யத்தானேவேணும்...

விடாம அரைமணித்தியாலமா நான் கண்ணடிச்சுக் கொண்டே நிண்டன் அதுவே பிறகு எனக்குப் பழக்கமாப் போச்சுது... அண்டையில இருந்து என்ரை கண்விடாமல் அடிச்சுக்கொண்டுதானிருக்குது...' கண்ணடி மன்னன்' பட்டமும் வந்து சேர்ந்திட்டுது.

★ ★ ★

அதுக்குப்பிறகுஎத்தினையோ திருவிழாக்கள் வந்துபோயிட்டுது... அவளுந்தான் வந்து வந்துபோருள்...நானும் விடாமல் கண்ணடிச்சுக்கொண்டு தான் இருக்கிறன். அவளுக்கு என்னில இருக்கிற 'இது' கொஞ்சங்கூட மாறயில்லை. என்னைக்கண்டால் அவளுக்கு ஒரே சிரிப்புத்தான்...

'பாவம்...ராசாத்தி'..இந்த ஊர்ச்சனங்கள் பொருமை பிடிச்சதுகள் என்னைப் போல ஒருவடிவான ஆம்பிளைக்கு அவளைக் கட்டிக் குடுத்தா குறைஞ்சே போவினம்?

அவளை எப்பிடியோ ஏமாத்தி இன்னொருத்தனுக்குக் கலியாணம்செய்து குடுத்திட்டுதுகள்... ஆனா என்ன? அவளின்ரை கலியாண வீட்டுக்குச் சோடினை [illegible] டெல்லாம் ஐயாதான்...

அந்தநேரத்திலும் அவளை நான் பார்த்து நான் கண்ணடிக்க... அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க... ஒரே கும்மாளந்தான் போங்கோ...

போனவருஷங்கூட... அவள் தன்ரை அஞ்சு வயசுப் பெடியனோடையும் புருஷனோடையும் திருவிழாவில் நிக்கிருள்...என்னைக் கண்டதுதான்தாமதம் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிருள்... புருஷனுக்கும் பெடியனுக்கும் என்னைக் காட்டிக் காட்டிச்சிரிக்கிருள்...

'அவள் என்னை மறக்கேல்லை...'

எனக்கு ஒரே சந்தோஷம்... பெடியன் அவ்வளவு எழுப்பமில்லை...என்னைப்போல பல்லு கொஞ்சங்கூட மிதப்பில்லை... குறைஞ்சபட்சம் ஒரு செல்லவாக்காவது இருந்திருக்கலாம் என்ன செய்யிறது? அது அவரவற்றை தலையெழுத்து...

எனக்கு ஒரே சந்தோஷம். அவள் கலியாணம் செய்தாலென்ன? செய்யாட்டில் என்ன? என்ரை கண் வழக்கம் போலத் தன்ரை வேலையைச் செய்ய... அவள் பிறகு என்னைப் பார்க்கவேயில்லை... எனக்கு விளங்கியிட்டுது...

'அவள் வெக்கப்படுகிருள்... எண்டு'

சந்தோஷம் தாங்காமல் நான் சிரிக்கத் துவங்கினன் கண்ணால தண்ணி பொல பொலவெண்டு வழிய... நான் சிரிக்கத் துவங்கினன்... அண்டைக்குத் துவங்கின சிரிப்புத் தான்... பிறகு அது நிற்கவேயில்லை...

கண்ணால ஆனந்தக் கண்ணீர்ஒழுகிறதும் நிக்கயில்லை... கண்ணடிப்பு... கண்ணீர்... சிரிப்பு... மூண்டும் என்னோடை நிலைச்சிட்டுது. ஆரைக் கண்டாலும் கண்ணடிப்பு... சிரிப்பு... கண்ணீர் ஊர்ச்சனங்கள் எனக்கு மளமளவெண்டு பட்டத்துக்கு மேல பட்டமாகச் சூட்டுதுகள்.

'அரைலூஸ்... அழுகுணி...' இதெல்லாம் அவளால் வந்த பட்டங்கள்... அவளை மறக்க ஏலுமா?

போனமாதம்... திருவிழாவுக்கு முதல்நாள்... நாளைக்கு அவள் கோவிலுக்கு வருவாள் தானே... எனக்கு நெஞ்சு பக்கு பக்கு எண்டு அடிக்குது... உடைஞ்ச கண்ணாடிக்கு முன்னால நிண்டு... சிரிக்கிறேன்.

நாளைக்கு அவள் என்னைக் கண்டவுடனே இப்பிடிச் சிரிப்பாள்... பிறகு நான் இப்பிடிக் கண்ணடிப்பன்... பிறகு... பெரிய இட்டத் தோடை நான் நிக்கிறன்... இடிரெண்டு பெரிய பெரிய வெடி சத்தங்கள் கேக்குது... 'டொாம்... டமார்... டப் டப்... டுப்டுப்... டொய்ங்...'

காது கிழியிற சத்தம்... எனக்கெண்டா ஒண்டும் விளங்கயில்லை... 'திருவிழா நாளைக்குத் தானே. இன்டைக்கேன் வெடி சுடுருங்கள்...?'

என்ரை கொட்டில் ஒழுங்கையால சனங்கள் ஓடுது... ஐயோ குழறிக்கொண்டு ஓடுதுகள்...

'ஓடுறவை ஓடட்டும்... நான்ஓடமாட்டன். நாளைக்கு கோயிலுக்கு ராசாத்தி வருவாள்... நான் கண்ணடிக்க வேணும்... அதுசரி... ஷெல் அடிக்கிருங்களாம்... அப்பிடி எண்டால் என்ன? அதுக்சேன் விசர்ச்சனங்கள் இப்பிடி ஓடுதுகள்...

எனக்கேன் அந்தக் கவலை? நாளைக்கு அவள் வருவாள்... நான் தயாரா இருக்க வேணும். நான் உடைஞ்ச கண்ணாடிக்கு முன்னால நிக்க... 'டொம்... டெய்ங்... சத்தம் கேட்டுக் கொண்டே இருக்குது...

விலாசமா வெளிக்கிட்டுக் கொண்டு கோயிலில் நிக்கிறன். சனம் குறைவு. அவளையும் காணயில்லை. எனக்கு நெஞ்சுக்க ஏதோ செய்யுது...

கந்தசாமியார் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிருர். அவருக்கென்ன கவலை...? ஒண்டுக்கு ரண்டு... என்ரை கவலை எனக்கு...

குட்டிபோட்ட பூனை மாதிரி நாலு வீதியிலும் விசுக்கி விசுக்கி நடந்து தேரடி வசந்த மண்டபம் எல்லாம் தேடி......

'ஏன் அவள் வரவில்லை...? என்னை மறந்திட்டாளோ?

எனக்குள்ள ஆரோ பிருண்டுகிருர்கள். ஆரடா அது? கொஞ்சமும் விளங்கயில்லை. பல்லறுந்த சக்கரம் மாதிரி கிருக்...... கிருக்...... எண்டு மூளையுக்கை என்னவோ......

கிறுகிறுவெண்டு அவளின்ரை வீட்டுக்கு ஓடிப் போனன்... சந்தியால திரும்பி ஒழுங்கையுக்கை பூந்து... ஒண்டாம் வளைவு... இரண்டாம் வளைவு... வீடு வந்திட்டுது... அவளின்ரை வீட்டுக்கு முன்னால ஒரே சனக்கூட்டம்... ஊர்ச்சனமெல்லாம் அங்கைதான் நிக்குது...

'அவள் திருவிழாவுக்கு வராததால திருவிழா அவளின்ரை வீட்டில நடக்குதோ? இருக்கும். நான் சிரிச்சபடி உள்ளுக்குப் போறன்.

என்ன இது... வீடெல்லாம் இடிஞ்சு போய்க்கிடக்கு. ஆரை வளத்திருக்கினம்? முகமெல்லாம் ஏனிப்பிடி சக்கையாக் கிடக்குது... அவள் போன திருவிழாவுக்குப் போட்டுக்கொண்டு வந்த சீலையைத்தானே உடுத்திருக்கினம். குத்துவிளக்கு எரிக்கிருங்கள்... சாம்பிராணி மணக்குது... ஆரை இப்பிடிக் கிடத்திக் கிடக்குது...'

எனக்கு ஒண்டும் விளங்கயில்லை... மண்டையிலே புழுக்குடைகிறது.

கந்தசாமி வாத்தியார் என்னைக் கண்டிட்டு வேகமாப் பக்கத்தில வாருர்.

'டேய் அரைலூஸ்... இவ்வளவு நேரமும் எங்கை துலைஞ்சனி... ஓடிப்போய் என்ரை வளவுக்கை நல்ல கமுகாப் பார்த்து ஒண்டு தறிச்சுக் கொண்டு வா...'

எனக்குச் சொன்ன கையோடை வாத்தியார் இன்னொருத்தருக்கு விளங்கப் படுத்திருர்.

'இவள் ராசாத்தி குசினியிக்கை இருந்திருக்கிருள். ஷெல் நேரவந்து தலையில இறங்கி... தலை பிளந்து போச்சுது...'

'டேய்...' எண்டு அலறிக் கொண்டே நான் கந்தசாமி வாத்தியார் மேல பாய்ஞ்சு... கடிச்சுக் குதறி... தடுக்க வந்த இரண்டொருத்தருக்கு கிளுவங் கதியால் முறிச்சு மண்டையைப் பிளந்து......

'என்ரை ராசாத்தி நாளைக்குத் திருவிழாவுக்கு வருவாள்...' சத்தமிட்டுச் சிரிச்சபடி அட்டகாசம் செய்யிறன் நான்...

இந்த ஊர்ச்சனங்களெல்லாம் சேர்ந்து எனக்கு 'முத்தின விசர்' எண்டு இன்னொரு பட்டம் தருதுகள். பட்டந் தந்ததில எனக்குச் சந்தோஷந்தான். அதுக்காக நாலஞ்சு பேராச் சேர்ந்து பிடிச்சு அடிச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்க் கட்டி வைக்கவேணுமே...?

'விடுங்கோடா... என்ரை ராசாத்தி கோயிலுக்கு வரப் போருள்...' பெரிசாகச் சிரிச்சபடி நான் அட்டகாசம் செய்ய... சிவப்பிரகாசம் மாஸ்ரர் தலையிலடித்தபடி கேலியாகச் சிரிக்கிருர்.'

எனக்கெண்டா அவரைப் பார்க்கத்தான் பாவமா... சிரிப்புச் சிரிப்பா வருகுது.

(யாவும் கற்பனை)

- பொ. கணேசமூர்த்தி -

சஞ்சீவி சிறுகதை


# ஆங்கிலம்
## பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

'உங்கள் நிறுவனத்தின் மூலம் பெருமளவு நல்ல பலா பலன்களைப் பெற்றுள்ளேன். ஓர் ஆசிரியர் பக்கத்தில் இருந்து படித்துக் கொடுப்பதிலும் பார்க்க தபால் மூலம் தெளிவாகப் படித்துக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

**செல்வன் ஜி. சத்தியசிவன்,**
79/15, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி.

'Well Began is half Done' என்பார்கள். அதேபோல் உங்களது தபால்மூலம் ஆங்கில கல்விச் சேவையும் ஆரம்பமே சிறந்ததா உள்ளது.

**செல்வி மும்தாஸ் முகமட்**
பராக்கதெனியா, வாதுவ.

I thank you very much for your useful and nice Training,

**செல்வி கலாநிதி பொன்னுத்துரை,**
நொச்சிமோடை G. M. T. S, ஓமந்தை.

'உங்களிடம் மூன்றுமாதத்தில் ஆங்கிலம் திறம்படக் கற்றுக்கொண்டேன். 75% விளக்கமாகக் கற்றுக்கொண்டேன். உங்கள் நிறுவன -பால்மூலம் கல்விச்சேவை வளர்க. அடுத்த உங்களது கல்விச் சேவையில் தொடர்புகொள்வோம்.

**செல்வி சிவகௌரி வேலுப்பிள்ளை,**
நுணசை ரோட், மாதகல்.

'தங்கள் நிறுவன ஆங்கிலப் பயிற்சிகள் படிப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கின்றது'

**செல்வி எஸ். சரோஜினி,**
99, சென். பெனடிக் மாவத்தை, கொழும்பு-13

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
P. O. Box 162, COLOMBO
(C/2353)


# அன்றும் இன்றும்

அன்று—
விடுதலையன் வேலையற்றவன்
ஊதாரி உதவாக்கரை
இப்படி எனக்கு நாமகரணம்
சூட்டியவர்கள்
இன்று—
உத்தமன் உழைப்பாளி
உதாரணகர்த்தா உயர்ந்தவன்
என்றெல்லாம் சொந்தம்
கொண்டாடுகின்றுர்கள்
அன்று—
சொந்த மாமன்மகளை
சொந்தமாக்க அலைந்தபோது
சோம்பேறி என்று
என்னைச் சிறையிடமறுத்த
மச்சாள்
இன்று—
அன்புள்ள அத்தானே
உன்னோடு செத்தேனே
என்றெல்லாம் கவிதை
ரூபத்தில் கடிதம் வரைகின்றுள்.
அன்று—
பீடி மன்னனுக்கு மகளைக்
கொடுக்கவா
என்ற மானஸ்தர்கள்
இன்று—
பீடிகைபோட்டு
எங்கள் வீட்டிற்கு
ஊர்வலம் வருகிருர்கள்
- தங்கள் பெண்களை
எனக்குத்தத்தம் செய்ய
இவையனைத்தும்—
எனக்காக வல்ல
என் வெளிநாட்டுப்
பணத்துக்காக

—செவ்வந்தி மகாலிங்கம்

# ஓ....இரண்டாயிரம்!

இடம் பெயர்ந்தோருக்கான
இரண்டாயிரம் ரூபாய்க்காய்
என் குடும்பம் இரண்டாக...
முன் வீட்டு
முத்தனும், மகன் முருகனும்
சண்டைபோட்டுப்-பிரிந்து
முருகன் தனிக் குடித்தனம் போக
பக்கத்து வீட்டுப் பார்வதி ஆச்சி
மகளை விட்டுவிட்டு
மகள் வீட்டில்
'அனெக்ஸ்' ஆக குடியேற,
பின் வீட்டில்
ஒரு அடுப்பில் சமைத்த
மகேசும், மகளும்
தனித்தனியே சமைத்திட,
அயல் வீடோ
மூன்றுகி......
அப்பப்பா......
நமதூரில்
எத்தனை எத்தனை
புதிய
புதிய குடும்பங்கள்

— அத்தியூரான்


# MILLERS LIMITED
## Nominated Wholesalers

Millers Limited engaged in marketing a range of well known consumer products require Nominated Wholesalers in the following areas:

JAFFNA, VAVUNIYA, MANNAR, MULLAITIVU, BATTICALOA, TRINCOMALEE.

Applicants should be resident in the selected area, of sound financial standing, adequate storage and transport facilities. Preference will be given to applicants currently engaged in distributing consumer goods.

Applications should reach this office not later than Friday 16 th June, 1989 addressed to the

General Manager,
Millers Limited,
50, York Street,
Colombo 1.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் தாக்கரே வாழ்வில்...

புகழ்பெற்ற எழுத்தாளர் தாக்கரே ஒரு முறை லோறன்ஸ் என்ற ஓவியரிடம் தன் படத்தை வரைவதற்காகச் சென்றிருந்தார்.

அப்போது அந்த ஓவியர், 'உங்களுடைய படத்தைக் கால்வரை முழு நீளமாக வரையவேண்டுமா? அல்லது இடுப்புவரை இருந்தால் போல் போதுமா?'— என்று கேட்டார்.

அதற்குத் தாக்கரே— 'போர் வீரர்களுக்கு அவர்களின் கால் வலிமையைக் காட்டுவதற்காக முழு நீளப் படம் வேண்டும்! ஆனுல் என்னைப் போன்ற எழுத்தாளருக்குத் தலைதான் முக்கியம்'— என்ருர். ★

## நீல நிற ரோஜா ...

நீல நிற ரோஜா மலரை விரைவில் உருவாக்கி விடலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் உள்ள பூச்செடிகள் பற்றிய நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் இதற்கான ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நீல நிற ரோஜா மலரை உருவாக்கும் முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். ★

## பூனை பற்றி...



பூனை இல்லாத இடமே இல்லை.

புதுடில்லியில் பிரபலமானது டாக்டர் ராம்மனேகர் லோகிய ஆஸ்பத்திரி.

உயர் அரசியல் வாதிகள் சிகிச்சைபெற இந்த மருத்துவமனையைத்தான் நாடுவது வழக்கமாகிவிட்டது.

அங்குள்ள சத்திரசிகிச்சை அறையின் கண்ணுடிக் கதவுகளை உடைத்துக்கொண்டு ஒரு பூனை நுழைந்தது.

அங்கு அது நான்கு குட்டிகளைப்போட்டது.

இதன்காரணமாக நோய் பரவும் ஆபத்து இருப்பதாகக் கூறி சத்திரசிகிச்சை அறை நான்கு தினங்கள் பூட்டப்பட்டது.

பூனையின் இந்த அட்டகாசம் பற்றி புதுடில்லி நாடாளுமன்றக் கூட்டத்தில் சுகாதார அமைச்சரே தகவல் வெளியிடவேண்டியதாயிற்று. ★

## ராட்சத ஈ

வண்ணத்திப்பூச்சி அளவுக்கு உள்ள ராட்சத ஈ ஒன்று நியூசிலாந்தில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது.

Exsul Singulasus எனப்படும் இந்த ஈ உலகில் மிகவும் அரியது என்று கருதப்படுகிறது.

1941 க்குப் பின்னர் இது காணப்படாமல் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

நியூசிலாந்தில்ருனேடின் நகரைச் சேர்ந்த ஜொமி மொரீஸ் என்ற 5 வயதுச் சிறுவன் தற்செயலாக இந்த ஈயைத் தனது வீட்டருகே கண்டான்.

இதன் கருமை வாய்ந்த சிறகுகள் மீது வெயில் பட்டால் சிறகுகள் சூடேறுகின்றன. உடனே அந்த ஈ பறக்க ஆரம்பிக்கிறது.

இந்த ஈயின் லார்வா இதுவரை எங்கும் காணப்பட்டது கிடையாது. அது ஐந்து சென்ரி மீற்றர் நீளம் இருக்கலாம் என்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. ★

## மாதம் ஓர் ஆஸ்பிரின் கண்ணுக்கு நல்லதா?

மாதத்திற்கு ஓர் 'ஆஸ்பிரின்' மாத்திரைக்கு மேல் சாப்பிடுபவருக்கு கண்புரை நோய் (Cataract) ஏற்படும் வாய்ப்பு மிகவும் குறைவு என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இது பற்றி இந்திய - அமெரிக்க கூட்டு ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

ஆயிரத்து 400 நோயாளர்களைப் பரிசோதித்தபோது இந்த உண்மை தெரியவந்தது. ★

## பாலைவன 'நதி'

பாலைவனம் ஊடாக செயற்கை நதி ஒன்றை அமைக்க லிபியா திட்டமிட்டிருக்கிறது.

சஹாரா பாலைவனம் வழியாக மத்தியத்தரைக் கடல் பகுதிக்கு ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கு குழாய் மூலம் நிலத்தடி தண்ணீரைக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டு அதற்கான பணிகளும் தொடங்கப்பட்டு விட்டது.

பாலைவனம் வழியாக உருவாக்கப்படும் இந்தச் செயற்கை நிதித்திட்டத்துக்கு இலங்கைப் பணத்தில் 80 ஆயிரம் கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முதல் கட்டப்பணி இந்த ஆண்டு இறுதியில் முடிவடையும்.

செயற்கை நிதி மூலம் கடற்கரைப் பகுதிப் பட்டினங்களுக்குத் தினமும் 20 லட்சம் கன மீற்றர் தண்ணீர் கிடைக்கும். ★

## மூன்று நாடுகளின் விடுமுறைகள்

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிடையே வர்த்தக உறவுகள் வாரத்தில் 3½ தினங்கள்தான் இடம் பெற முடியும்.

ஏன்? எப்படி?

பங்களாதேஷில் வாரத்தில் வியாழக்கிழமை அரைநாள் விடுமுறை, வெள்ளிக்கிழமை முழுநாள் விடுமுறை.

நேபாளத்தில் வாரத்தில் வெள்ளிக்கிழமை அரைநாள் விடுமுறை சனிக்கிழமை முழு நாள் விடுமுறை.

இந்தியாவில் சனிக்கிழமை அரைநாள் அல்லது முழுநாள் விடுமுறை, ஞாயிற்றுக்கிழமை வாரவிடுமுறை. ★

## தண்ணீரில் ஓடும் சைக்கிள்

தண்ணீரிலும் சைக்கிள் ஓட்டலாம்; தரையில் மட்டும் தான் ஓட்டவேண்டும் என்பதில்லை.

நீரில் ஓட்டக்கூடிய சைக்கிள் ஆஸ்திரேலியாவில் விற்பனைக்கு வந்துள்ளது.

மூன்று சக்கர சைக்கிள் இது. இதில் இரண்டு பேர் அமர்ந்து கொண்டு பெடல் செய்யலாம்.

சைக்கிள் அலுமீனியத்திலும் சக்கரங்கள் பொலித்தீன் என்ற பிளாஸ்டிக்கிலும் செய்யப்பட்டுள்ளது.

சக்கரங்களில் காற்றை நிரப்பிக் கொண்டு தண்ணீரில் இறங்க வேண்டியது தான். ★

## பம்பாய்க்கு வரும் ஆபத்து

அடுத்த 30 அல்லது 40 ஆண்டுகளில் பம்பாய் நகரின் மூன்றில் ஒரு பகுதி கடலில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

பனிப் பிரதேசமான வட துருவத்தில் பனிக் கட்டிகள் பெருமளவில் உருகி கடல் நீர் மட்டம் உயரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அப்போது பம்பாயின் ஒரு பகுதி கடலில் மூழ்கிவிடும் என்று புவியியல் விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ★

பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

# குடும்பம் என்று ஒரு கோயில்;
# அமெரிக்க அரசு பிரசாரம்!

கணவன், மனைவி, குழந்தை, குடும்பம்— இது கீழைத்தேய கலாசாரம்.

இதனைப் பின்பற்றி வாழும்படி அமெரிக்க அரசு தனது மக்களிடையே பிரசாரம் செய்யத் துவங்கியுள்ளது.

இப்பிரசாரத்தை நடத்த அமெரிக்க அரசைத் தூண்டியது என்ன என்று திகைக்கிறீர்களா?

செக்ஸ் கல்வி மூலம் பள்ளி மாணவிகளின் செக்ஸ் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் ஓர் ஆய்வு கூறுகிறது.

அமெரிக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகள் பதினேழு பதினெட்டு வயதில் கர்ப்பம் தரிப்பது சகஜமாகி விட்டது.

இதனால் கவலை அடைந்த அமெரிக்க அரசு பள்ளிகளில் செக்ஸ் கல்வியை கட்டாய பாடமாகச்சொல்லித்தர உத்தரவிட்டது.

செக்ஸ் என்ருல் என்ன, தவருன செக்ஸ் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய தற்காலிக மற்றும் நிரந்த பாதிப்புகள் என்னென்ன என்பது போன்ற சகல விபரங்களும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஒடியோ, வீடியோ, விரிவுரைகள் மூலம் விரிவாக கற்பிக்கப்படுகிறது.

ஆனுல் செக்ஸ் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும் பள்ளி மாணவ மாணவியரின் செக்ஸ் நடவடிக்கைகள் குறையவில்லை என்ற தகவலை அந்நாட்டின் பிரபலமான மருத்துவ பத்திரிகை ஒன்று ஆய்வு மூலம் கண்டறிந்து வெளியிட்டுள்ளது.

'இன்னமும் அமெரிக்காவில் ஆண்டுதோறும் 10 லட்சம் மாணவிகள் பள்ளிப் படிப்பு முடிவதற்குள் தாயாகி விடுகின்றனர்.

15, 16 வயது மாணவிகள் மட்டுமே செக்ஸ் கல்வியின் விளைவாக தமது உடலுறவு நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டுள்ளனர். அதற்கு மேற்பட்ட வயதினர் செக்ஸ் கல்வியால் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. வழக்கம்போல் தொடர்கின்றனர் என்று அந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

உடலுறவு எப்படி இருக்கும் என்ற ஆர்வத்தைத் தூண்டி பிரசவிப்பது அல்லது தாய்மை அடைவது எப்படி இருக்கும் என்பதை அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ளத் துடிக்கும் ஆர்வம் இதற்குக் காரணமாக இருக்கலாம் என அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது.

எல்லாத் துறையிலும் முன்னேறிய நாடுகள் என்று சொல்லப்படும் அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றில் திருமணம் செய்துகொள்ளாமலே சேர்ந்து வாழ்வது, குழந்தை பெற்றுக்கொள்வது போன்ற செயல்கள் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆனுல் இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் இதனுல் சமுதாயத்தில் ஒட்டுமொத்தமாக ஏற்படக்கூடிய விளைவுகளை நினைத்து அமெரிக்க அரசும் பெற்ருேரும் கவலை அடைந்துள்ளனர்.

இதனைத் தவிர்க்கவே கணவன்– மனைவி– குழந்தை– குடும்பம் என்ற அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள் என நமது கலாசாரத்தைப் பின்பற்றி அந்நாட்டு அரசு பிரசாரம் துவக்கியுள்ளது. ★

## வீட்டினுள்ளும் நச்சுவாயுக் கசிவு!

அணுகுண்டு வெடித்தாலோ, அணு உலை சிதறினுலோதான் நம்மீது கதிரியக்கம் படுமென்பதில்லை.

மிகப்பெரும்பாலான மக்கள் இயற்கையிலுள்ள ரேடான் (Radon) வாயுவின் கதிர்களால் தாக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிருர்கள்.

ஸ்வீடனிலுள்ள லுன்ட் (Lund) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரிஸ்டர் சாமுவேல்சன் (Christer Samuelsson) என்பவர் இயற்கையிலுள்ள ரேடானிலிருந்து இன்றுவரை வெளியிடப்பட்டிருக்கிற கதிர் வீச்சின் அளவை மதிப்பிட ஒரு சாதுரியமான முறையை உருவாக்கியிருக்கிருர்.

ரேடான் வாயு– நிறமும் மணமுமில்லாத ஒரு கதிரியக்க வாயு. அது ஹீலியம், ஓர்கான் ஆகியவற்றை ஒத்த வேதியியல் பண்புகளைக்கொண்டிருக்கிறது.

இயற்கையிலுள்ள யுரேனியம் கதிரியக்கச் சிதைவடையும்போது ரேடான் உருவாகிறது. தரைமட்டத்தில் எல்லா இடங்களிலும் சிறு அளவுகளில் ரேடான் காணப்படும்.

ஆனுல், யுரேனியம் அடங்கிய கருங்கல் நிறைந்த பகுதிகளில் ரேடானின் அளவு கணிசமாக உயர்ந்திருக்கும்.

காற்ருேட்டம் சரியான முறையில்லாத வீடுகளுக்குள் ரேடான்வாயு நிறைந்திருக்கும். கதிர்வீச்சுப் படுதலில் (Exposure) பெரும்பகுதி இந்த ரேடானின் காரணமாகவே ஏற்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா மாநிலத்தில்தெற்கு வடக்காக அமைந்துள்ள ஓர் அகன்ற பட்டைப் பரப்பில் வாழும் கோடிக்கணக்கான மக்கள், வீட்டுக்குள்ளாக கதிரியக்கத்தினுல் பாதிக்கப்படுவதைப்பற்றி விஞ்ஞானிகளுக்குக் குறிப்பான கவலை தோன்றியிருக்கிறது.

அப்பகுதியிலுள்ள வீடுகள் குளிர் தாக்காமலிருப்பதற்காக,'வீட்டுக்குள் காற்ருேட்டமேற்படாதவகையில் வடிவமைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன.

அப்பகுதியிலுள்ள தரையிலிருந்து கணிசமான அளவில் ரேடான் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. ★

## முயல்களின் பிடியில் ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியாவின் சனத்தொகை சுமார் 2கோடி.

ஆனுல் அங்கு வாழும் முயல்களின் எண்ணிக்கை 20கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

முயல்களின் எண்ணிக்கை பயங்கரவேகத்தில் அதிகரித்து வருகிறது.

இரையைத் தேடி அலையும் முயல்கள் கிடைத்ததையெல்லாம் தின்றுவருகின்றன.

ஆஸ்திரேலியாவின் வரலாற்றில் முயல்கள் இந்த அளவுக்குப் பெரும் பிரச்சினையாகியது கிடையாது.

உணவும் தண்ணீரும் கிடைக்காமல் பல ஆயிரம் முயல்கள் மடிகின்றன.

தெற்கு ஆஸ்திரேலியாவில் குவின்யாம்பி கால்நடைப் பண்ணையில் மட்டும் சுமார் 2.4 கோடி முயல்கள் இருக்கின்றனவாம்.

அப்பிராந்தியத்தில் முயல்களைச் சுட்டுக்கொல்ல 12 பேரை பண்ணை நிர்வாகம் அனுப்பிவைத்துள்ளது.

அவர்கள் ஒரு நாளைக்கு 10லட்சம் முயல்கள்வீதம் சுட்டுக்கொன்ருலும் அவற்றின் எண்ணிக்கை பெரிய அளவில் குறைந்துவிடாது என்று கூறப்படுகின்றது.

ஆஸ்திரேலியக் கண்டத்தில் முற்காலத்தில் முயல்களே கிடையாது.

இப்பிராணியை முதன்முதலாக வெள்ளையர்தான் அக்கண்டத்திற்குக் கொண்டு சென்றனர்.

முயல்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் மிகக் கடுமையான கிருமிகள் முயல்களிடையே பரப்பப்பட்டது.

ஆனுல் முயல்கள் அக்கிருமிகளைச் சமாளிக்கும் திறனைப் பெற்றுவிட்டதாகவே தோன்றுகின்றது.

## பிரஷ்னேவ் பெயரில் ரசிகர் மன்றம் ரஷ்யாவில் நிறுவப்பட்டது

ரஷ்யாவில் மறைந்த அதிபர் பிரஷ்னேவ் பெயரில் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

கோர்பச்சேவ் பதவியேற்றபின், ரஷ்ய சமுதாயத்தில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன. யாரும் யார் பெயரிலும் சங்கம் அமைக்கலாம் என்று அரசு அனுமதி அளித்துள்ளது. கோர்பச்சேவின் சீர்திருத்தங்களை ஆதரிப்போர் சங்கம், எதிர்ப்போர் சங்கம் என்ற பெயர்களில்கூட சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தவரிசையில் இப்போது புதிதாக சேர்ந்துள்ளது பிரஷ்னேவ் நண்பர்கள் சங்கம்.

இப்போதைய அரசுக்குப் பிடிக்காத தலைவரான பிரஷ்னேவ் பெயரில் மாஸ்கோ நகரில் 57 பேர் சேர்ந்த சங்கம் அமைத்துள்ள செய்தி, ரஷ்ய டி. வியில் ஒளிபரப்பப்பட்டது.

சங்கத்தின் சில உறுப்பினர்கள் அளித்தபேட்டிகள் சுவையாக இருந்தன.

பிரஷ்னேவ் பெயரில் சங்கம் அமைத்தது ஏன்? என்ற கேள்விக்கு கிடைத்த பதில்களில் சில:

★ பிரஷ்னேவ் ஆட்சிக் காலத்தில் மக்கள் நிம்மதியாகத் தூங்கினர். ஏனென்ருல், நம்மைச்சுற்றி நடப்பது என்ன என்று மக்களுக்கு அப்போது தெரியாது.



கோர்பச்சேவ்

ஆனுல் கோர்பச்சேவ் வந்தபின் எந்தச்செய்தியும் இருட்டடிப்புச் செய்யப்படுவது இல்லை. இதனுல் மக்களின் நிம்மதிபோய்விட்டது.

★ பிரஷ்னேவ் எங்களைப் போல் சாதாரண மனிதராக இருந்தார், எங்களைவிட அவரிடம் குறைகள் அதிகமாக இருந்ததால், அவரை நாங்கள் விரும்புகிருேம்.

★ பிரஷ்னேவ் படுவேகமாகக் கார் ஓட்டுவார். எனவே அவரை எனக்குப் பிடிக்கும்.

★ இதுவரை நான்பார்த்த அதிபர்களில் பிரஷ்னேவின் முகம்தான் வித்தியாசமானது. மரக்கட்டைபோன்ற அந்தமுகத்தில் புன்னகை மலரும்போது மிக நன்ருக இருக்கும். ★

## கலிலியோ கண்டுபிடித்த காலக் கடிகாரம்

விஞ்ஞான மேதை கலிலியோ பைசா நகரில் இருந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுவந்தகாலம்.

உள்ளூர் மாதா கோயிலில் நடந்த ஆராதனைக்கு கலிலியோ சென்றிருந்தார்.

ஏதோ யோசனையில் மாதா கோயிலை அண்ணுந்துபார்த்தார்.

தலைக்குமேல் கூரையில் ஓர் அழகான தொங்கு விளக்கு காற்றில் ஊசலாடிக்கொண்டிருந்தது அவர் கவனத்தைக் கவர்ந்தது.

தொங்கு விளக்கின் ஊசலாட்டத்தை ஆராய்ச்சிநோக்குடன் கலிலியோ கவனிக்கத் தொடங்கினுர்.

ஊசலாடும்போது விளக்கு அசைந்ததூரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டேவந்தது.

ஆனுல் அது தொடக்கத்தில் ஒரு வினுடிக்கு எத்தனை முறை வலம்,'இடம் மாறி மாறிச் சென்றதோ அத்தனை தரமே அசைவின் விசாலம் குறைந்த பொழுதும் சென்றது.

ஊசலாடிய விளக்கு சென்ற தூரம் குறைந்ததே ஒழிய அசைவின் எண்ணிக்கை குறையவேயில்லை.

கடிகாரங்கள் அந்தச் சமயத்தில் நடைமுறைக்கு வரவில்லை ஆதலால் தமது நாடித்துடிப்பைக்கொண்டு அசைந்து ஆடுகிற ஒருபொருளின்சலனத்தில் விசாலம் மாறினுலும் கால அளவு மாருதிருக்கும் என்ற உண்மையின அறிஞர்கள் முன்னிலையில் நிரூபித்துக் காண்பித்தார் கலிலியோ.

இன்று உலகம் முழுவதிலும் நடைமுறையில் இருக்கும் பெண்டுலம் கடிகாரங்கள் கலிலியோ கண்டறிந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டனவையே. ★

## எலிகளின் இறப்பினுல் எய்ட்ஸ் ஆய்வு பாதிப்பு

புற்று நோய், எய்ட்ஸ், நீரிழிவு போன்ற மனிதர்களைத் தாக்கும் நோய்கள் பற்றி ஆய்வுகளை நடத்துவதற்காக எலிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இதற்காக விசேடமாக



எலிகள் பிரான்ஸின் 'மைன்' நகரில் உள்ள ஜாக்ஸன் ஆய்வு கூடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அந்த நிலையத்தில் இம்மாதம் 10 ஆம் திகதி திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 5 லட்சம் எலிகள் கருகி இறந்தன.

இதன் காரணமாக உலகம் முழுவதிலும் பல்வேறு இடங்களில் ஆராய்ச்சிப்பணிகள் பெருமளவில் பாதிக்கப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ★

## பூட்டான் மன்னர் வாங்க மறுத்த இந்திய 'அன்டெனு'

பூட்டான், இந்தியாவின் பாதுகாப்பில் உள்ள ஒரு நாடு.

பூட்டான் மன்னர் ஜிக்மே சிங்காய் வாஸ்சக்.

அண்மையில் இந்திய அரசு டெலிவிஷன் அன்டென்னு ஒன்றை பூட்டான் மன்னருக்கு அன்பளிப்புச் செய்தது.

பூட்டான் மன்னரோ அன்டென்னு அன்பளிப்பு தனக்கு வேண்டாம் என்று மரியாதையாக திருப்பி அனுப்பி விட்டார்.

காரணம்; இந்திய தூரதர்ஷனில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பூட்டான் கலாசாரத்தைப் பாதிப்பதாக உள்ளதாக மன்னர் கருதுவதே.

பூட்டானில் ஒவ்வொரு வீடும் டெலிவிஷன் கழகமாக மாறி வருகிறதாம்.

தனது நாட்டின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தைக் காப்பாற்றுவதற்காக பூட்டான் மன்னர் தனது மாளிகையில் பொருத்தப்பட்ட அன்டென்னுவை அகற்றும்படி உத்தரவிட்டு விட்டார்.

பூட்டானின் ஏனைய வீடுகளில் உள்ள அன்டென்னுக்களும் அகற்றப்பட்டு வருகின்றன.

நேபாளம்–இந்திய நெருக்கடி போன்று பூட்டானிலும் உருவாகிறதா? ★

## சூதாட்டம் பற்றி வள்ளுவப் பெருந்தகை

சூதாடத் தொடங்கியவன் தன் உயிரும் உடைமையும் தன்னை விட்டுப் போகும்வரை அந்தப் பழக்கத்தை விடுவது இல்லை.

முதன் முதலாக அவன் சூதாடத் தொடங்கியவேளை ஒரு ஐந்து ரூபாயை வென்று விடுவான்.

அடேயப்பா! ஐந்து நிமிடத்தில் ஐந்து ரூபாய் வரவா? இனி வேறு தொழில வேண்டாமே என்று நினைப்பான் —

அடுத்த சுற்றில் வந்த 5 ரூபாய் போய்விடும்.

'சே! இது மோசமான விளையாட்டுப் போலிருக்கிறதே'... என்ற அறிவு வராது.

வரும் போகும். அதுதானே விளையாட்டு... என்று ஒரு சமாதானம் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு மேலும் ஆடுவான்...

மூன்ருவது ரவுண்டிலும் இன்னொரு ஐந்து ரூபாய் போய் விடும். இப்போதும் எழமாட்டான்...

'அட... போட்டுத்தானே எடுக்க வேண்டும்–' என்று தத்துவம் பேசுவான்.

ஆக தொடர்ந்து விளையாடிய பணத்தை விட்டுக் கொண்டே இருப்பான்.

'ஏன் இப்படிப் போய் சூதாட்டத்தில் தோற்கிருய்'– என்று கேட்டால்,

'விட்டதைப் பிடிக்கத் தான் விளையாடுகிறேன்'— என்பான்.

இப்படியே விட்டதைப் பிடிக்க, விட்டதைப் பிடிக்க, என்று கூறிக் கடைசியில் வீட்டு விட்டத்தைத்தான் பிடிப்பான். (வீட்டு உத்தரத்தில் தொங்குவான்).

ஒருவனது சூதாட்டவெறியே, முதன் முதலாகக் கிடைத்த வெற்றியினுல் ஏற்பட்ட மயக்கத்தினுல் தான் தொடர்கிறது என்பதைத் திருவள்ளுவர் துல்லியமாகக் கண்டறிந்திருக்கிருர்.

அதனுல்தான் அவர், வென்ருய் என்பதற்காகக் கூட மறுபடி சூதாட்டத்தை நினைக்காதே!' என்று வலியுறுத்திக் கூறுகிருர்.

— புலவர் கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளித்திரையில் கவிதை எழுதும் அசோக்குமார்

ஹிந்தி இலக்கியத்தில் ஈடுபாடு உடையவர்களுக்கு கேதார்நாத் அகர்வாலை நிச்சயம் தெரிந்திருக்கும்.

இலக்கிய உலகிற்கு இவர் செய்திருக்கும் சேவையைப் பாராட்டி இந்திய அரசு பலமுறை இவரைக் கௌரவித்திருக்கிறது.

தனது இலக்கியங்களுக்காக ஏராளமான விருதுகளை வாங்கிக் குவித்தவர் இவர்.

கேதார்நாத் அகர்வால் எப்படிப்பட்ட படைப்பாளி என்பதற்கு வேறு ஒன்றையும் அடையாளம் காட்டத் தேவையில்லை.

நமது ஒளிப்பதிவு வித்தகர் அசோக்குமாரைக் காட்டினுல் போதும்.

ஆம்... கேதார்நாத்தின் புதல்வர்தான் அசோக்குமார்.

தந்தை வெள்ளைத் தாள்களில் கவிதை எழுதினுர். மகனே வெள்ளித் திரையில் கவிதை எழுதுகிருர்.

கடந்த இருபதாண்டுகளில் நூறு படங்களுக்கும் மேல் ஒளிப்பதிவு செய்து புகழ் பெற்றிருக்கிருர் அசோக்குமார்.

திரையுலகில் தனக்கென ஒரு தனியிடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிருர்.

படத்திற்குப் படம் ஏதாவது புதுமைகளைப் புகுத்தி இளைய தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாய்த் திகழ்கிருர். 'காமாக்னி', 'அன்று பெய்த மழையில்' போன்ற படங்களை இவர் இயக்கியுமிருக்கிருர்.

அசோக்குமார் எனும் அதிசயக் கலைஞர் சொன்னுர்:

'சிறு வயதிலிருந்தே புகைப்படமெடுப்பதில் பேரார்வம் கொண்டிருந்தேன். இயற்கைக் காட்சிகளைத் தேடிச் சென்று புகைப்படமெடுப்பேன்.

விண்ணை முட்டும் மலைச் சிகரங்கள், ஓடிச் செல்லும் மேகங்களைப் பிடித்துவிடுகிறேன் பார் என ஓங்கி நிற்கும் மரங்கள், எங்கெங்கு நோக்கினும் பச்சையாடை கட்டித் திகழும் பரந்த பூமி......

## இயற்கை வனப்பு

இப்படி இயற்கையின் வனப்பில் எனது இதயத்தைப் படுகொடுத்திருக்கிறேன்.

கண்ணை விட்டு அகலாத அந்தக் காட்சிகளையெல்லாம் காமராவுக்குள் கட்டிப்போட வேண்டுமென்று நினைத்தேன்.

எனது கலைப் பயணத்திற்கு உறவினர்களும் சரி, நண்பர்களும் சரி யாரும் தடை போடவில்லை.

சென்னை திரைப்படக் கல்லூரியில் 'சினிமாடோகிராபி' பயிற்சியை மூன்றுண்டுகள் மேற்கொண்டேன். 1966 இல் என் திரைப் பிரவேசம் நிகழ்ந்தது. 'ஜன்ம பூமி' எனும் மலையாளப் படத்தை நானே சொந்தமாகத் தயாரித்து ஒளிப்பதிவு செய்தேன்.

ஃபிலிம் பைனன்ஸ் கார்ப்பரேஷன் அதற்கு நிதி உதவி அளித்தது. தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் அந்த மலையாளப்படம் அமைந்திருந்ததால் மத்திய அரசின் விருதினைப் பெற்றது. சிறந்த ஒளிப்பதிவுக்கான பிராந்திய விருதையும் பெற்றது.

முதல் படத்திலேயே இரண்டு விருதுகளைப் பெற்றேன்.

மலையாளத்தில் வெளியான 'செம்பருத்தி, ஸ்வப்னம், மஞ்சில் விரிஞ்ச பூக்கள், தகரா, மை டியர் குட்டிச் சாத்தான்', தமிழில் வெளியான 'உதிரிப் பூக்கள், நெஞ்சத்தைக் கிள்ளாதே' தெலுங்கில் வெளியான 'காலம் மாறிந்தி' போன்ற படங்கள் இந்தியத் திரை வரலாற்றில் காவியங்களாகக் கருதப்படுகின்றன.

இந்தப் படங்களுக்கெல்லாம் ஒளிப்பதிவு செய்ததன் மூலம் அதன் வெற்றிகளுக்கு நானும் ஒரு காரணமாக இருந்திருக்கிறேன் என்பதை நினைக்கும்போது மகிழ்கிறது என் மனம்.

## மைடியர் குட்டிச்சாத்தான்

எனது இருபதாண்டுகளுக்கும் மேலான கலைப்பணியில் எனக்குச் சவாலாக அமைந்த படம் 'மை டியர் குட்டிச் சாத்தான்!'

அயல்நாடுகளுக்கு இணையாக இந்தியாவில் முதன்முதலாக 3-டி படத்தை ஒளிப்பதிவு செய்து அந்தப் பேரையும் தட்டிச் செல்லவேண்டுமென்று நினைத்தேன்.

பல ஆராய்ச்சிகள் செய்து பார்த்த பின்னரே அப்படி ஒரு சோதனையில் இறங்குவதென முடிவெடுத்தேன்.

அனைவரது கடும் உழைப்பாலும் உருவான குட்டிச் சாத்தான் படம் வரலாறு கண்டிராத அளவில் வசூலை வாரிக் குவித்தது.

3-டி என்பது ஒரு அதிசயமான டெக்னிக். அந்த அதிசயத்தை அடிக்கடி பார்க்க மக்கள் விரும்ப மாட்டார்கள். அது மட்டுமன்றி 3-டி படமென்றுல் அதற்கேற்ற கதையமைப்பும் காட்சி அமைப்புகளும் இருக்க வேண்டும்.

அதனுல்தான் குட்டிச்சாத்தானுக்குப் பிறகு வந்த 3-டி டெக்னிக் படங்களெல்லாம் தோல்வியைத் தழுவின.

இன்னெரு ஐந்து வருஷத்திற்கு அப்படியே ஆறப்போட்டுவிட்டு பிறகு நல்ல காட்சியமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு 3-டி படம் எடுத்தால் மீண்டும் 'குட்டிச் சாத்தான்' படம் மாதிரி மக்களின் ஆதரவைப் பெறலாம்.

★

# எம். ஜி. ஆர் பற்றி

● எம். ஜி. ஆருக்கு 'பொன்மனச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கியவர் திருமுருக கிருபானந்த வாரியார். ஏன் அந்தப் பட்டத்தினை வழங்குகிறீர்கள்?' எனக் கேட்டதற்கு 'என்னை இயக்குபவன் இறைவன். இறைவன்தான் அவருக்குப் பட்டம் தந்தான்' என்ருர்.

● எம். ஜி. ஆருக்கு டாக்டர் பட்டம் வழங்கியதற்காக சென்னைப் பல்கலைக்கழகம் கூறிய காரணங்கள்:– மனிதாபிமானம்; கொடைத் தன்மை! அபரிமிதமான மக்கள் செல்வாக்கு: நீண்டகால கலைச்சேவை; நீடித்த புகழ், தமிழ்ப்பட உலகிலேயே முதன் முதலாக சிறந்த நடிகருக்கான 'பாரத்' பட்டத்தை மத்திய அரசிடம் இருந்து பெற்றவர் எம். ஜி. ஆர்.

● என். எஸ். கிருஷ்ணனுக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுத் தந்தவர் எம். ஜி. ஆர். தான்.

● ஒரு முறை எம். ஜி. ஆர். கல்கத்தா சென்றிருந்த போது, 'If I were King?' என்ற ஆங்கிலப் படம் பார்த்தார். அக்கதை பிடித்துப் போகவே, இயக்குநராக அதைத் தழுவிதான் முதல் படம் எடுப்பதென நினைத்தார். அதன்படி அவர் எடுத்த முதல் படம் 'நாடோடி மன்னன்'

● எம். ஜி. ஆர். ஒரே ஒரு முறை வானெலி நாடகத்தில் நடித்துள்ளார். 1957 தமிழ்ப் புத்தாண்டு அன்று ஒலிபரப்பான அந்நாடகத்தின் பெயர் இன்பக் கனவு.

வெள்ளித்திரையில்

# நாகேஷின் நகைச்சுவைக் கதை

ஒரு பெரிய தொழிற்சாலையில் அன்ருடம் வேலை முடிந்த நேரம் துப்புரவுப் பணியாள் ஒருவன் உள்ளே நுழைவான்.

சிறிது நேரத்தில் ஒரு கை வண்டியில் காலி மரப்பெட்டிகளை அடுக்கி வைத்துக் கொண்டு வண்டியை இழுத்தபடி வெளியே வருவான்.

வாயிலில் நிற்கும் காவலர் அந்த வண்டியை நிறுத்தி, பெட்டிகளில் ஏதேனும் பொருள்கள் நிரப்பப்பட்டிருக்கிறதா என்று பரிசோதிப்பார்.

> நகைச்சுவை நடிகர் நாகேஷ் தத்துவக் கதைகள் சொல்வதில் வல்லவர். அவர் சொன்ன கதை ஒன்று இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

இவை காலிப்பெட்டிகள் தான் என்று தீர்மானம் ஆனதும் வண்டியை வெளியே செல்ல அனுமதிப்பார்.

இப்படி இது பலகாலம் நடந்து வந்தது.

அப்புறம் அந்தத் தொழிலாளி ஓய்வு பெற்ற காலத்திலேயே அந்த வாயிற்காவலரும் ஓய்வு பெற்ருர்.

ஒருநாள் மாஜி வாயில் காவலர் ஒரு பெரிய பங்களாவில் தனக்கு காவலாள் வேலை கேட்க அதன் முதலாளியை நேரில் போய்ப் பார்த்தார்.

என்ன ஆச்சரியம்?

அந்த பங்களா முதலாளி வேறுயாருமல்ல, பழைய துப்புரவு செய்த தொழிலாளி தான்.

இருவருக்கும் ஒருவருக்கு மற்றவரை அடையாளம் தெரிந்ததும் மனம் விட்டுப் பேசினுர்கள்.

'ஆமாம், துப்புரவு தொழிலாளியாக இருந்த உமக்கு இவ்வளவு பெரிய வசதி எப்படி வந்தது?' என்று மாஜி காவலர் கேட்டார்.

'எல்லாம் உம் தயவால் தான்... நான் வேலை பார்த்த நாட்களில் அன்ருடம் காலி பெட்டிகளைக் கைவண்டியில் வைத்துத் தள்ளிப் போவேன் அல்லவா?'

—என்று மாஜி துப்புரவு தொழிலாளி கூறும்போதே மாஜி காவலர் குறுக்கிட்டார்,

'ஆமாம் அந்தப் பெட்டிகளை நான் பரிசோதனை செய்துதானே வெளியே அனுப்பி வந்தேன். அந்தப் பெட்டிகளில் நீர் எந்தப் பொருளையும் வைத்து கடத்தவில்லையே' என்று கேட்டார்.

மாஜி துப்புரவு தொழிலாளி சிரித்தபடியே சொன்ஞன்.

'நான் கடத்தியது கைவண்டிகளைத்தான்' ★

## ஒஸ்கார் விருதுகளைப் பெற்றவர்

உலகிலே அதிக அளவு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றவர் வால்ட் டிஸ்னி.

66 ஆண்டுகள் உழைத்து 32 ஒஸ்கார் விருதுகளை வால்ட் டிஸ்னி பெற்ருர்.

★


# "டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!

## சிங்கர் எஸ்.வி.300 வீடியோ கெசற் றெக்கோடர்.

எஸ்.வி. 300 வி.சி.ஆர். இன் வடிவமைப்பில் சிங்கர் எலெக்ரோனிக்கின் உன்னதமான தொழில்நுட்பத்தைக் காணலாம். கட்டுப்படியாகும் விலையில் உங்களுக்கு சிறந்த தரமான பல அமைப்புகளைத் தருகிறது.

### தரச்சிறப்புடன், சிக்கனமானது.

உங்கள் அபிமான நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்யுங்கள்

உங்களின் வினேத வேளைகளை நாடாவில் பதிவுசெய்துகொள்ளுங்கள் மிக இலகுவாக ஒருமுறை தொடுவதால் செய்யும் பதிவு. பதிவு செய்வதை எவ்வளவு இலகுவாக்குகிறது. உங்கள் அபிமான நிகழ்ச்சிகளை தவறவிடவேண்டியதே இல்லை. நீங்கள் அருகில் இல்லாத நேரத்திலும்கூட 14 நாட்களில், 4 நிகழ்ச்சிகளை 'டைமர்' உதவியுடன் உங்களுக்காகப் பதிவுசெய்யும்.

நீங்கள் எழுந்திருக்கவேண்டிய அவசியம் கூட இல்லை.

உங்களுக்குப் பிடித்தமான இருக்கையில் அமர்ந்துகொண்டே எஸ்.வி. 300இல் வயர்லெஸ் றிமோட் கொண்ரோல் கருவியினுல் நேரடியாக நிகழ்ச்சிகளைத் தெரிவுசெய்து மகிழலாம்.

இலங்கை பூராவிலும்உள்ள சிங்கர் முன்னணி விற்பனையாளர் அமைப்பு, விசேடமான, விற்பனையின் பின்சேவை ஆகியவற்றினுல் நீங்கள் தொடர்ந்து எஸ்.வி. 300 வி.சி.ஆர் தரும் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கலாம்.




# சிங்கர்




விலை ரூபா. 14,990/-

சிங்கர்*
மாசற்ற மேன்மை

உங்கள் [illegible] நிலைக்கச் செய்கிறது.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## இந்து நாகரிகம்

### பல்லவப் பேரரசர் காலத்து இந்துநாகரிக வளர்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

**தத்துவ வித்து**

வடமொழியிலுள்ள இதிகாச புராணக் கதைகளையும் தத்துவக் கருத்துக்களையும் தமிழில் முதன் முதலாகப் பாடியவர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களுமே.

திருஞானசம்பந்தரது தேவாரங்ளில் வேதக் கருத்துக்கள் பல நேரடியாகக் கூறப்படுகின்றன. வேதக் கருத்துக்களை அள்ளிச் சொரிந்த ஆழ்வார்கள் பாசுரங்களை வைணவத் தமிழ் வேதங்கள் என்று அழைப்பர். பல்லவர்காலப் பக்திப்பாடல்களில் இடம்பெற்ற தத்துவக் கருத்துக்களே வளர்ச்சியடைந்து பிற்காலத்தில் தமிழில் சைவ சித்தாந்த தத்துவம் உருவாகக் காரணமாயின வெனில் அது மிகையாகாது.

**அடியார் வணக்கம்:**

இறைவனை வழிபடுவது மட்டுமன்றி இறைவனின் அடியார்களும் இக்காலத்தில் வழிபாட்டிற் குரியவராகக் கருதப்பட்டனர். சிவனடியே சிந்திக்கும் செல்வர்களைச் சிவனெனவே தொழுதனர் அடியார்களும் பிறரும்.

அன்புநெறியை வலியுறுத்தி நின்ற பக்திப் பிரவாகத்தில் சாதிவேற்றுமைகள் புறக்கணிக்கப்பட்டன.

ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவாழ் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே! என்று பாடுகிறார் அப்பர்.

நாயன்மார் வரிசையில் வேடர், இடையர், வண்ணார், வேளாளர், பிராம்மணர் பாணர் எனப்பல சாதியினர் இடம்பெற்றுள்ளனர். திண்ணனார் நந்தனாரது சரித்திரங்களைச் சைவ உலகம் நன்கறியும்.

சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில் 'அடியார்க்கும் அடியேன்' என்று தமக்கு முன் வாழ்ந்த தொண்டர்கள் எல்லோரையும் புகழ்ந்துபாடுகின்றார்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை வழிபட்டகதை எல்லோரும் அறிந்த ஒன்று.

இதுபோலவே வைஷ்ணவ ஆழ்வார்களும் வைஷ்ணவ அடியார்களைப் போற்றித் துதித்தனர். இதற்குத் தொண்டரடிப்பொடியாழ்வார் பாடல்கள் நல்ல எடுத்துக்காட்டு.

**கட்டடக்கலை**

கட்டடக்கலைத்துறையில் இந்தியா முழுவதற்கும் பெருமைதரத்தக்க சாதனைகள் பல்லவர்காலத்தில் இயற்றப்பட்டன. வட இந்தியாவின் பொற்காலமென வர்ணிக்கப்படும் குப்தர்காலத்திலேயே (கி. பி. 300-600) முதன்முதலாக அழியாத பொருள்களைக்கொண்டு இந்துக்கோயில்கள் கட்டப்பட்டன.

ஆனால் அவற்றில் பெரும்பாலானவை பின்வந்த படையெடுப்பாளர்களால் அழிக்கப்பட்டமையால் ஒருசில கோயில்களின் அழிபாடுகள் மட்டுமே இன்று எமக்குக் கிடைக்கின்றன.

இந்தியாதில் கிடைக்கின்ற மிகப்பழைய முழுமையான இந்துக்கோயில்கள் பல்லவர் காலத்தனவாகும்.

பௌத்தமும் சமணமும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் தமிழ்நாட்டில் இந்துக்கோயில்கள் பல கவனிப்பாரற்றுப்போயின. சில அழிந்தொழிந்தன. சில பௌத்த சமணப் பள்ளிகளாக மாற்றப்பட்டன என்பர்.

ஏழாம் நூற்றுண்டில் நாயன்மார்கள் ஊரூராகச் சென்று ஆலயங்களில் வழிபாடுநடத்தும் முறையை தொடக்கிவைத்தமையால் ஆலய வழிபாடு புத்துயிர்பெற்றது. பழுதடைந்த ஆலயங்கள் திருத்திக் கட்டப்பட்டன. புதிய ஆலயங்கள் பல தோன்றின.

இத்துறையில் பல்லவ அரசர்களே முன்னின்று உழைத்தனர். இலகுவில் அழிக்கமுடியாத கருங்கற்கள் போன்றவற்றைக்கொண்டு, தென்னாட்டில் முதன்முதலாகக்கோயில்களை அமைத்த பெருமை பல்லவ மன்னரையே சாரும் பல்லவர் கட்டிய கோயில்களை மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

முதலாம் மகேந்திரவர்மன் (600-630) மலைகளையும் குன்றுகளையும் குடைந்து கோயில்கள் அமைத்தான். பின்பு சில தூண்களைக்கொண்ட மண்டபத்தையுடைய கோயில்கள் குடைந்தெடுக்கப்பட்டன. இத்தைய கோயில்களை மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி, உந்தவல்லி, திருப்பரங்குன்றம் முதலான இடங்களில் இன்றும் காணலாம்.

மகேந்திரவர்மனது மகனான ராஜசிங்கவர்மன் (630-668) தனிக்குன்றுகளை உள்ளும் புறமும் செதுக்கிக் கோயில்களாக்கினன். இதற்கு மாமல்லபுரத்திலுள்ள பஞ்சரதங்கள் நல்ல எடுத்துக்காட்டு. மூன்றும் கட்டத்திற்கு உரியவை கட்டப்பட்ட கோயில்களாகும். இவற்றிற்கு கடற்கரைக்கோயில், காஞ்சிக் கைலாயநாதர் கோயில், வைகுண்டப்பெருமாள் கோயில் என்பவை நல்ல உதாரணங்கள். முதல் இரண்டையும் கட்டுவித்தவர் இராசசிம்மபல்லவன். மூன்றுவது கோயிலைக் கட்டுவித்தவன் முதலாம் நந்திவர்மபல்லவன்.

கைலாசநாதர் கோயிலும் வைகுண்டப்பெருமாள் கோயிலும் விமானம், வாயிற் கோபுரம், பிராகாரம் ஆகியவற்றையுடைய கோயில்கள். இந்தக் கோயில்களைப் பின்பற்றியே பிற்காலத்தில் சோழர், விஜயநகர மன்னர், நாயக்கமன்னர், முதலியோர் மாபெரும் கோயில்களைக் கட்டுவித்தனர்.

கட்டடக் கலையுடன்சேர்ந்து சிற்பக் கலையும் வளர்ச்சி அடைந்தது. பல்லவர்காலக் கோயில்கள் எல்லாவற்றையும் சிற்பங்கள் அழகுபடுத்துகின்றன. மாமல்லபுரம் ஒரு சிற்பக்கூடம். அங்குள்ள கங்கையின் வருகை அல்லது 'அருச்சுனன் தவம்' என்ற படைப்புச்சிற்பம் உலகப் பிரசித்தமானது.

ஓவியக்கலை இசைக்கலையும் கூட வளர்ந்தன. அவற்றிற்கு முறையே சித்தன்வாசல் குகைக் கோயில் ஓவியங்களும், குருமியாமலை இசைக்கல் வெட்டும் சான்று பகர்கின்றன.

பல்லவர்காலக் கோயில்களில் சமயவாதுகளும் (மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்றமை) கதாப்பிரசங்கங்களும் நடைபெற்றன. இப்படியாக இந்துக் கோயில்கள் கலைக்களஞ்சியங்களாகத் திகழ்ந்தன. அதனுல் ஆலயங்கள் சமுதாய முக்கியத்துவம்வாய்ந்த நிறுவனங்களாக மாறின.

**பரசமய கண்டனம்**

பரசமய கண்டனமும் பல்லவர்காலப் பக்தி இயக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது பக்தி இயக்கத்தின் தொடக்க காலத்திற்கே கூடுதலாகப்பொருந்தும். திருஞானசம்பந்தரது பாடல்களில் சமண சமய கண்டனமும், அச்சமயத்தை இழித்துரைக்கும் அடிகளும் காணப்படுகின்றன. இத்தகைய தொரு சமயப் பொறையின்மைக்கு காலத்தின்சூழ்நிலையே காரணமாகும்.

சமயங்களது பிரசாரம், அவர்கள் திருஞான சம்பந்தருக்குத் இங்குசெய்ய எடுத்த முயற்சிகள், திருநாவுக்கரசருக்கு இழைத்த துன்பங்கள் போன்றவை பக்திப்பாடல்களில் இடம்பெற்ற இந்த எதிர்ப்புணர்ச்சிக்குக் காரணமாகலாம்.

பக்தி இயக்கத்தால் சமண பௌத்தர் செல்வாக்கிழந்தனர். அதனுற்போலும் கி. பி. எட்டாம் ஒன்பதாம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகியோர் பாசுரங்களில் பரசமயக் கண்டனக் கருத்துக்கள் அருகியே காணப்படுகின்றன. மாணிக்கவாசகரதும் அவரோடொத்த காலத்தவரான நம்மாழ்வார் பாடல்களிலும் அனுபவ முதிர்ச்சியினையும், சிறந்த உணர்ச்சி வெளியீட்டினையும் காணலாம். தமிழ் மொழியில் உள்ள சிறந்த உணர்ச்சி வெளியீட்டுப் பாக்களாகிய மாணிக்கவாசகரது பாடல்கள் கல்லையும் கனிந்துருகச் செய்யும் பெற்றிவாய்ந்தவை.

**உட்பகை**

புறச்சமயங்களான சமணம், பௌத்தம் ஆகியவற்றின் நெருக்குவாரம் இருந்தகாலத்தில் வைதிக மதங்களான சைவமும், வைணவமும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வளர்ந்தன. சிவனையும் நாராயணனையும் ஒன்றிணைத்து 'சங்கரநாராயணன்' என்று வழிபட்டமை இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இருந்தாலும் அவை தத்தமது தனித்துவத்தை இழந்துவிடவில்லை.

சமண பௌத்த மதங்களின் ஆபத்து முற்றுக நீங்கிவிட்ட எட்டாம் ஒன்பதாம் நூற்றுண்டுகளில் சைவ வைஷ்ணவ மதங்களுக்கிடையில் போட்டியும் பகைமையும் வளரத் தொடங்கின.

ஆழ்வார்கள் விஷ்ணுவை உயர்த்தியும் சிவனைத் தாழ்த்தியும் சைவநாயன்மார்கள் சிவனை உயர்த்தியும் விஷ்ணுவைத் தாழ்த்தியும் பாடல்கள் பாடினர். அந்தப் போட்டியும் வைதிக மதங்களின் வளர்ச்சிக்கு உதவிற்று!

**ஈழத்தில்**

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இந்தியப் பண்பாடும் இந்துநாகரிகமும் ஈழத்தில் பரவி வந்திருக்கின்றன. இந்தியாவில் தோன்றிய பேரரசுகள் எல்லாமே, அவை இந்துவாயினும் சரி, பௌத்தமாயினும் சரி, ஈழத்தைத் தமது செல்வாக்கிற்குட்படுத்தாமல் விட்டதில்லை. வட இந்தியப் பேரரசர்களான மௌரியரும் குப்தரும் இலங்கையில் தமது நாகரிகத்தைப் பரப்புவதுடன் நின்றுவிட, தென் இந்திய அரசமரபினரான சோழரும் பாண்டியரும் தாம் வலிமை பெற்ற பொழுதெல்லாம் இலங்கைமீது படையெடுத்து, இத்தீவைப் பிடித்து ஆண்டிருக்கின்றனர். படையெடுத்து வந்த இலங்கையைப் பிடித்து ஆட்சி செய்யாமலே, இத்தீவு முழுவதையும் தமது செல்வாக்கிற்குட்படுத்தி, இந்துநாகரிகத்தையும், தமது பண்பாட்டையும் இங்கு பரவச் செய்த சிறப்புக்குரியவர்கள் பல்லவப் பேரரசர்கள்!

மானவர்மன் என்ற சிங்கள இளவரசன் இலங்கையில் தனது ஆட்சியை இழந்து பல்லவநாட்டிற்கு ஓடி, அங்கு அப்பொழுது ஆண்டுகொண்டிருந்த இரண்டாம் நரசிம்மவர்மன் என்று அழைக்கப்படுகின்ற இராஜசிம்ம பல்லவனது (கி. பி 660-700) படை உதவி பெற்று வந்து, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி அனுராதபுரத்தில் அரியணை ஏறினான். அதனுல் இலங்கையில் அறுபது ஆண்டுகளாக நடைபெற்றுவந்த உள்நாட்டுப் போர்கள் முடிவுற்றன. அவனும் அவனது புதல்வர்கள் மட்டுமல்லாது, அவர்களுக்குப் பின்பு அரசுகட்டில் ஏறியவர்களும் பல்லவப்பேரரசிற்கு விசுவாசமாக நடந்துகொண்டதால், சுமார் இருநூறு வருடகாலத்திற்கு இலங்கையில் அமைதி நிலவிற்று.

இக்காலத்தில் ஏராளமான இந்துக்கள் இலங்கையில் வந்து குடியேறினர். தமிழ்நாட்டு வணிகக்குழுமக்கள் இங்கு வந்து வேரூன்றினர். இவர்களுடன் இந்து நாகரிகமும் இங்கு வந்து பரவியது. இவர்களது வழிபாட்டிற்காகப் பல இந்துக்கோயில்கள் கட்டப்பட்டன. சிலாபத்தில் உள்ள முனீஸ்வரம் போன்ற பழம்பெரும் இந்து ஆலயங்கள் சிங்கள மன்னரது ஆதரவைப் பெற்றன. திருக்கோணேஸ்வரத்தின் மீது திருஞானசம்பந்தரும், திருக்கேதீச்சரத்தின் மீது சம்பந்தரும், சுந்தரரும் பதிகங்கள் பாடியருளியதும் இக்காலத்திலாகும். ஆனுல் திருக்கேதீஸ்வரமும் இதற்கு முன்பே புகழ்பெற்று விளங்கியமையினுல் தான் நாயன்மார் அவற்றைப் பாட முன்வந்தனர்.

இலங்கை நாலந்தாவிலுள்ள 'கெடிகே' என்ற கட்டடம் தனிக்கல்லால் ஆனது. இது மாமல்லபுரத்திலுள்ள 'பஞ்சரதங்களின்' சாயலில் அமைந்தது. அனுராதபுரத்தில் இசுருமுனியா என்ற இடத்தில் ஒரு பாறையில் யானைகளும் ஒரு மனிதனின் உருவமும் குதிரையின் தலையும் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் மாமல்லபுரத்திலுள்ள 'கங்கையின் வருகை' என்ற பெயர் பெற்ற புடைப்புச் சிற்பத்தின் செல்வாக்கினைக் காணலாம். பல்லவர்கள் பெரிதும் போற்றி வளர்த்த வடமொழிக்கல்வி இலங்கையிலும் அதிகமாகப் பயிலப்பட்டது.

**தென் கிழக்கு ஆசியா**

பல்லவர் காலத்தில் தென் கிழக்கு ஆசியாவிலும் இந்து நாகரிகம் பரவியமைக்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. அங்கு ஆண்ட அரசமரபினர் பலர் இந்துக்களாக இருந்ததுடன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் போன்ற பல்லவ மன்னர்களைப் போல 'வர்மன்' என்ற முடிவை உடைய பெயர்களைச் சூடியிருந்தனர். பல்லவர் பெரிதும் கையாண்ட பிரஹ்மி எழுத்திலே அவர்கள் பல கல்வெட்டுக்களை விட்டுச் சென்றுள்ளனர். அங்கும் வடமொழி போற்றிப் பயிலப்பட்டது. வடமொழியுடன் சேர்ந்து இந்துக் கலைகளும் அங்கு பரவின.

சிதைந்த நிலையிலுள்ள இந்துக் கோயில்களையும் அவற்றில் இருந்த விக்கிரகங்களையும் தென்கிழக்கு ஆசியாவில் பரவலாகக்காணலாம். அவற்றில் பலவற்றில் பல்லவச் செல்வாக்கு நன்றுகத் தெரிகிறது. ஓர் உதாரணத்தை மட்டும் பார்ப்போம். மலாயாவில் கடாரம் என்ற இடத்தில் ஒரு பழைய சிவன் கோயிலின் எஞ்சிய பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தக் கோயிலின் அருகே இன்னொரு கோயிலும் இருக்கிறது. அதன் கூரை அமைப்பு மாமல்லபுர ரதங்களின் கூரைகளைப்போல அமைந்துள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் பரவியிருந்த இந்து நாகரிகம் என்ற பாடத்தில் இந்த விடயத்தை இன்னும் விரிவாகப் பார்ப்போம். இந்தப் பகுதியில் இந்துநாகரிகத்தைப் பரப்பிய பெருமை ஒரு குறிப்பிட்ட இந்திய அரச மரபுக்கு உரியதல்ல. ஆனுல் அப்பெருமையில் கணிசமான பங்கு பல்லவ அரசர்களுக்கு உரியது என்று கூறினுல் அது மிகையாகாது.

**முடிவுரை**

பெருந்தொகையான பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. ஒரு பக்தி இயக்கம் தோன்றியமையால் புறச் சமயங்களான சமயமும் பௌத்தமும் வலுகுன்ற, சைவமும் வைஷ்ணவமும் செழித்து வளர்ந்தன. அழியாத பொருள்களால் கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களுடன் இணைந்து ஏனைய இந்துக்கலைகளும் வளர்ச்சியுற்றன. இந்துநாகரிகமானது இக்காலத்தில் பல கடல் கடந்த நாடுகளிலும் பரவியது. எனவே பல்லவராட்சிக் காலம், இந்துநாகரிகம் சிறப்புற வளர்ந்த காலங்களில் ஒன்று என்று கூறலாம். ★

**- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -**
[பி. ஏ. (இலங்கை) கல்வியில் டிப்ளோமா]

# கணவன் கடன் இல்லாமல் வாழ இல்லாள் எப்படி உதவ முடியும்?

உங்கள் கணவன் கடன்காரன் ஆகாமல் தடுக்க இல்லத்தரசிகளான உங்களால் முடியும்.

கடன் சுமை தாங்காது மனநோயாளியாகாமல் பாதுகாக்கவும் உங்களால் முடியும்.

முதலில் ஆடம்பர நினைப்பை மூட்டைகட்டி வையுங்கள். அடுத்த வீட்டுப் பெண்போல மாதம் மாதம் பட்டுப்புடைவைகள் வாங்க வேண்டும், எதிர் வீட்டுப் பெண்ணைப்போல 'நெக்லஸ்' போடவேண்டும், புதுப் புதுப் பாத்திரங்கள் வாங்கி அடுக்க வேண்டும் என்று நினைப்பதை தூக்கி எறியுங்கள்.

உங்கள் கணவனின் சம்பளம் 1,500 என்றுல் ஆயிரம் என்று நினைத்துக் கொண்டு அதற்கு ஏற்றபடி செலவு செய்யுங்கள்.

சிறுதுளி பெருவெள்ளம். சின்னச் சின்னக் கடன்கள் சிறிது சிறிதாகப் பெருகிப் பெரும் கடனுக மாறிவிடுகிறது.

எனவே யாரிடமும் ஐந்து ரூபாய்...பத்து ரூபாய் என்று சிறு தொகைகூட கடன் வாங்க வேண்டாம் என்று கணவருக்கு அறிவுரை கூறிக் கொண்டே இருங்கள்.

அலுவலகங்களில் மட்டும் வேலைபார்த்து வரும் சம்பளத்தில் குடும்பத்தை நடத்துவது என்பது சுலபமான விஷயமல்ல. வேறு வழிகளிலும் வருமானத்தைத் தேட வேண்டும்.

உங்கள் கணவர் அலுவலகம் முடிந்து வீடு திரும்பியதும் அவரை வீண் அரட்டைகளில் காலத்தை வீணுக்க விடாமல் உருப்படியாக வருமானத்தைப் பெருக்கும் வழிகளில் ஈடுபடச் செய்யுங்கள்.

அதற்கு முழு உறுதுணையாக நீங்கள் இருப்பது கணவருக்கு உசாரகம் ஊட்டுவனவாக இருக்கும்.

நீங்கள் அலுவலகம் சென்று வேலை செய்யாத பெண்ணுக இருந்தால் உங்கள் ஓய்வு நேரத்தில் வருமானம் தேட முயற்சி செய்யுங்கள்.

உதாரணமாக மாடுகளை வளர்த்து பால் வியாபாரம் செய்தல், கோழிகளை வளர்த்து முட்டை, இறைச்சி விற்பனை செய்தல், சிறுவர் சிறுமியருக்கு ரியூசன் கொடுத்தல், தையல் வேலை தெரிந்தால் தைத்துக் கொடுத்தல்.

இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டு கிடைக்கும் பணத்தைச் சேமித்து முக்கிய தட்டுப்பாடு நேரங்களில் கடனை வாங்காமல் சமாளிக்க முயலுங்கள்.

போலிக் கௌரவங்கள், வறட்டு டாம்பீகங்களை விட்டு விடுங்கள். உங்கள் வீட்டுக்கு உறவினர், நண்பர்கள் வந்தால் நல்ல வார்த்தையால் மட்டும் வரவேற்று உபசரியுங்கள்.

சாப்பாடு, அது, இது... என்று செய்து கொடுத்து செலவுகளைப் பெருக்கி கணவரை மாதக் கடைசியில் கடைக்காரனிடம் கடன் கேட்டு மண்டியிடச் செய்துவிடாதீர்கள்.

வரவுக்கு மேல் செலவு போகாமல் இருக்க கணவருடன் கலந்தாலோசியுங்கள்.

அவசியமான திருமணம், பிறந்தநாள் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளை மிகச் சுருக்கமாக நடத்துங்கள்.

ஊரைக் கூட்டி உறவைக் கூட்டி நடத்திவிட்டு பணம் போதவில்லை என்று கடன்காரனிடம் உங்கள் கணவரைப் போகவிடாதீர்கள்.

எல்லா வரவு, செலவுக்கும் சோம்பேறித்தனம் இல்லாமல் கணக்கு எழுதுங்கள். அப்போதுதான் இவ்வளவு செலவா நமக்கு என்ற பயம் உங்கள் கணவருக்கு வரும்.

சிகரெட் குடிப்பது போன்ற அனுவசியச் செலவுகளைக்கூட இம்முறையால் அவர் குறைத்துக் கொள்ள வாய்ப்பு உண்டு.

அனுவசியச் செலவு இல்லாத போது தட்டுப்பாடு வருவதில்லை. தட்டுப்பாடு இல்லையென்றுல் கடன் வாங்கும் அவசியம் உண்டாவதில்லை.

உங்கள் கணவரை கடன்காரர் என்று யாரும் நினைக்கவே கூடாது என்ற தன்மான உணர்வுடன் உறுதியாகச் செயல்படுங்கள்.

—விஜயா கண்ணன்

# பிரார்த்தனை பலித்தது!

மார்கழிமாத விடுமுறை. வீட்டில் ஒரே சத்தம். 'அப்பா வரட்டும் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறேன்' என்ற தாயார் கனகமணி,

'யாரோ கதவில் தட்டுகிறூர்கள் போய்ப்பார்'.

பிறேம் ஓடிச் சென்று கதவைத் திறந்தான். ஏமாற்றம் தான்.

'அம்மா, எங்கடை லக்கியைப் பாருங்கோ. என்னை ஏமாத்திப் போட்டுது. வா, இன்றைக்கு உனக்குச் சாப்பாடில்லை' என்றுன் பிறேம்.

லக்கி வாலை ஆட்டியபடி அவனுக்கருகே சென்று முட்டிக்கொண்டு நின்றது. அவன் அதைத் தடவிக்கொடுத்தான்.

மீண்டும் யாரோ கதவில் தட்டினுர்கள். பிறேமும் சசியும் ஆவலுடன் ஓடிச்சென்று கதவைத் திறந்தார்கள்.

இரண்டு மாதங்களுக்குப் பின் தந்தையார் இரத்தினராசா வீட்டிற்கு லீவில் வந்தார். இருவரையும் கட்டி அணைத்து முத்தமிட்டார்.

பிறேம் அவசரமாக சூட்கேசைத் திறந்து தனக்குரிய புத்தகங்களை எடுத்துக் கொண்டான். சசியும் தனக்கு விருப்பமான இனிப்புப் பண்டங்களை எடுத்துக்கொண்டாள்.

பிறேம் படிப்பில் நல்ல ஆர்வமுடையவன். அதே போன்று வீட்டிற்கு அருகிலுள்ள ஆலயத்துக்கும் தவறுது சென்று வழிபட்டு வந்தான்.

இரத்தினராசா, குடும்பத்தோடு சென்று படம்பார்க்க விரும்பினுர். மழை பெய்ததையும் பொருட்படுத்தாமல் தமது காரில் சென்றுர்கள். படம் மின்சாரம் தடைப்பட்டமையால் பிந்தி முடிந்தது.

மழை கொட்டிக்கொண்டேயிருந்தது. யாழ் பலாலி வீதியால் சென்றுகொண்டிருந்தார்கள். உவின்ஸ்கிறினில் விழும் மழையை உவைப்பர் அடிக்கடி அகற்றிக்கொண்டிருந்த போதிலும் வீதி தெளிவாகத் தெரியவில்லை. இடிமுழக்கமும் மின்னலும் தொடர்ந்து தமது வித்தைகளைப் புரிந்துகொண்டே இருந்தன.

'அம்மா பயமாயிருக்கு' என்றுள் சசி. இடம்மாறித் தாயின் மடியில் இருந்தாள். ஒவ்வொரு முழக்கத்துக்கும் தாயைக் கட்டிப்பிடித்துக் கொள்ளுவாள்.

பிறேம் அதிகம் பயப்படாமல் எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தான். எப்படியிருந்த போதிலும் அவர்களுக்கு இது ஒரு புது அனுபவம்.

வீதி விளக்குகளும் எரியவில்லை. றேட்டில் வெள்ளம். சனசஞ்சாரமில்லை. வீதியோரத்திலுள்ள வீடுகளிலும் வெளிச்சமில்லை. இரத்தினராசாவுக்குப் பயம் ஏற்படத் தொடங்கியது.

சாரை மெதுவாகச் செலுத்தினுர். அம்பியர்ஸ் மீற்றர் ஆட்டம் கொடுத்தது. காரை நிறுத்தினுர்.

'என்னப்பா, ஏதோ மணக்கிறது' என்றுள் கனகமணி

'ஆம் அப்பா புகைத்து. மணக்குது' என்றுன் பிறேம்.

'ஆம், மணக்குதுதான். என்ன செய்யலாம்' தத்தளித்தார் தந்தை. காரிலிருந்து இறங்கி பொனெற்றைத் திறந்து பற்றரி நட்டைக் கழற்ற முயன்றுர். முடியாதபடியால் இணைப்பு மின்கம்பியை வெட்டினுர். கையில் சிறு எரிகாயமும் ஏற்பட்டது.

**- கோண்டாவிலூர் பூ. க. இராசரத்தினம் -**

மழை தொடர்ந்து பெய்தமையால் மீண்டும் கார்சீற்றில் அமர்ந்து கைகுட்டையால் தலையைத் துடைத்தார்.

'இனிக் கார் ஸ்ராட்பண்ண முடியாது. நாங்கள் காரை ஓடாமல் விட்ட காலத்தில் எலி உள் நுழைந்து வயரை வெட்டியிருக்க வேண்டும் இல்லாவிட்டால் சோட் பண்ணியிருக்காது' என்றுர் இரத்தினராசா.

மின் வெளிச்சத்தின் உதவியோடு பார்த்தபொழுது வீதியில் ஒருவரையும் காணமுடியவில்லை.

'அம்மா வீட்டை போகப் போறேன்' என்றுள் சசி.

'சசி பயப்படவேண்டாம். ஆபத்து நேரத்தில் பிரார்த்தனை செய்தால், உதவி கிடைக்கும் என்று எங்களுடைய யோகராசா ரீச்சர் அடிக்கடி கூறுவார். நீயும் கடவுளைக் கும்பிடு. நானும் கும்பிடுகிறேன்'.

'ஆண்டவா இது என்ன சோதனை?' என்றுர் தந்தை. எல்லோருமாக பிரார்த்தனை செய்தனர்.

சில நிமிடங்களுக்குப் பின் அந்த வழியால் குடையோடும் ரோச்லைற்றோடும் திருச்செல்வம் என்ற மெக்கானிக் சென்று கொண்டிருந்தார். திருச்செல்வம் கோணமலை வயிரவ கோயிலுக்கு முன்னல் கார் கராஜ் வைத்திருந்தார்.

தனக்குப் பழக்கமான கார் இலக்கத்தைக் கண்டதும் இறங்கி விசாரித்தார். நடைபெற்றதை இரத்தினராசா சுருக்கமாகச் சொன்னுர்.

ரோச்லையிற்றின் உதவியோடு எரிந்த மின்கம்பியைக் கண்டுபிடித்து ஆவன செய்தார். பின்பு பற்றரி மின்கம்பியை இணைத்து காரை மீண்டும் செலுத்தக் கூடியதாகச் செய்தார்.

**சிறுவர் கதை**

'அப்பா, இவரைக் கடவுள் தான் அனுப்பியிருக்கிறுர். நாங்கள் கும்பிட்டபடியால் இவரின் உதவி எங்களுக்குக் கிடைத்தது' என்று மகிழ்ச்சியுடன் கூறினுன் பிறேம்.

திருச்செல்வத்துக்கு எப்படி நன்றி கூறுவது என்று இரத்தினராசாவுக்குத் தெரியவில்லை.

'ஏது, இந்தப்பக்கம் இந்த நேரம் வந்தீர்கள்'?

'இன்று நான் அக்கா வீட்டிற்குச் சாப்பிடப் போகவில்லை. நித்திரையாகிவிட்டேன். சில நிமிடங்களுக்கு முன் யாரோ கூப்பிட்டமாதிரியிருந்தது. எழுந்து பார்த்தேன் ஒருவரையும் காணவில்லை. சுடு கோப்பி குடிக்கவேண்டும் போலிருந்தது. அக்காவீட்டே புறப்பட்டேன்' என்றுர் திருச்செல்வம்.

இரத்தினராசா இருபது ரூபாவைக் கொடுக்க விரும்பினுர். திருச்செல்வத்துக்கு சிறிய பையனின் வார்த்தைகள் காதிலே ஒலித்துக் கொண்டிருந்தன. பிறேமின் கைகளைப் பிடித்து முத்தமிட்டுவிட்டு கலங்கிய கண்களுடன் பணத்தையும் பெருது சென்றுர்.

பிறேமின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தனது ஆசிரியை சொன்னபடி பிரார்த்தனை செய்தபடியால் பலன் கிடைத்துவிட்டது என்று உரத்துக் கூறினுன்.

பெற்றேரும் பிரார்த்தனை பலித்துவிட்டது எனக் கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். கடவுளைத் துதித்தனர். பயணத்தைத்தொடர்ந்தனர்.

(உண்மைச் சம்பவத்தைத் தழுவி எழுதப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எந் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர்

தமிழுக்கும் முருகப் பெருமானுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கின்றதோ அவ்வாறே சம்பந்தப் பெருமானுக்கும் உண்டு.

'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'

'இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையால்'

'காசு நித்த நல்கினீர்'

என்று பாடுகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

தம் முற்பிறப்பை உணர்ந்தது போன்று தோணியப்பர் திசை நோக்கி ஓயாமல் அழுவார் குழந்தை.

தன் தந்தை நீரில் மூழ்கி மறைந்ததும் 'அம்மையே', 'அப்பா' என்று அழுகின்றார். அழுகுரல் கேட்டு இறைவன் உமையோடு இடபவாகனத்தில் எழுந்து அருளி அம்மை தன் பாலூட்டிய நிகழ்ச்சியை,

'களப பூண் முலை யூறிய பாலுண்ணு
மதலையாய் மிகு பாடலின் மீறிய
கவியனும் விளையாடிடம் வாதிகள் - சழவேறக்'

உமை முலைப் பாலுண்டு சுருதித் தமிழ்க் கவிபெருமானுக சம்பந்தப் பெருமான் செய்த திருவிளையாடல்களை முருகப் பெருமானே செய்ததாக அருணகிரிநாதர் தம் திருப்புகழில் கூறுகின்றார்.

தான் இறைவனின் திருவொளி என்பதை பதிகத்தில் அவரே கருக்குடி மைந்தன் தன்னொளியான மெய்ஞ்ஞான சம்பந்தன் என்னும் அருமையான வாக்கால் விளக்குகின்றார்.

**- திருமதி. ஈஸ்வரி ஆறுமுகம் -**

முருகப் பெருமானும் இறைவனின் ஒளிதானே. முருகப் பெருமான் தமிழில் விருப்பமுற்று எவ்வாறு பல லீலைகள் செய்தாரோ அதே போல் சம்பந்தரும், பல அற்புதங்களைச் செய்தார். சம்பந்தப் பெருமான் தமிழ் தெய்வத் தமிழ் என்பதற்கு —

அணங்கமர் யாழ்முரித் தாண்பனை பெண்பனையாக்கியமண்
கணங் கழு வேற்றிக் கடுவிடம் தீர்த்து கதவடைத்துப்
பிணங்கலை நீரெதிர் ஓடம் செலுத்தின வெண்பிறையோ
டிணங்கிய மாடச் சிரபுரத் தான் விருந் தமிழே.

என்று கூறுகின்றார் (நம்பி). ஆளுடையபிள்ளை திருவந்தாதி சான்றாகும்.

பாலனாகிய தம் மைந்தன் பாதம் நோகாமல் முத்துப் பல்லக்கும், தாளம் போட்டு கை சிவந்ததினால் பொற்றாளமும் அளிக்கின்றார் இறைவன்.

தமிழ் மீது இருந்த ஆர்வம் அவர் தமது தேவாரத்தில் தமக்கும், தமிழுக்கும் கொடுத்திருக்கும் அடை மொழிகளால் விளங்கும்.

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன். நற்றமிழ்க்கின்றுணை ஞான சம்பந்தன், தமிழ்க் கிழமை ஞானன் என்று அவர் நாமம் பலவாகும்.

சம்பந்தப் பெருமானின் தமிழின் அருமையை உணர்ந்து நெருப்பு தன்னிடை இட்ட ஏட்டை வேகாமற் காத்தும் வைகை தன்னிடை இட்ட ஏட்டை எதிரேறச் செய்தும் உலகிற்குப் பெருவியப்பையீந்த திருவிளையாடல்கள் பலவும் அவரது பாடல்களால் விளங்கும்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழக தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# 'தக்வா' என்றால் என்ன?

'உங்களில் யார் இன்று நோன்பு வைத்தவராக இருக்கின்றார்? என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வினாவுக்கு 'நான்' என்று விடையளித்தார்கள், ஹஜ்ரத் அபூபக்ருஸ் ஸித்தீக் (றலி) அன்ஹூ அவர்கள்.

இன்று உங்களில் யார் ஒரு ஜனாஸாவைப் பின் தொடர்ந்து சென்றீர்கள்? என்ற வினாவுக்கும் 'நான்' என்று விடையளித்தார்கள் ஹஜ்ரத் அபூபக்ருஸ் ஸித்தீக் (றலி) அவர்கள்.

இன்று உங்களில் யார் ஓர் ஏழைக்கு உணவு அளித்தீர்கள்? என்ற வினாவுக்கு 'நான்' என்று விடையளித்தார்கள் ஹஜ்ரத் அபூபக்ருஸ் ஸித்தீக் (றலி) அவர்கள்.

இன்று உங்களில் யார் ஒரு நோயாளியைச் சேமநலன் விசாரித்தீர்கள்? என்ற வினாவுக்கு 'நான்' என்று விடையளித்தார்கள் ஹஜ்ரத் அபூபக்ருஸ் ஸித்தீக் (றலி) அவர்கள்.



இத்தனை அம்சங்களும் ஒருவரிடம் ஒன்றிணைந்து விடுவதில்லை. அவர் தாம் விரும்பும் வாசல் வழியாக சொர்க்கம் போகலாம் என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

உலகம் என்பது என்ன? என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள்,

'அல்லாஹ்வை விட்டு எது உம்மைப் பராக்குச் செய்து விடுமோ அதுதான் உலகம்' என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

'தக்வா' என்றால் என்ன?

ஒருமுறை கலீபா உமரே பாருக் (றலி) அவர்கள் உபைபின்கஅப் (றலி) அவர்களிடம் 'தக்வா' என்றால் என்ன? என்று கேட்டார்கள்.

அதற்கு உபைபின் கஅப் (றலி) அவர்கள், 'அமீருல் முஃமினீன் அவர்களே! இருமருங்கிலும் முட்கள் நிறைந்த செடிகள் வளரும் குறுகிய பாதை வழியே தாங்கள் எப்போதாவது செல்ல நேர்ந்ததுண்டா? எனத் திருப்பிக் கேட்டார்.

கலீபா அவர்கள், 'பல தடவைகள் சென்றிருக்கிறேன்' என்றார்.

'அத்தகைய சமயங்களில் தாங்கள் என்ன செய்வீர்கள்?' என்று மீண்டும் கேட்டார் உபைபின்கஅப் (றலி) அவர்கள்.

'அச்சமயங்களில் எனது உடைகளை முட்களில் படாத வண்ணம் சுருட்டிப்பிடித்துக் கொண்டு மிகவும் கவனமாக நடந்து செல்வேன்' என்றார்கள் கலீபா உமர் (றலி) அவர்கள். 'அதுதான் பரிசுத்தத் தன்மை தக்வா!' என்று கூறினார் உபைபின் கஅப் (றலி) அவர்கள். ஆமாம் வாழ்க்கைப் பாதையில் காணும் தீய முட்புதர்களில் சிக்கிவிடாது தூய வாழ்வு வாழ்வதே தக்வா' எனப்படும். ★

தொகுப்பு: **எம். எம். அபூபக்கர்**

## நபிகள் நாயகம் அருள்வாக்கு


தொழுகையைப் பேணி ஒழுங்காக நிறைவேற்றுபவர்கள் சொர்க்கம் புகுகின்றனர்.

எவர் உணவுப் பொருள்களை நாற்பது நாட்கள்வரை பதுக்கி வைத்து விட்டுப் பின்னர் அதனை அவர் தானம் செய்து விட்டாலும் கூட அது அவர்கள் பதுக்கிய குற்றத்திற்குப் பரிகாரமாக மாட்டாது.

ஒருவருடைய பாவங்கள் மிகைத்து விட்டால் அவற்றிற்குப் பரிகாரமாக்கி வைக்கக்கூடிய அளவிற்கு அவரிடம் நன்மையில்லையானால் அல்லாஹ் அவரை மனக்கவலை கொண்டு சோதிப்பான்.

# தேவனுக்கு முன்பாக தாழ்மையாக நட; இதையே கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்!

அநேக குருடர் எல்லாவற்றையும் செலவழித்துப் பார்வை அடைவதற்காக முயல்கின்றனர். ஆனால் லட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய ஆவிக்குரிய பார்வையை இழந்திருப்பதைக் குறித்துக் கவலையற்றவர்களாக இருக்கிறார்கள்.



பணம், சிற்றின்பம், விபச்சாரம் முதலியவற்றைத் தெய்வமாகக் கொண்டாடுவதன் காரணமாக அவர்களின் கண்கள் இருளடைந்து இருக்கின்றன.

இயேசு உலகத்தில் ஊழியஞ் செய்த காலத்தில் தன்னை நோக்கிக் கூப்பிட்ட யாவருக்கும் பதில் அருளிச் செய்தார்.

'இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்' என்றழைத்த ஏழைப் பிச்சைக்காரனுக்கும் இரங்கினார்.

உன்வாழ்க்கை வெறுமையாயிருக்கிறது என்று உணர்வாயானால், வாழ்க்கையின் நோக்கத்தை நீ அறிய விரும்பினால் இயேசுவண்டை வா. உன்னுடைய சகல பிரச்சினைகளுக்கும் அவரிடத்தில் நிவர்த்தி உண்டு.

மனித உள்ளத்தைத் திருப்தி செய்யக் கூடியது உலகத்தில் ஒன்றுமில்லை. 'உலகத்தை என்னிடத்தில் இருந்து எடுத்துக்கொள். ஆனால் இயேசுவை மட்டும் எனக்குத் தா' என்று நீங்கள் தைரியமாகச் சொல்லலாம். உடன் ஜீவியத்தை அவருக்கு ஒப்புக்கொடு. உன் சித்தத்தை அவர் சித்தத்துக்குள்ளாக்கு.

உன்னை நீ ஒப்புக் கொடுக்கும் போது ஒரு புதிய சக்தி பெறுவாய். இயேசு அளிக்கும் இளைப்பாறுதலை அனுபவிப்பாய்.

துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன். அவர் அவன்மேல் மனமுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக் கடவன். அவர் மன்னிப்பதற்குச் சித்தமாகவுள்ளார்.

### பிராயச்சித்தம்

பிராயச்சித்தத்தின் அவசியத்தைப் பற்றி அநேக மதங்கள் வற்புறுத்துகின்றன. தங்கள் பாவங்களுக்கு ஒரு நிவாரண பலி தேவை என்பதை மக்கள் அனைவரும் உணர்கின்றனர்.

சிலர் மிருகப் பலி செலுத்துகின்றனர். வேறு சிலர் பிள்ளைகளையும் பலிகொடுக்கின்றனர். ஆனால் இவை எல்லாம் நாம் செய்த பாவங்களைப் போக்கும் நிவாரண பலியாகாது. பைபிளில் ஒரு தீர்க்கதரிசி கூறுகிறார்;

என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்மாவின் பாவங்களைப்போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்க வேண்டுமா? (மீகா 6 : 7) ''இல்லை'' என்பதே இக்கேள்வியின் விடை.

''நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது அல்லாமல் வேறு எதனைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்...? (மீகா 6 : 8)

நான் ஜீவனுமாயிருக்கிறேன். வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே...! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.


நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்மாக்களுக்கு இளைப்பாறுத கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்.

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

# சொற்சிலம்பம்

## போட்டி இல: 100



சொற்சிலம்பம் இல: 100
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................

விலாசம்: ..................................

..................................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 31 - 05 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. பத்துப்பாடல்களைக் கொண்ட பிரபந்தம் 4. முடிவு 6. வஞ்சம் 7. விண்மீன் 8. வரவேற் நம் மங்கள உபகரணம் 10. திக்கை குறிப்பது 12. கறுப்பு நிறத்தைக் காட்டுவது 13. கும்பிடு 16. மனம் 18. இல்லறத்திற்குரிய நற்குணங்கள் 20. உள்ளீடற்ற தானியம் 22. மதிப்பதாக இருப்பது 24. வெடிக்கச்செய் 25. உலகம் 26. வினவுதல்.

**மேலிருந்து கீழ்:**

1. காளி 2. தலைகீழாய் நிற்கும் தலைவன் 3. சிறியது காரம் பெரிது 4. காய்ச்சல் 5. விரோதம் 7. தாகம் 9. மயில்துத்தம் 11. சமிக்ஞை 12. சோறு சமைக்கும் போது வடித்து எடுக்கலாம். 14. கன்னி 15. ஊழ் 16. உயரம் 17. தவம் 19. சிலப்பதிகார கதாபாத்திரம் 21. ஒன்றைச் செய்யவிடாமல் தடுப்பது 23. சபதம்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் இடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# நேர்கோடு

நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பிச் சொட்டுச் சொட்டாய் முகத்தில்விழ, சட்டை வியர்வையால் நனைந்து தேகத்தை ஒட்டிப் பிடிக்க களைத்துச் சோர்ந்து வீட்டிற்கு வந்தார் வடிவேலு வாத்தியார்.

கையில் இருந்த குடையைச் சுருக்கி மெல்லக் கேற்றைத் திறந்தார்.

கேற் திறக்கும் சத்தம் கேட்டு விறாந்தைக்கு ஓடி வந்த அவர் மனைவி திலகம் 'மாத்தீட்டீங்களா' என்று ஆவலோடு கேட்டாள்.

அவர் ஒன்றும் பேசாது விறாந்தையில் இருந்த கட்டிலில் அமர்ந்தவாறு 'கொஞ்சம் தண்ணி கொண்டு வா' என்றார்.

ஓடிப்போய் செம்பில் தண்ணிகொண்டு வந்தவள் 'என்ன மாத்தியாச்சா' மீண்டும் கேட்டாள்.

'பத்துக் கடை ஏறி இறங்கிட்டன். ஒருத்தனும் மாத்த மாட்டேங்கிறான்' என்றார் சலித்தபடி.

திலகத்தின் முகத்தில் வேதனை ரேகை படர்ந்தது. 'அரிசி வாங்கவேணும், சீனி வாங்கவேணும். இப்ப என்ன செய்வது' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

இருபதாம் திகதி வர வேண்டிய சம்பளக் காசோலை வாத்தியாருக்கு இருபத்தி மூன்றாம் திகதிதான் வந்தது. அவருடைய கஷ்டகாலம் அன்றையில் இருந்து வங்கி தொடர்ந்து பூட்டப்பட்டது.

வழக்கமாக காசோலையை மாற்றிக்கொடுக்கும் கடைக்காரன் கையை விரித்துவிட்டான். பட்டணம் போய் கடைகள் ஏறி இறங்கி சலித்துப்போய் வந்தார் வாத்தியார்.

'ரி, சாப்பிட்டபிறகு சங்கத்திலை கேட்டுப்பாப்பம்' என்றார்.

'சோறு வடிச்சிட்டன். கறி வைக்கேல்லை. செக்கைமாத்தி வருவீங்க கறி வாங்கலாமென்னு இருந்திட்டன்' என்றாள். கணவனுக்குச் சோறு போடமுடியவில்லை என்ற கவலையுடன் சம்பல் அரைத்தாள்.

சாப்பிடும் போது 'பெரிய கடைக்குப் போனன். செக் மாத்த ஐம்பது ரூபா கமிசன் கேக்கிறான். கொடுக்க மனம் வரேலை. பிள்ளைகளின்ரை ரியூசன்பீஸ் வேறு கட்ட[illegible]மே' என்று சொல்லிக் கவலைப்பட்டார். சாப்பிட்ட உடன் செக்கை எடுத்துக்கொண்டு சங்கத்தை நோக்கிப்போனார்.

போகும் வழியில் காலில் ஒரு கடித உறை தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்தார். பண நோட்டுக்கள். ஆயிரம் ரூபா நோட்டுகள். அவர் கை நடுங்கியது. ஏதோ பணத்தைக் களவாடியவர் போல் பதட்டம் அடைந்தார்,

என்ன செய்வது என ஒரு கணம் யோசித்தார். அவர் கை கனத்தது மனமும் கனத்தது. யாருக்கோ உரியபணம். அவர் கையில் இருக்கிறது. இதைத் தவறவிட்டவர் எவ்வளவு துன்பப்படுவார் என எண்ணினார்.

பணத்தைத் தவறவிட்டவர் தேடி வருவார் என எண்ணி அவ்விடத்திலேயே சில நேரம் நின்றார். பின்பு திரும்பி வீட்டிற்குப்போனார்.

அவரைக்கண்டதும் 'என்ன மாத்தியாச்சா' ஆவலுடன் கேட்டாள் திலகம். 'உமா சங்கம் பூட்டமுன்னே அரிசியும் சீனியும் வாங்கியா' என்றபடி கணவன் பின்னே போனாள்.

அவர் ஒன்றுமே பேசாது பணம் அடங்கிய உறையை சாமியறையில் உள்ள மேசையில் வைத்தார். அதைக் கண்ட திலகம் மகிழ்ச்சியுடன் 'ஏதுங்க இவ்வளவு பணம்' என்று கேட்டாள்.

**- வில்வம் பசுபதி -**

'இது யாருடையோ பணம். இருக்கட்டும். நான் போய் செக்கை மாத்திவாறன்' என்று சொன்னவர் சங்கத்தை நோக்கி நடையைக் கட்டினார்.

அவர் உள்ளம் மிகுந்த வேதனைப்பட்டது. சே! என்ன வாழ்க்கையிது என்று சலித்துக்கொண்டது. மாதா மாதம் சம்பளம் நேர காலத்துக்குக் கிடைக்கிறதில்லை. கிடைத்த சம்பளத்தை பணமாக மாற்ற எத்தனைபேரைக் கெஞ்சவேண்டியுள்ளது.

இன்றைக்கு மளிகைச் சாமான் வாங்கவேணும், ரியூசன் பீஸ் கட்டவேணும். என்னசெய்வது? மனம் சிந்தனை வயப்பட்டது, கால்கள் சங்கத்தைநாடி நடைபோட்டன.

'வாத்தியார், உங்களைத் தான்' குரல்கேட்டு நிமிர்ந்து பார்த்தார். 'ஜெயா ஸ்ரோர்' தனபாலன். அவனிடமும் காலையில் செக்மாத்தக் கேட்டார். அவன் கையை விரித்து விட்டான். 'பாங் பூட்டு வாத்தியார், செக்கை வாங்கி பிரேம்பண்ணுறதா' என்றான். இப்போது செக்கை மாற்றித் தரகூப்பிடுகிறானோ? நம்பிக்கை துளிர்விட 'என்ன தம்பி' என்றார்.

'இந்த றோட்டிலை என்வலப் போட காசைத் தவறவிட்டிட்டன். ஆரும் எடுத்ததைக் கண்டியளா' என்றார்.

நிதானமாய் நின்று ஒரு கணம் அவனையே பார்த்தார். பின்பு 'எவ்வளவு பணம்'என்றார்.

'ஐயாயிரம்ரூபா வாத்தியார். ஐந்து நோட்டு' என்றான்.

ஒன்றும்பேசாது 'வா'என்று சைகை காட்டிவிட்டு மீண்டும் வீட்டைநோக்கி நடந்தார். அவரைத்தொடர்ந்து தனபாலன் சென்றான்.

கேற்றடிக்குப் போனதும் திலகம் ஓடிவந்து 'செக் மாத்தியாச்சா' என்றாள்.

அவர் பதில்பேசாது' அந்தக் கவரையும் காசையும் எடு' என்றான்.

ஒன்றும் பேசாது உள்ளுக்குப்போய் கவரை எடுத்துக் கொடுத்தாள். பணம் அப்படியே இருப்பதைக்கண்டு அதிர்ச்சியும், ஆனந்தமும் அடைந்த தனபாலன் சட்டைப்பையில் கைவிட்டு ஐநூறு ரூபா நோட்டை எடுத்து 'இதை வைச்சிருங்கோ' வாத்தியார்.

வாத்தியார் சால்வைத் தலைப்பால் நெற்றியில் அரும்பிய [illegible] தார். பின்பு அமைதியாக, 'இது [illegible] பணம். வேண்டாம் வைத்துக் கொள். நான் உழைத்த சம்பளம் பணமாகக் கிடைக்கவில்லை. சங்கம் பூட்டப் போகுது நான் வாறன்' என்று அடி எடுத்து வைத்தார்.

'வாத்தியார் அந்தச் செக்கையாவது தாங்கோ' என்று வற்புறுத்தி காசோலையை வாங்கி அதற்குரிய பணத்தைக் கொடுத்து நன்றிசொல்லிவிட்டுப் போனான்.

'அந்த ஐநூறு ரூபாவை வாங்காதையுங்கோவன்' என்றாள் திலகம்.

'நான் ஆசிரியன். மாணவருக்கு நேர்மையைக் கற்பிக்கிறவன். இது நேர்கோடு திலகம். இது ஒருபோதும் வளையாது' என்று பெருமிதமாய்ச் சொன்னார் நெஞ்சைத் தொட்டவண்ணம். ★

சிறுகதை

## பொன்மொழிகள்

### மேலான வாழ்வு

அறியாமையுடன், தன்னடக்கம் இல்லாமல், ஒருவன் நூற்றாண்டு காலம் வாழ்வதை விட, அறிவுடன் தன் நினைவோடு, ஒருவன் ஒரே ஒரு நாள் வாழும் வாழ்க்கை மேலானது.

★ ★ ★

### நற்பாக்கியம்

உலக விஷயங்களைத் தீண்டாத இருதயம், துக்கத்தினால் சுழலாத இதயம், ஆசைகள் அற்று பத்திரமாக இருக்கும் இதயம், இது தான் மாபெரும் நற்பாக்கியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணே! கண்ணின் மணியே!!

கண், மிக நுட்பமான ஓர் உறுப்பு. மிகச்சிறிய இடையூறுகூட கண்நலத்துக்குக் கேடு விளைவிக்கமுடியும்.

கண்ணில் எந்தத் தொல்லை நேர்ந்தாலும் அதை உடனடியாகத் தகுதிவாய்ந்த கண் மருத்துவரின் உதவியுடன் களையவேண்டும்.

பார்வைக்குறைவு இருப்பதாக அறியநேரின், உடன் பார்வை ஆய்வுசெய்து உரிய கண்ணாடிகளை அணியவேண்டும்.

### அடிக்கடி பரிசோதனை

கண்களில் கோளாறுகள் இல்லையென்றாலும், முப்பது வயதுவரை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையும், நாற்பதுவரையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறையும், நாற்பதுக்குப் பிறகு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையும் கண் மருத்துவரைச் சந்தித்து ஆய்வு மேற்கொண்டு அறிவுரை பெறுவது சிறப்புடைய செயலாகும்.



இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் கண் காப்பு, கண் நலம் போன்ற செய்திகளை மருத்துவ அறிஞர்களை அணுகியும், தரமான மருத்துவக் கட்டுரைகளைப் படித்தும், மருத்துவச் சொற்பொழிவுகளைச் செவிமடுத்தும் அறிந்து தெளிவதுடன், தான் உணர்ந்ததைப் பிறர்க்கும் உணர்த்திக் கண்களைக் காப்பாற்றிக் கொள்வது தலையாயது.

### தூசு விழுதல்

கண்ணில் பொதுவாக நேரும் துன்பம் தூசு விழுதல். தூசு கண்ணில் விழுந்ததும் உறுத்தல் ஏற்படும்.

இந்த உறுத்தலைப் பொறுக்காத கண், மூளையிடம் மண்டியிடும். உடனே மூளை கண்ணிலுள்ள நீர்ச்சுரப்பிகளை விரைந்து செயலாற்ற உத்தரவிடும். கண்ணீர் வெள்ளமாய்ப் பெருகும்.

கண்ணில் விழுந்த தூசு அந்தக் கண்ணீர் வெள்ளத்தில் இமைக்கரைகளுக்கு அடித்து வரப்பட்டு வெளித்தள்ளப்படும். இது இயற்கையின் காப்பு.

### கை வைத்தியம்

கண்ணில் உறுத்தல் நேர்ந்தவுடன், பையிலிருக்கும் கைக்குட்டையை எடுத்து வாயில் வைத்து ஊதி, அந்த வெப்பத்தோடு கைக்குட்டையை மூடிய கண்ணின் மீது வைத்து அழுத்துவார்கள்.

இதனால் என்ன பயன் விளைந்துவிடமுடியும்?

கைக்குட்டையிலுள்ள அழுக்குடன், வாய்க்காற்றில் உள்ள நுண்ணுயிரிகளும் சேர்ந்து கண்ணுக்குள் செலுத்தப்படும் கொடுமைதவிர, இக் கைக்குட்டை ஒற்றடம் வேறென்ன சாதிக்கமுடியும்?

இதைவிட வேடிக்கை, தூசு விழுந்த கண்ணை, மற்றொருவர் தன் விரல்களால் விரித்துப் பிடித்தபடி வாயால் ஊதுவார், இப்படி வாய்க்காற்றுப்பட்டுத் தூசு ஓடிவிடுமா என்ன? சொட்டுத்துகள் தொற்றுத்தான் வாய் நீரிலிருந்து கண்ணுக்கு மாற்றலாகும்.

இந்த இரண்டு நிலைகளையும் கடந்துவந்ததும் தூசுவிழுந்தவருக்கு அறிவுரைகள் பல அடுக்காய் வழங்கப்படும்.

தெரிந்தவர், தெரியாதவர் என்று பலர் பலவாய்க் கருத்துமழை பொழிய கண் பாவம் கொடுமைகளின் தொடரில் கொந்தளித்து நிற்கும்.

தாய்ப்பால், வெண்ணெய், நந்தியாவட்டைச் சாறு, விளக்கெண்ணெய், கோழிக்கால் இரத்தம் என்று கண்ணில் பட்டவை, காதில் கேட்டவை எல்லாம் சாறுகளாகவும், பிழிவுகளாகவும் கண்களில் கலக்கும்.

தாய்ப்பாலில் லாக்டிக் அமிலம் உள்ளது. இது கண்ணை உறுத்தும்.

எதற்காக தாய்ப்பாலைக் கண்களில் போடுகிறார்கள் என்பது விளங்கவேயில்லை. வெண்ணெய், கொழுப்பு அமிலம் உள்ள பொருள்.

நந்தியாவட்டைச் சாற்றில் காளான் தொற்றுநேரக்கூடும். காளான் தொற்று கண்ணையே அழிக்கவல்லது. விளக்கெண்ணெயிலுள்ள கலப்படப்பொருள்கள் கண்களை உறுத்திச் சிவக்கவைக்கின்றன.

கோழிக்கால் இரத்தம் சொல்லவே வேண்டாம்.

இப்படித் தேவையற்ற போடக்கூடாத, துன்பம் தரும் பல பொருள்களையும் கண்களில் போட்டபிறகேனும் மருத்துவர்களிடம் வருகிறார்களா என்றால், அதுதான் இல்லை.

முறைப்படி மருத்துவம் பயிலாது, பழகுமுறைகளில் மருத்துவம் பார்ப்போர், பரம்பரை பரம்பரையாய் மருத்துவம்பார்ப்போர்என்பாரிடம் போய், இருப்பது போதாதென இன்னும் நோய்பெற்று வருகின்றார்கள்.

### கண்ணுக்கு சோர்வு ஏற்பட்டால்

கண் பார்ப்பதற்காகத்தான் இருக்கிறது. ஆனால் அதற்காகவே அதைப் பாடாய்ப் படுத்துவது நியாயமல்ல.

தொலைவிலும் அண்மையிலுமாய் உள்ள எத்தனையோ காட்சிகளை நாளும், பொழுதும், தொடியுமாய்க் கோடிக்கணக்கான முறைகள் பார்த்துப் பார்த்து உதவும் கண்களை உயிரினும் இனிதாய்ப் போற்றல்வேண்டும்.

மிகச் சிறிய எழுத்துள்ள புத்தகங்களைப் படித்தலும், ஓடும் வண்டிகளில் படித்தலும் கூடாது. வெளிச்சம் குறைவான இடங்களில் படிப்பது கண்களுக்கு களைப்புத்தரும்.

இரவு வெகுநேரம் விழித்துப் படிப்பது, களைத்த கண்களைத் தண்ணீரில் கழுவுவதன் மூலமோ, காப்பியொன்று அருந்துவதன் மூலமோ மீண்டும் உழைக்கவைப்பது கொடுமையானது.

கண் சோர்வு கண்டவுடனேயே ஐந்து அல்லது பத்து நிமிஷங்களேனும் இரு கண்களையும் மூடியபடி அமர்ந்த நிலையிலோ படுத்த நிலையிலோ ஓய்வெடுத்தால் போதும், கண்கள் மீண்டும் உழைக்கத்தயாராகிவிடும்.

அதிகக் களைப்பு இருப்பின் சிலமணி நேர உறக்கம் கண்களுக்கு புத்துணர்ச்சி தரும்.

### பார்வைக் குறைவு

பார்வைக்குறைவு இருந்தால் உடனே கண் மருத்துவரை அணுகி, ஆய்வுசெய்து உரிய சக்தியுள்ள கண்ணாடிகளை அணிந்துகொள்ளவேண்டும்.

வயது வரம்போ, பால்வேறுபாடோ, அலுவல் மாறுபாடோ கண்ணாடி அணியத் தடையாவதில்லை. திடீரென நேரும் பார்வைக்குறைவினைத் தெரிந்துகொள்ள எளியவழி ஒன்றுண்டு.

படுக்குமிடத்திற்கு எதிரே சுவரில் ஒருபடத்தை மாட்டி வைத்து நாள்தோறும் காலையில் விழித்ததும், ஒரு கண்ணை மூடி மறுகண்ணால் அதைப் பார்த்து, பின், பார்த்த கண்ணை மூடிக்கொண்டு மூடிய கண்ணைத் திறந்து பார்க்கவேண்டும்.

பார்வையில் இரண்டு கண்களுக்குமிடையில் வேறுபாடு இருந்தால் கண் மருத்துவரை அணுகுவது இன்றியமையாதது.

தொடக்கநிலையிலேயே கண்டறிந்துவிட்டால் பெரும்பான்மையான நோய்களை மிக எளிதாக நலப்படுத்திவிடலாம்.

நாள் கடத்தலும், தானே மருத்துவம் செய்துகொள்ளும் நிலையும்தான் நோய்கள் முற்றுவதற்கும், நலப்படுத்தமுடியாத நிலை ஏற்படுவதற்கும் காரணங்களாகும்.

### சிவந்த கண்

கண்ணில் ஏற்படும் சிவப்பு, பல்வேறு நோய்களின் முதல் வெளிப்பாடாகும். அதை வெறும் கண்வலிச் சிவப்பு என்று கருதிக்கொண்டு கை மருத்துவம் பார்த்துக் கண்ணிழந்தவர் கதைகள் ஏராளம். கண்ணில் சிவப்போ, உறுத்தலோ, எரிச்சலோ, அரிப்போ, வீக்கமோ, அதிக நீர்வடிதலோ அல்லது கட்டிகளோ, தசை வளர்ச்சியோ எது ஏற்பட்டாலும் சரி, உடனே கண் மருத்துவரை அணுகிடல் நன்று.

## வைத்திய சஞ்சீவி

கண் நலத்துக்கென்று தனியே உணவு வகைகள் தேவையில்லை. உடல் நலம் பெருக்கும் சத்துணவுகள் அனைத்தும் கண் நலத்திற்கும் உதவும். தனியே சில கொள்வது என்ற தேவை இல்லை.

தகுதிவாய்ந்த கண் மருத்துவரை அணுகி அவரது அறிவுரை பெற்று, நல்ல சத்துணவை உட்கொண்டு, தேவையான ஓய்வைக் கண்களுக்கு வழங்கிக் காத்து வருவோமாயின், கண்நலம் நமக்கு அங்கைக் கனியாகும். கண்கள் தான் வாழ்க்கை; அதனால் கண்களைக் காப்பாற்றுங்கள். ★

## உண்மை

நிஷ்டையிலிருந்த புத்தனின் முன்னிலையில் பெண்ணொருத்தி வெகு நேரமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றாள். அவரின் நிஷ்டையைக் குலைத்துவிடக் கூடாதென்ற அச்சத்தால் அவள் குரலை அடக்கியபடி கண்ணீரால் கவலையின் ஆழத்தை உணர்த்திக் கொண்டு நின்றாள்.

நிஷ்டையிலிருந்து புத்தன் விழித்துக் கொண்டான்.

எதிரே பெண்ணொருத்தி கண்ணீர் மல்க நிற்பதையும்; எதிரே இறந்துபோன ஒரு குழந்தையின் உடலையும் கண்டு கொண்டார்.

புத்தனின் முகத்தில் எந்த வித மாற்றங்களையும் காணவில்லை.

'எனது ஒரே செல்வப் புதல்வன் இவன் இப்படி அகாலமாய் மரணித்துப் போனான். எப்படியும் உயிர்ப்பித்துத் தாருங்கள் ஐயா' அந்தப் பெண் புத்தரிடம் இறைஞ்சினாள்.

**- வளவை வளவன் -**

புத்தனோ அதற்கு எதுவித மறுப்புமே சொல்லவில்லை. பதிலாக மருத்துவத்திற்குரிய பொருளை கொண்டுவரும்படி பணித்தான்.

ஆம் இறப்பில்லா வீட்டில் தண்ணீர் எடுத்து வருவாயானால் உனது மகனை உயிர் பெறச் செய்வேன்.

இப்படிச் சொல்லிவிட்டு புத்தன் மீண்டும் நிஷ்டையில் இருந்தான்.

பிள்ளைப்பாசம் அந்தப் பெண்ணை வாட்டி வதைத்துக் கொண்டே இருந்தது. ஒவ்வொரு வீடாகத் திரிந்து அந்தக் கிராமம் முழுவதும் சுற்றியும் இறப்பில்லாத வீட்டைக் காண இன்னமும் முடியவே இல்லை.

இறப்பு இயற்கையானது மட்டுமல்ல உண்மையானது என்பதை அறிந்து கொண்டாள். புத்தனின் முன்னே விட்டுச் சென்ற தன் மகனின் உடலை எடுத்து அடக்கம் செய்வதற்காகச் சென்றாள்.

புத்தனின் நிஷ்டை கலைந்தது. பாவம் அந்தப் பெண்ணுக்கு உண்மை புரிந்து விட்டது என்பதை [illegible] புத்தனின் முகம் மேலும் [illegible] தது. ★

## பொது அறிவுப்போட்டி இல. 26

1. உலகில் மிகப்பெரிய பரிசு? ... ... ... ... ... ... ...ஜனுதிபதி / நோபல்
2. ஜப்பானியர் வெறுக்கும் எண்? ... ... ... ... ... ... ... ... ... 13 / 3
3. ஆயிரம் நாமங்கள் கொண்டவர்? ... ... ... ... ... ... விஷ்ணு / சிவன்
4. இந்திய தேசியகீதம் பாடியவர்? ... ... ... ... ... தாகூர் / பாரதியார்
5. இதுவும் சிறுவதுண்டு? ... ... ... ... ... ... ... ... ... பாம்பு / புயல்
6. காலத்தால் முந்தியது எது? ... ... ... ... ... இராமாயணம் /பாரதம்
7. பரப்பளவில் பெரியநாடு? ... ... ... ... ... ... ... ... சீனு / ரஷ்யா
8. புத்தர் பரிநிர்வாணம் அடைந்தது? ... ... ... பௌர்ணமி / அமாவாசை
9. வசந்தத்தை நினைவூட்டுவது? ... ... ... ... ... தென்றல் / குயிலோசை
10. எல்லோரும் பயப்படுவது? ... ... ... ... ... ... ... முரடன் / திருடன்
11. மன்னராட்சி முதலில் தோன்றியது? ... ... ... ... ... எகிப்து / இந்தியா
12. இப்படி வாழவேண்டும் என்பர் ... ... ... ... ... புகழோடு / நீதியோடு

பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

பொது அறிவுப்போட்டி இல. 26
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

.................... இங்கே வெட்டுக ....................

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 07 - 06 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றும் பரிசு: | 25 ரூபா |

# நாதஸ்வர கலைத்துறையில் சிதம்பர ஆலய மரபிசை

இந்துசமயப் பண்பாட்டையும் தமிழர் நாகரிகத்தையும் பேணிப் பாதுகாத்த பெருமை கோயில்களுக்கு உண்டு. கோயில்கள் ஆற்றிய தொண்டுகள் பற்றி ஆராயப் புகுந்தால் அவை பல்துறைகளில் அமையும்.

இங்கு ஒரு துறையான இசைக் கலையினை வளர்த்த பெருமை பற்றி சற்று நோக்குவோம். இசையில் மிடற்றிசை (வாய்ப்பாட்டு), வாத்திய இசை என்ற பிரிவுகளில் இவை இரண்டையுமே கோயில்கள் வளர்த்திருக்கின்றன.

மிடற்றிசையில் அற்புதமான பக்தியையூட்டும் தேவாரப் பண்ணிசையைப் போற்றி பாதுகாத்து வந்தவர்கள் ஆலயஓதுவார்கள்.

மும்முடிச்சோழன், சிவபாதசேகரன் என்னும் சிறப்புப் பெயர்களால் புகழப்பட்ட இராசராசசோழ மன்னர் காலத்திலே பண் அமைக்கப்பட்டும் பண்முறை தவறாதும் கட்டாயமாக ஆலயங்களில் ஓதப்படல் வேண்டும் என்று சாசனஞ் செய்யப்பட்டவை திருமுறைகளாகும்.

தேவாரப்பண்களே பிற்காலத்தில் எழுந்த கர்நாடக இசையின் அத்திவாரம் என்பது பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களின் கூற்றாகும்.

வாத்தியத்தில் மங்கள வாத்தியம் என்றழைக்கப்படும் நாதஸ்வர–தவில் இசையும் ஆலயங்களில் மரபு வழி வழுவாமல் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.

மனதுக்கு மகிழ்ச்சியையும் பக்தியையும், மங்களகரமான உணர்வையும் வெளிப்படுத்தும் வாத்தியம் நாதஸ்வரம் ஆகும்.

கோயில் என்ற பதத்துக்கு சிறப்பிடமாய் அமைந்துள்ள தில்லைச்சிதம்பரத்தில் இந்த மங்கள இசை சீர் செய்யப்பட்டுப் பேணி வந்துள்ளது.

பழங்காலத்தில் நாதஸ்வர–தவில் வித்துவான்கள் இம்மரபைச் சிதைக்காது பேணிப் பாதுகாத்து வந்தனர். கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களும் செப்புச் சாசனங்களும் இவற்றிற்குச் சான்று பகர்கின்றன.

### காஞ்சி ஸ்வாமிகள் சொன்னது

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீட சங்கராச்சாரியர் சுவாமிகள் நாதஸ்வரத்தைப் பற்றி,

'தெய்வ வழிபாட்டின் மூலம் நாம் இக பர மேன்மைகளை அடைவதற்கு நம் முன்னோர்களால் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ள ஆலயங்களில் நித்திய பூசை, உற்சவங்களிலும் சேவிக்கப்படும் நாதஸ்வர வாத்தியங்களின் இசை மரபுகளைப் பேணிக் காக்க வேண்டியது ஆலய நிர்வாகிகளினதும் பக்தர்களினதும் தலையாய கடமையாகும்' என்று கூறியிருக்கிறார். சில இடங்களில் இம்மரபுகள் தவறி நடப்பதும் கண்கூடு.

சிதம்பர ஆலயத்தில் பல ஆண்டுகள் நாதஸ்வர இசைத் தொண்டு புரிந்து வரும் திரு. இராதாகிருஷ்ணபிள்ளை அவர்களும் அவரின் மருகராகிய ஆண்டான் கோயில் செல்வரத்தினம் அவர்களும் சேர்ந்து 'ஆலய மரபிசை' என்னும் தலைப்பில் ஒரு இசைச்சுட்டி (Cassette) யினை வெளியிட்டுள்ளார்கள். அதில் பின்வருவன ஒழுங்கு முறையில் வாசித்துக் காண்பிக்கப்படுகிறது.

நாதஸ்வரம், இருக்கு வேதத்தில் 'உத்தாலவேனு' என்றும் தமிழ்ச் சங்க நூல்களில் 'தெருவந்தியம்' என்றும் தவில் 'டோலோ' 'திண்டிமம்' என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த இசை மரபுகளைப் பற்றி அனேகருக்குத் தெரியாமலிருக்கலாம்.

சிதம்பர ஆலயத்தில் நடராசர், கோவிந்தராசர் ஆகிய மூர்த்திகளுக்கு இவ்விசை மரபினை ஒட்டியே நாதஸ்வரம் வாசிக்கப்படுகிறது. அம்மரபு பற்றிச் சிறிது கவனிப்போம்.

சுவாமி புறப்படும்போது பொதுவாக எல்லா ஆலயங்களிலும் 'பெரிய மல்லாரி' வாசிக்கப்படுகிறது. சாஹித்தியமில்லாததும் தாள வேலைப்பாடுகள் அமைந்ததுமான வாத்தியமே மல்லாரி ஆகும். கம்பிரநாட்டை என்ற இராகத்தில் இது வாசிக்கப்படுகிறது.

காலை நேரத்தில் சுவாமிக்கு தீர்த்தம் எடுக்கப் போகும் போதும் கும்பாபிஷேக காலத்திலும் 'தீர்த்த மல்லாரி' வாசிப்பார்கள்,

**- சி. குமாரசாமி எம். ஏ. -**

நிவேதனம் எடுத்து வரும் போது வாசிக்கப்படுவது தளிகை மல்லாரி.

சுவாமி தேருக்குப் புறப்படும்போது 'தேர் மல்லாரி' வாசிப்பார்கள்.

சுவாமி தெற்குக் கோபுர வாசலை அடைந்ததும் 'ரக்தி' வாசிக்கப்படுகிறது. இது இராக ஆலாபனை கண்டனம் தீர்மானம் என்னும் ஒழுங்கில் வாசிக்கப்படுவது வழக்கம்.

### 'ரக்தி'

'ரக்தி' என்பது அழகு எனும் பொருள்படும். முற்காலத்தில் கீர்த்தனைகளோ வேறு பாடல்களோ வாசிக்கப்படவில்லை. காரணம் கீர்த்தனைகள் சுமார் 300 ஆண்டுகளுக்குள்ளேயே தோன்றின.

சிதம்பர ஆலயத்திலுள்ள கோவிந்தராசர் ஆலயத்தில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அங்கும் மல்லாரி பல்லவி, ரக்தி எல்லாம் வாசிக்கப்பட்டு சுவாமி தாயார் சந்நியை அடைந்தவுடன் மாலை மாற்றும் வைபவம் நடைபெறும். ஒரு நாளுக்கு ஐந்து பாடல்கள் வீதம் நாற்பத்தைந்து பாடல்கள் ஒன்பது நாள்களிலும் வாசிக்கப்படும்.

சுவாமி சுற்றி வந்து வாசலில் நிற்கும்போது திருவந்திக் காப்பு வாசிக்கப்படும். சைவ ஆலயங்களில் இதை 'தட்டுச்சுற்று, என்பர்.

### தலையாய கடமை

பெண்கள் குட விளக்கை ஏந்திய வண்ணம் சுவாமியை மூன்று முறை சுற்றி வருவர். திருஷ்டி கழித்தல் என்ற தட்டுச் சுற்று நிகழ்கிறது. பெண்களுக்குத் துணையாக நாதஸ்வர – தவில் வித்துவான்கள் மூன்று முறை சுற்றி வருவர். அப்போது தவில் மாத்திரமே வாசிக்கப்படுவதால் இதனைத் தட்டுச் சுற்று என்பர்.

விக்கிரகத்தை இருப்பிடத்துக்கு எடுத்துச் செல்லும் போது எச்சரிக்கை வாசிக்கப்படும்.




ஆகவே ரக்தியில் தாள வேலைப்பாடுகள் நிறைந்த இசையே வாசிக்கப்படுகிறது. இப்போது இது வழக்கத்தில் இல்லை என்பது வருந்தத்தக்கது.

சுவாமி வடக்கு வீதியை அடைந்ததும் பல்லவி வாசிக்கப்படும். சிதம்பர ஆலயத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட இராகமே வாசிக்கப்படும்.

எட்டாம் நாள் திருவிழாவில் 'உடற்கூறு' என்னும் வாசிப்பு இடம்பெறும். ரக்தியோ அன்றி மல்லாரியோ வாசிக்கப்படமாட்டாது. உடற்கூறு என்பதில் மாயாமாளவகௌளை அல்லது நாதநாமக்கிரியையில் வாசிக்கப்படும்.

பஞ்சபூதங்களின் சேர்க்கையினாலான இவ்வுடம்பைப் பற்றிக் கூறுவதே 'உடற்கூறு' இது மருவி இப்போது ஒடற்கூறு என்று வழங்கப்படுகிறது.

விக்கிரகத்தை இருப்பிடத்தில் வைத்த பின்னர் ஊஞ்சல் லாலி போன்ற பள்ளியறைப் பாடல்கள் வாசிக்கப்படும். திருவிழா முடிவில் சுருட்டி, மத்தியமாவதி போன்ற இராகங்களில் மங்களம் வாசிக்கப்படும்.

இத்தகைய இசை மரபுகளை ஆக்கித் தந்தவர்களையும் அவ்வற்றைப் பேணிப் பாதுகாத்து வந்தவர்களையும் இந்து சமய மக்கள் என்றென்றும் சிந்தையில் வைத்துப் போற்றுவர்.

மேலும் வருங்காலச் சந்ததியினருக்கும் இம்மரபுகளைப் பற்றி அறியத்தருவது இப்போதுள்ளவர்களின் தலையாய கடமையாகும். ★

# வாசகர் தராசு

## நியாயமல்ல!

'இரண்டு மனம்' சிறுகதை பற்றி திருமதி க. விக்னராசா எழுதியிருந்த கடிதத்தில் பெண்ணின் மனம் எப்படிப்பட்டது என்பதை அழகாகவே காட்டியிருந்தார்.

ஆனால் இறுதியாக அவர் பாவித்த வசனம்தான் அக்கடிதம் அனுப்பப்பட்டதன் நோக்கத்தையே தவறானதாக்கி விட்டது.

அவ்வசனம், 'ஆண் சமுதாயமே! பெண்களை ஏமாற்றாதே! என்பதாகும்.

அவர் தனது கடிதத்தில் சிறுகதை ஆசிரியர் ஆணாக இருப்பதால் ஆண்களுக்குச் சாதகமாக முடித்துவிட்டதாக கூறியிருக்கிறார்.

ஆண்கள் எந்தவகையில் பெண்களை ஏமாற்றுகிறார்கள் என்பதை அவர் குறிப்பிடத் தவறிவிட்டார்.

ஒருவேளை 'இரண்டு மனம் வேண்டும்' சிறுகதையில் வரும் சுமதியின் கணவன்விடும் தவறுபோன்ற தவறையே எடுத்துக் கூறியிருப்பாராயின், அப்படியான தவறுகள் நடைபெறுவதற்குப்பெண்களும் தானே காரணமாகஇருக்கிறார்கள்!

ஒரு சிலர் மற்றப் பெண்களுக்குத் தம்மைப் பற்றிய விடயங்களை முற்றாக மறைத்திருக்கலாம். மற்றப்படி சில குடும்பப்பெண்கள் ஏமாற்றப்படுவதற்கு அவர்களது கணவர் மட்டும் காரணம் அல்ல.

தனிப்பட்ட ஒருவர் விட்ட தவறுக்காக எல்லா ஆண்களையும் பிழை கூறுவது நியாயமல்ல.

—தேவா-சேந்தன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

G.C.E. A/L
(விஞ்ஞானம், வர்த்தகம், கலை)
G.C.E. O/L
TYPING, SHORT HAND வகுப்புகள்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
வகுப்புகள் வெகு சிறப்பாக
நடாத்தப்படுகின்றன
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை

27 - 05 - 1989 சனிக்கிழமை

BOND INSTITUTES
(தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடிகள்)
1983 ஆம் ஆண்டின் பின்பு மீண்டும் முன்னைய உற்சாகத்துடன் அனைத்து வகுப்புகளுக்கும் தரமான ஆசிரியர்களைக் கொண்டு இயங்குகின்றது.

# பனாமாவில் ஜெனரல் நொரீக்காவின் பிடிவாதம்

# அமெ: ராணுவத் தலையீட்டுக்கு வழிகோலுமா?

## தேர்தல் மோசடி அம்பலப்படுத்தப்பட்டும் பதவி இறங்க மறுப்பு

கடந்த 7 ஆம் திகதி பனாமாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி தமக்கே என்று அரசாங்க தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் உரிமை கோருவதை அடுத்து அங்கு அமெரிக்க இராணுவத் தலையீடு ஏற்படும் அளவுக்கு நெருக்கடி வலுப்பெற்று வருகிறது.

தமது வேட்பாளரான கார்லொஸ் டுக்குயூ (Carlos Duque) வெற்றி பெற்றிருப்பதாக பனாமா பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதியும் தற்போது பனாமாவை நிர்வகித்து வருபவருமான ஜெனரல் மனுவல் அன்ரோனியோ நொரீக்கா (Manuel Antonio Noriega) அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஜெனரல் நொரீக்காவினால் தெரிவு செய்யப்பட்ட கார்லொஸ் டுக்கியூ புரட்சிகர ஜனநாயகக் கட்சி சார்பில் (Revolutio - nary Democratic) தேர்தலில் போட்டியிட்டவர்.

கார்லொஸ் டுக்கியூவை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர் கில்லேர்மோ என்டாரா (Guill ermo Endara).

குடியியல் ஜனநாயகக் கட்சி சார்பில் (Civic Democratic Opposition Alliance) இவர் போட்டியிட்டார்.

அரச ஆதரவு வேட்பாளர் கார்லொஸ் டுக்கியூவும் எதிர் கட்சி ஆதரவு வேட்பாளர் கில்லேர்மோ என்டாராவும் தமக்கே வெற்றி என்று உரிமை கொண்டாடியதை அடுத்து, தேர்தலைக் கண்காணிப்பதற்காக அமர்த்தப்பட்ட சர்வதேச கண்காணிப்புக் குழுவின் தீர்ப்புக்கு இது விடப்பட்டது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தலைமையிலான இக் குழு தனது தீர்ப்பில், தேர்தலில் பெரும் மோசடி நடைபெற்றிருப்பதாகவும் எதிர்க்கட்சி வேட்பாளர் கில்லேர்மோ என்டாராவே வெற்றி பெற்றுள்ளார் என்றும் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை அடுத்து பனாமாவில் ஏற்பட்ட கலவரங்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தேர்தலில் உண்மையாக வெற்றி பெற்றவர் என்று நம்பப்படும் எதிர்க்கட்சி வேட்பாளர் கில்லேர்மோ என்டாரா ஆயுதப் படையினரால் படுமோசமாகத் தாக்கப்படும் அளவுக்கு நிலைமை மோசம் அடைந்தது.

### ஓ. ஏ. எஸ்

31 நாடுகள் அங்கம் வகிக்கும் ஓ. ஏ. எஸ் என்று அழைக்கப்படும் அமெரிக்க மாநிலங்களின் ஸ்தாபனமும் (Orga nisation of American States) தற்போது பனாமா விவகாரத்தில் தலையிட்டுள்ளது.

ஓ. ஏ. எஸ். வெளிவிவகார அமைச்சர்கள் கடந்த வாரம் கூடி பனாமாத் தேர்தலில் மோசடி நடைபெற்றிருப்பதாகவும் அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் இடம் பெற வேண்டும் என்றும் அறிவித்துள்ளனர்.

குவாட்டமாலா, ஈக்குவடோர், ரிறினிடாட்ருபாகோ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கொண்ட தூதுக்குழு ஒன்றை பனாமாவுக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தேர்தலைக் கண்காணித்த ஜிம்மி கார்ட்டர் தலைமையிலான குழுவின் அறிக்கை, ஓ. ஏ. எஸ். இன் அறிவிப்பு ஆகியவை ஜெனரல் நொரீக்காவை இக்கட்டான நிலைக்குள் தள்ளி விட்டுள்ளன.

### குழப்பங்களுக்கு காரணம் நொரீக்கா

தற்போதைய குழப்ப நிலைகளுக்கு மூலகாரணம் ஜெனரல் நொரீக்கா தான் என்று அமெரிக்கா கண்டனம் தெரிவித்து வருகிறது.

ஜெனரல் நொரீக்கா பதவி விலகி எதிர்க்கட்சி வேட்பாளருக்கு இடம் கொடாது விட்டால் பனாமாவில் அமெரிக்காவின் இராணுவத் தலையீடு ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பனாமா தொடர்பான அமெரிக்காவின் ஒவ்வொரு அசைவும் இராணுவத் தலையீட்டை நோக்கியே செல்வதாக நம்பப்படுகிறது.

பனாமாவில் தற்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்து வரும் ஜெனரல் நொரீக்காவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான தகராறு இன்று நேற்று, ஏற்பட்டதல்ல. கடந்த இரண்டு வருடகாலமாக அது இருந்து வருகிறது.

கடந்த காலங்களில் ஜெனரல் நொரீக்காவை பதவி விலக்கும் ஒரே நோக்கத்துடனேயே அமெரிக்காவின் றேகன் நிர்வாகம் செயற்பட்டு வந்தது. தற்போது ஜோர்ஜ் புஷ் நிர்வாகமும் அதனையே தொடர்கிறது.

எனினும் அமெரிக்காவின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் ஜெனரல் நொரீக்கா தாக்குப் பிடித்து வருகிறார் என்றே தெரிகிறது.

### போதைவஸ்து குற்றச்சாட்டு

1988 பெப்ரவரி மாதம் அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் ஜெனரல் நொரீக்காவுக்கு எதிராகப் போதை வஸ்துக் குற்றம் ஒன்று சுமத்தப்பட்டது.

இதன் மூலம் ஜெனரல் நொரீக்கா பதவி விலகி விடுவார் என்றும் அமெரிக்கா அப்போது எதிர்பார்த்தது ஆனால் அது நடக்கவில்லை.

இரண்டு மாதங்களின் பின் பனாமாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்துக்கு அமெரிக்கா மேலதிகமாக 1300 அமெரிக்கத் துருப்பினரை அனுப்பி வைத்தது. எனினும் ஜெனரல் நொரீக்காவைப் பணிய வைக்க முடியவில்லை.

பின்பு அமெரிக்கா பனாமா மீது சில பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தி பனாமாவைப் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்கியது. இதிலும் வெற்றி பெற்றவர் ஜெனரல் நொரீக்காதான். அமெரிக்காவின் பொருளாதாரத் தடை நடவடிக்கையை அமெரிக்க எதிர்ப்புப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தினார் அவர்.

இத்தனை முயற்சிகளும் பயன் அளிக்கத் தவறிய நிலையில் கடந்த 7 ஆம் திகதிய தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக 1கோடி டாலரை வழங்கும் இரகசிய தஸ்தாவேஜு ஒன்றில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கையெழுத்திட்டிருந்தார். அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ மூலம் இந்தப் பணம் வழங்கப்பட இருந்தது.

இந்த நிதி உதவி விவகாரம் அம்பலத்துக்கு வந்த போது அமெரிக்க எதிர்ப்புப் பிரசாரத்துக்கு ஜெனரல் நொரீக்காவுக்கு மேலும் வாய்ப்பாக மாறிவிட்டது.

எனினும் அப்படியான நிதி உதவி எதுவும் தமது கைக்குக் கிட்டவில்லை என்று எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தெரிவித்து விட்டனர்.

### நிக்கரகுவா

அமெரிக்கா பனாமா விவகாரத்தில் எப்படியான நடவடிக்கை எடுக்குமோ அது நிக்கரகுவா தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைக்கு ஓர் ஒத்திகையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஜெனீவா ஒப்பந்தத்தின் பிரகாரம் 1988 ஏப்ரல் 1 ஆம் திகதி தொடக்கம் நிக்கரகுவாவில் கொன்ரா கிளர்ச்சியாளர்களுக்கும் சான்டினிஸ்ட் அரச படைகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் இருந்து வருகிறது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் 1990 பெப்ரவரி 25 ஆம் திகதி அங்கு ஜனாதிபதித் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பனாமாவில் ஏற்பட்ட நிலை ஏற்படின் ஜெனரல் நொரீக்காவின் பாதையை நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஒரேகாவும் பின்பற்ற முயலுவாரா என்பது பனாமா தொடர்பாக அமெரிக்கா இனி எடுக்கப்போகும் நடவடிக்கையிலேயே தங்கி இருக்கிறது.

### பனாமா கால்வாய்

பனாமாக் கால்வாயை தற்போது அமெரிக்காவே நிர்வகித்து வருகிறது. பனாமாக் கால்வாய் ஒப்பந்தத்தின் பிரகாரம் 1990 ஜனவரியில் நிர்வாகம் பனாமாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்தக் கால்வாய் வரி தொடர்பாக அமெரிக்கா பனாமாவுக்கு வழங்கப்பட வேண்டிய 8 கோடியே 65 லட்சம் டாலரை அமெரிக்கா பனாமாவுக்கு வழங்காமல் முடக்கி வைத்துள்ளது.

1990 ஜனவரியில் பனாமாக் கால்வாய் நிர்வாகம் பனாமாவிடம் கைமாறும்போது கால்வாய் நிர்வாகியாக ஜெனரல் நொரீக்காவின் ஆதரவாளர் தெரிவானால் அமெரிக்காவுக்கு அது மேலும் சிக்கலை உருவாக்கலாம்.

அமெரிக்க செனட்டின் அங்கீகாரத்தையும் இந்த நியமனம் பெறத் தவறலாம்.

ஆதலால் தற்போதைய தேர்தல் குற்றச்சாட்டுகளை வைத்து ஜெனரல் நொரீக்காவை எப்படியாவது பதவி வீழ்த்தவே அமெரிக்கா முயலும் என்பதில் சந்தேகம் இல்லை. ★

உலக உலா
என்.பி.சீலன்

# கூட்டுமுயற்சி மூலம் வெற்றி அடைந்த மேற்கு இந்திய அணி!

எனது கருத்துப்படி இந்த டெஸ்ட் தொடரில் சஞ்சய் மஞ்சரேகர்தான் இந்தியாவின் முக்கியமான துடுப்பாட்டவீரன்.

நான்குடெஸ்டிலும் அவரது ஆட்டத்தைப் பார்த்து நான் மிகவும் ரசித்தேன். அவர் மிக விரைவாகக் கற்றுக்கொள்ளும் திறமையுடையவர் என்பதை அவரது ஆட்டத்தின் மூலம் தெரிந்துகொண்டேன்.

வெங்சாகர் போன்று 'அவுட் ஆப் பாமில்' இருக்கும் வீரர்கள் ஆடுவது மிகவும் கடினம்.

> இந்திய வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட்பற்றி கேப்டன் விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்த கருத்து இது.

கபில்தேவின் ஆட்டத்தை நான் மிகவும் ரசிப்பவன். அவருக்கு காலில் ஏற்பட்ட அடியினால் அவரது வழக்கமான ஆட்டத்தைக் காண முடியவில்லை.

துடுப்பாட்ட வீரர்களின் திறமையைப்பற்றி கூறும் அதேசமயத்தில் வால்ஷ் மற்றும் பிஷப் ஆகியோரின் அற்புதமானபந்துவீச்சையும்குறிப்பிடவேண்டும். எவ்வளவு கஷ்டமான விக்கெட்டாக இருந்தாலும் கொஞ்சமும் தயங்காமல்பந்துவீச்சுசெய்யக் கூடியவர்கள். தனது சொந்த மக்களுக்குமுன் வால்ஷ் 10 விக்கெட்டுக்கள் பெற்றது குறித்து நான் மிகவும் மகிழ்ந்தேன்.

பிஷப் தனது திறமையை மிகவும் சிறப்பான முறையில் வளர்த்துக்கொண்டார்.

அவர் தலைசிறந்த வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவர் என்ற இடத்தைப் பெறுவார் என்று நம்புகிறேன்.

விக்கெட் மோசமாக இருந்ததால் இரு அணிகளுமே மிகவும் கஷ்டப்படவேண்டியதாக இருந்தது.

### ஆர்வம்

கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரையும் ஒருநாள் தொடரையும் வென்று நாங்கள் மிகவும் உற்சாகத்துடன் இருந்தோம்.

தொடக்கத்தில் அணியில் உள்ள வீரர்களின் திறமை குறித்து எனக்கு கவலை ஏற்படவில்லை. போதுமான உடற்பயிற்சி இல்லாததுபற்றித் தான் மிகவும் கவலைப் பட்டேன்.

இந்தத்தொடரில் அவர்களை உறுதியான மனநிலையுடனும், சீரியசாகவும் விளையாடவைக்கவேண்டும் என்று கவலைப்பட்டேன்.

இறுதியில் கிடைத்த முடிவுகள் எனது அச்சத்தைத் தகர்த்துவிட்டன. ஒரு நாள் டெஸ்ட் தொடரை 5.0 என்ற விகிதத்தில் வென்றோம். மழையினால் முதல் டெஸ்டை இழந்தோம். மற்றப்படி எல்லா டெஸ்டையும் வென்று டெஸ்ட் தொடரை வென்றோம்.

ஒவ்வொரு போட்டியிலும் சரியான நுணுக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த வெற்றிப்பாதையை உருவாக்கியதில் வெஸ்ட் இண்டீஸ் வீரர்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு.

### அனுபவம் குறைந்த அணி

இந்தியாவை முழுமையாக வெற்றி கொள்ள வேண்டும் என்பதில் நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். இதற்குமுன் நடந்த டெஸ்ட் முடிவுகள் இரு அணிகளுக்குமுள்ள திறமையைக் வெளிக்காட்டின.



இந்த டெஸ்ட் தொடரில் இந்தியாவின் அனுபவமில்லாத அணியும் சில வீரர்களின் இழப்பும் தோல்விக்கு காரணம் என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும். இங்குள்ள மக்களும், இந்திய ரசிகர்களும் இவற்றை நிச்சயம் குறிப்பிட்டுக் காட்டுவார்கள்.

கிரிக்கெட்போன்ற ஆட்டங்களில் தனிப்பட்ட ஒருவரின் முயற்சியால் வெற்றி கிடைத்தது என்று கூறமுடியாது. எனினும் ரிச்சி ரிச்சர்ட்சன் மற்றும் இயான் பிஷப் இருவரின் சிறப்பான ஆட்டத்தையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில் ஹெய்ன்ஸ், கிரீனிட்ஜ் இருவரும் சிறந்த துவக்க ஆட்டக்காரர்கள் என்றும், மார்ஷல் உலகின்சிறந்த வேகப்பந்து வீச்சாளர் என்றும் நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள். எனவே, அவர்களைப் பற்றிக் கூறவேண்டிய அவசியமில்லை.

ரிச்சர்ட்சன் எதிர்காலத்தில் இன்னும் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆகி அணிக்கு தூண் போல் விளங்குவார் என்று நம்புகிறேன்.

பிஷப் புதிய பந்தை திறமையாகக் கையாள்வதில் மிகவும் தேர்ந்துவிட்டார்.

இந்த டெஸ்ட்தொடர் முழுவதும் எனது வழக்கமான ஆட்டத்தை இழந்து விட்டேன். கடைசி டெஸ்டில் கிடைத்த சதம் எனக்கு மிகவும்ஆறுதல் அளித்தது.

தோல்வி அடைந்தநிலையில் அணியுடன் இந்தியா திரும்பும் வெங்சாகரின்நிலையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

அவரைப்போன்ற அனுபவம்வாய்ந்த வீரரின் ஆட்டம் பார்மில் இல்லாததால்

### விவியன் றிச்சர்ட்ஸ்

இந்திய அணிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுவிட்டது. எனினும் மஞ்சரேகர், சித்து ஆகிய இருவரும் இந்தியஅணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் என்ற முத்திரையைக் குத்திக்கொண்டனர்.

இந்தியாவிலுள்ள விக்கெட்டுக்கள் இந்திய சுழல் பந்து வீச்சாளர்களுக்குஉதவுவதைப் போல் இங்குள்ள விக்கெட்டுகள் உதவவில்லை.

கிர்வானியும், வெங்கட்ரமணாவும் நல்ல அனுபவத்துடன் இந்தியா திரும்புகின்றனர். பிற்காலத்தில், இந்திய அணியின் சாம்பியன் கபில்தேவுக்கு இவர்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

இந்த டெஸ்ட் மிகுந்த ஆர்வத்துடன் விளையாடப்பட்டது.

இந்த டெஸ்ட் தொடரில் கிடைத்த வெற்றிக்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ★

# நடுவரைச் சாடும் இந்திய அணி; ஆடுகளங்களும் ஒத்துழைக்கவில்லை!

வழக்கமாகத் தோல்வியைச் சந்திக்கும் அணிகள் நடுவர்களைக் குறை சொல்வது உண்டு.

இந்திய அணியும் நடுவர்களைச் சாடியுள்ளது.

இக்குற்றச் சாட்டுக்கள் ஓரளவு உண்மையானவை என்பதை வீடியோ சாதனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இறுதி டெஸ்டில் விவியன் றிச்சர்ட்ஸ் ஆட்டமிழந்தது இதற்கு ஓர் உதாரணம்.

கபில்தேவ் வீசிய பந்துக்கு அவர் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்ததாக வெளியேற்றப்பட்டார். எனினும் பந்து மட்டையில் படாமல் வலது கால் காப்பில் பட்டு விக்கெட் காப்பாளரிடம் சென்றதை வீடியோ தெளிவாகக் காட்டியது. இதன் காரணமாக 25 நிமிட ஆட்டம் ரசிகர்களின் குழப்பத்தினால் தடைப்பட்டது.

இந்தக் கிரிக்கெட் டெஸ்ட் தொடர்பற்றிய கிரிக்கெட் பிரமுகர்கள் சிலரின் கருத்துக்களைப் பார்ப்போம்.

முன்னாள் சுழல்பந்து வீச்சாளரும் இந்திய அணியின் முகாமையாளருமான திரு. சீனிவாச வெங்கட்ராகவன்:

நடுவர்களின் தரம் சிறப்பானதாக அமையவில்லை. அவர்களின் தீர்ப்புக்கள் சில சமயம் எமக்குப் பாதகமானதாகவே அமைந்தன.

ஆடுகளங்கள் டெஸ்ட் தரத்துக்கு ஏற்றதாக அமையவில்லை. தொடரின் முடிவுக்கு இவை மட்டும் காரணங்கள் அல்ல.

எமது ஆட்டக்காரர்களின் ஆட்டமும் சிறப்பானதாக அமையவில்லை. மிகப்பெரிய பலவீனம் ஸ்ரீகாந்த் இல்லாததே. ஸ்ரீகாந்த் வேகப்பந்துகளை சிதறடிக்கக் கூடியவர். இவரில்லாதது இந்திய அணியின் துடுப்பாட்டத்தைப் பலமற்றதாக்கி விட்டது'

இந்திய அணிக் கப்டன் வெங்சாகர்:

'தொடரில் நடுவர்களின் தீர்ப்புக்கள் எமக்கு மட்டும் அன்றி எதிரணியினருக்கும் சிரமத்தைக் கொடுத்தன.

### சு. சிறிபதி

'3 ஆவது டெஸ்டில் இரண்டாவது இன்னிங்ஸில் 3 அல்லது 4 தரம் விளையாடியே ரிச்சி ரிச்சர்ட்ஸன் 99 ஆட்டங்களைப் பெற்றார்.'

★ ★ ★

இந்திய அணிக்கும், மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும் இடையே நடந்துமுடிந்துள்ள டெஸ்ட் போட்டித் தொடரில் பந்துவீச்சில் இந்திய அணியின் கபில்தேவும், மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வால்ஷும் முதலிடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் தலா 18 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர்.

இந்தத் தொடரின் சிறந்த ஆட்டக்காரராக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ரிச்சி ரிச்சர்ட்ஸன் தேர்வு பெற்றார்.

துடுப்பெடுத்தாடியதில் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் ரிச்சர்ட்ஸனும் இந்திய அணியில் சஞ்சய் மஞ்ச்ரேகரும் முதலிடம் பெறுகின்றனர்.

ஏழு இன்னிங்ஸில் விளையாடிய ரிச்சர்ட்ஸன் மொத்தம் 619 ஓட்டங்கள் சேர்த்தார். அவர் எடுத்த சராசரி ஓட்டங்கள் 88.42. இதில் இவர் இருமுறை சதமெடுத்துள்ளார்.

இந்திய அணியின் மஞ்ச்ரேகர் 6 இன்னிங்ஸில் மொத்தம் 200 ஓட்டங்கள் எடுத்தார். இவரது சராசரி ஓட்டம் 33. இவர் எடுத்த அதிகபட்ச ஓட்டம் 108.

இத்தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி 4-0 என்ற கணக்கில் வென்றது.

### உலக விளையாட்டு

முதலாவது போட்டியின் போது மழை பெய்ததால் அப்போட்டி வெற்றிதோல்வி இன்றி முடிந்தது.

கபில்தேவ் 387 ஓட்டம் கொடுத்து 18 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவரது சராசரி 21.5.

இறுதி டெஸ்ட் போட்டியின் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வால்ஷ் 268 ஓட்டங்களைக் கொடுத்து 18 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவரது சராசரி 14.88.

### பொது அறிவுப் போட்டி இல: 25

சரியான விடைகள்

1. கதவு 2. தண்ணீர் 3. விமானம் 4. வரம்பு 5. துவாரகை 6. குழந்தைகள் 7. துயரங்கள் 8. 12 ஆண்டுகள் 9. பென்குயின் 10. இங்கிலாந்து 11. சபரி 12. பட்டினத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org